திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973



ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள், திருவல்லிக்கேணி

மாலை 11] சௌமிய - வைகாசி - ஜூன் 1969 [மணி 9

தமிழ் நாடு அரசின் அறநிலைய

திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்டதும், பண்டைப் பாண்டியப் பேரரசின் முதலமைச்சராக இருந்த ஸ்ரீமாணிக்கவாசகப் பெருமானால் எடுப்பிக்கப் பெற்றதும் ஆகிய ஆளுடையார் கோயில் என்னும் திருப்பெருந்துறை ஸ்ரீஆத்மநாத சுவாமி கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணியின் துவக்கவிழா, திருவாவடுதுறை ஆதீனம் 22-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின்படி, 28-4-69 திங்கட்கிழமையன்று நடைபெற்றபோது, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா, B.A., அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

பொருளடக்கம்

1. வேலூர்க் கலம்பகம்
2. ஸ்ரீகுருஞான சம்பந்தர்
3. சிந்தனையும் தத்துவமும்
4. குடம்பையும் புள்ளும்
5. ஞானத் தொண்டர்
6. தமிழ் அமுது
7. திருக்குறள் கூறும் செல்வம்
8. மகாபாரதம்
9. மாலையில் மலர்ந்த மலர்
10. அப்பர் தமிழினைப் போல வாழி
11. செவிச் செல்வம்
12. வடநாட்டுத் தலங்களின் யாத்திரை

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- — **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.



மாலை 11] சௌமிய - வைகாசி - ஜூன், 1969 [மணி 9

வேளூர்க் கலம்பகம்

முன்னுரை: புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலைப் பற்றிய இலக்கியங்கள் பலவற்றுள், வேளூர்க் கலம்பகம் என்பதும் ஒன்று.

இதனைப் பாடியருளியவர் படிக்காசர் என்னும் புலவர் பெருமான். அவர் தொண்டை மண்டலத்தில் உள்ள களந்தை என்னும் பொன் விளைந்த களத்தூரில், செங்குந்தர் குலத்தில் தோன்றியவர். இவர்தம் இயற்பெயரும், தாய் தந்தையர் பெயரும் தெரிந்தில. தென்றமிழ் நாட்டிற் பல தலங்களுக்கும் யாத்திரை செய்த இவர், ஒருசமயம் தில்லையை அடைந்து நடராசப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் தரிசித்த பொழுது, இறையருளால் அன்றைய செலவுக்கு வேண்டிய ஐந்து பொற்காசுகளைப் பஞ்சாக்கரப் படியில் இருந்து கிடைக்கப் பெற்றார். அதனால் இவருக்குப் படிக்காசர் அல்லது படிக்காசுப்புலவர் என்னும் சிறப்புப் பெயர் வழங்குவதாயிற்று.

படிக்காசுப் புலவர்: இவர் 'இலக்கண விளக்கம்' இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர்பால் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். தருமபுர ஆதீனத்தை அடைந்து, அங்கு ஒன்பதாம் பட்டத்துக் குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இடத்தில் துறவு நிலை பெற்றார். அவர்தம் அருளாணையின்படி புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலிற் கட்டளை விசாரணையை மேற்கொண்டார். அதனால் இவர் 'படிக்காசுத் தம்பிரான்' எனவும் வழங்கப் பெறுவர். புள்ளிருக்கு வேளூரிற் கட்டளை விசாரணைத் தம்பிரானாக இருந்தபோதுதான் வேளூர்க் கலம்பகம் படிக்காசரால் பாடப் பெற்றது.

வல்லமாநகர்க் காளத்தி வள்ளல், சிவந்தெழுந்த பல்லவரையர் (கி. பி. 1681—1686) மாதைத் திருவேங்கட நாதர், அரியலூர் மழவரங்க பூபதி, கவசை மசக்காளி மன்றுடியார், மாவண்டூர்க் கறுப்ப முதலியார், கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதி (1674-1710), திருமலைநாயக்கர் (1623-1659) சீதக்காதி வள்ளல் (1693) முதலிய பெருமக்கள் பலர் படிக்காசரைப் போற்றி ஆதரித்துச் சிறப்பித்துள்ளனர். இவர் பாடியருளிய நூல்களுள்

தொண்டை மண்டல சதகமும்வேளூர்க் கலம்பகமும் மிகவும் புகழ் ஓங்கியவை யாகும். "பண்பாகப் பகர்சந்தம் படிக்காசர் அலால் ஒருவர் பகரொண்ணுதே" என்பது தனிப்பாடல். அதனுல் இவர்தம் சிறப்பை யுணரலாம்.

கலம்பகம்: கலம்பகம் என்பது, தமிழில் வழங்கிவரும் 96 வகைப் பனுவல்களுள் ஒன்று. கதம்பம் எனப்படும் பலவகை மலர்களைக் கொண்டு தொடுக்கப்பெறும் பூமாலை போல, வெவ்வேறுன பலவகைப் பாவும் பாவினமும் ஆக அமைந்த பாடல்களைக்கொண்டு தொகுக்கப்பெறும் பாமாலை, கலம்பகம் என வழங்கும். புயவகுப்பு பாதவகுப்பு அம்மானை மதங்கு காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களி சித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் 18 உறுப்புக்கள், இதன்கண் அமைந்து வரும். ஆதலின் இதற்குக் கலம்பகம் எனப் பெயராயிற்று எனவும் பிறவாறும் கூறுவர். (கலம்-பன்னிரண்டு, பகம்-ஆறு).

கலம்பகம் என்னும் நூல்வகையில், ஒரு போகும் வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும், முதற்கவி யுறுப்பாக வரும். அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை கலிநிலைத்துறை வெண்டுறை முதலிய பாவினங்களால், இடையிடையே வெண்பாவும் கலித்துறையும் விரவிவர, மடக்குடைச்செய்யுளும், வண்ணம் சந்தம் முதலியனவும் பொருந்த, அந்தாதித் தொடையால் இறுதியும் முதலும் மண்டலித்து நிற்கும். இந்நூலுக்குரிய இலக்கணத்தினைப் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை முதலிய நூல்களால் அறியலாம்.

தலக் குறிப்புகள்: சம்பாதி சடாயு என்னும் பறவைகளும், இருக்கு வேதமும், முருகப் பெருமானும் பூசித்ததனுல், வைத்தீசுவரன் கோயிலுக்குப் புள்+இருக்கு + வேள் + ஊர் எனப்பெயர் அமைந்தது. இங்குள்ள கோயில், இறைவனின் பெருங்கருணையேஓர் உருவமாக அமைந்தது போல விளங்குகிறது. அம்பிகை தெற்கு நோக்கியும், பெருமான் மேற்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளனர். வேளூரில் உள்ள விநாயகரின் பெயர் கற்பக விநாயகர். ஆதலின்,

"புள்ளிருக்கு வேளூர் மேய
கற்பகத்தைக் கைதொழுது
கலம்பகத்தை இலம்பகமாய்க்
கழறி னேனே"

எனக் கற்பகவிநாயகரைக் கைதொழுது கொண்டு, கலம்பகத்தை இலம்பகமாகப் பாடிச் செல்லுகின்ருர் படிக்காசர்.

இக்கலம்பகத்தின்கண், புள்ளிருக்கு வேளூர் பற்றிய பலதிறச் செய்திகளையும் ஆங்காங்கே சுவைமிகவும் அழகுறவும் அமைத்து விளக்கிப் பாடியருள்கின்ருர் படிக்காசுப் புலவர். இங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான், "மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீராநோய் தீர்த்தருள வல்லவர்" ஆதலின் வைத்தியநாதர் எனவும்; தீராவினை தீர்த்தபெருமான் எனவும் சிறப்பித்து ஓதப் பெறுவர். அம்பிகைக்குத் 'தையல் நாயகி' என்பது பெயர். 'தையலாள் ஒரு பாகம்' என்பது சம்பந்தர் தேவாரம். கோயிலின் உள்ளே தெற்குப் பக்கத்தில் உள்ள தீர்த்தம் 'சித்தாமிர்தம்' என்னும் பெயருடையது. இங்குள்ள முருகப் பெருமான் முத்தையன் என்றும், செல்வமுத்துக்குமாரசுவாமி என்றும் வழங்கப்பெறுவார்.

வழிபடும் முறை: புள்ளிருக்கு வேளூர் ஆகிய வைத்தீசுவரன் கோயிலுக்குச் செல்லுபவர்கள், சித்தாமிர்த தீர்த்தத்தில் நீராட வேண்டும். அவ்வூரின் ஆவணவீதியை மூன்றுமுறை வலம்வருதல் வேண்டும்; கற்பக விநாயகரையும் முத்தையன் என்னும் முருகப் பெருமானையும் தையல்நாயகி அம்மையையும் வைத்தியநாதப் மெருமானையும் முறையே வணங்குதல் வேண்டும். அங்கு அளிக்கப் படும் நேத்திரஉருண்டை என்னும் மண் மருந்தை அருந்துதல் வேண்டும். அங்ஙனம் செய்யின், வைத்தியநாதப் பெருமான் நமது வினைகளையும் நோய்களையும் பிறப்பினையும் ஒருங்கே அறுத்து ஒழித்தருள்வான்.

கள்ளூர் கழனிப் புள்ளூர் அடைந்தும்,
தென்புலத் தமர்ந்த நன்புனல் ஆடியும்
ஆவண வீதியை மூவலம் வந்தும்
தள்ளையை அறுமுகப் பிள்ளையை
வணங்கியும்
விண்மருந்து உதிக்கும் மண்மருந்து
அருந்தியும்
குருவடி வாயநின் திருவடி அடைந்தேன்;
நாயினை இதுவும்ஓர் பேய்என இகழாது
சிறப்புறத் தமியேன் பிறப்பறுத் தருளாய்;
ஆரா அமுதே! அடியர் தம்
தீரா வல்வினை தீர்த்தஎம் பரனே (1)

தலச் சிறப்பு : புள்ளிருக்கு வேளூரிற் சிவ பெருமான் தையல்நாயகி அம்மையுடனும் செல்வமுத்துக்குமார சுவாமியுடனும் எழுந்தருளித் தேவருக்கும் மூவருக்கும் யாவருக்கும் வேண்டும் வரங்களை யெல்லாம் தருகின்றார். முப்பத்து முக்கோடி தேவர்களும் அங்கு வந்து, வைத்தியநாதப் பெருமானை வணங்கி யுய்கின்றனர். அங்கேயுள்ள 'சித்தாமிர்தம்' என்னும் தீர்த்தத்தின் சிறப்பு எல்லையற்றது. அதன்கண் நீராடியவர்கள் தெறித்த நீர்த் திவலைகள் பட்ட மாத்திரத்திலேயே, தீராத நோய்களெல்லாம் தீரும்; போகாத பேய்களும் ஓடும்.

> "முத்தான பிள்ளையும் தேவியும்
> தானுமாய்
> மூவர்க்கும் வரம் அருளியே
> முப்பத்து முக்கோடி தேவரும்
> தெண்டனிடும்
> மூர்த்தி புள்ளிருக்கு வேளூர்ச்
> சித்தாமிர்தக் குளத் தீர்த்தநீர் ஆடினோர்
> திவலைகள் தெறித்த உடனே
> தீராத நோயையும் போகாத பேயையும்
> தேடிப் பிடிப்பிப்பனே"

புள்ளிருக்கு வேளூரின் புனிதமும் சிறப்பும் புகலுதற்கு அரியது. அதனைக் கண்டு தொழுபவர்கள்முத்தர்கள்ஆவர்; உலகத்தில்எத்தனை சுகங்கள் உண்டோ அத்தனை சுகங்களையும் ஒருங்கே அடைந்து சுகமாக வாழ்ந்திருப்பர். அவர்களுக்குத் தேவலோகம் முதலியன ஒரு பொருட்டல்ல. வேளூர்ப் பெருமானின் திருவடிகளைச் சேவித்தவர்களின் முகத்தில் விழித்தாலே போதும். யாவரும் சீவன்முத்தர் ஆகி விடுவர். அப்புனிதப் பெருந்தலத்தில் இழிந்த ஈ எறும்பாகவோ, நாய் நரியாகவோ பிறந்தாலும் நலமே விளையும்;

> "புள்ளூரைத் தொழும் முத்தர் கண்ணார்
> சுகம் அத்தனையும் பெற்றுவாழ்ந் திருந்து
> சுகிப்பவரே"

> "செகத்திலே புகழ்படைத்த வேளூரர்
> திருப்பாதம் சேவித் தோர்கள்
> முகத்திலே, விழித்தாலும் போதும் ஐயா
> அவர் சீவன்முத்தர் தாமே"

புள்ளிருக்கு வேளூரரின் பெருமை அளப்பரியது. அங்கே இறைவன் அடியவர்கள் வேண்டும் வரங்களை யெல்லாம் வாரிவாரி வழங்குகின்றான். ஆதலின், தாம்தாம் வேண்டும் வரங்களையும் நலன்களையும் பெறுவதற்காக, அங்கே அடியவர்கள் இடையறாமல், திரள்திரளாக வந்துவந்து வழிபட்டுச் செல்வர். அவர்களின் செயலையும் இயலையும் பின்வருமாறு வேளூர்க் கலம்பகம் விளக்குகின்றது.

> "நடப்பர்சிலர்; வேளூரர் சந்நிதிக்கே
> சேர்வர் சிலர்,
> நண்ணி நீட்டிக்
> கிடப்பர்சிலர், நல்வரங்கள் கேட்பர் சிலர்;
> கேட்டவரம்
> கிட்டி அவ்வூர்
> கடப்பர்சிலர்; தலமகிமை கற்பர்சிலர்;
> நிற்பர்சிலர்;
> கண்டு சேவித்
> திடப்பயணத்து இளைப்பர்சிலர்; கண்டுசிலர்
> அதிசயப்பட்டு இருப்பர் தாமே"

வழிபட்டோர் : இத்தகைய சிறப்பு வாய்ந்த வேளூரில் முருகன் பார்வதி திருமால் பிரமன் கலைமகள் திருமகள் நிலமகள் வேதம் சூரியன் அங்காரகன் சம்பாதி சடாயு இந்திரன் வருணன் இயமன் நிருதி சந்திரன் முதலிய பலரும் சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றனர். காவிரிக்கு வடகரையில் சீர்காழிக்குத் தென்மேற்கே நிருதி திசையில் இத்தலம் உள்ளது. இதற்கு அங்காரகபுரம் அம்பிகாநகரம் பானுபுரம் முதலிய பெயர்களும் வழங்கும். இங்கே சித்தாமிர்தம் முதலிய ஏழு தீர்த்தங்களும் சடாயுகுண்டம் பரமகுண்டம் என்னும் இரு குண்டங்களும் உள்ளன. இவ்விவரங்களையெல்லாம் 47ஆம் பாடல் நன்கினிது விளக்குகின்றது.

எண் அலங்காரம் : வேளூரில் உள்ள இறைவனின் வியத்தகு பெருமையினை, ஒன்றுமுதல் பத்துவரையுள்ள எண்ணலங்காரம் அமையும் படி, அழகுறப் பாடுகின்றார் படிக்காசர். வேளூர்ப் பெருமான் தங்கியுள்ளது கயிலைமலை ஆகிய ஒன்று. சூரியனும் சந்திரனும் ஆகிய இரண்டு சுடர்களும், தீயும்அவனுக்கு மூன்று கண்களாக விளங்குகின்றன. அவனைத் துதிப்பன இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் வேதங்கள் நான்கு. அவனுக்குரிய மந்திரம் ஐந்தெழுத்து. அவனது புதல்வன் ஆறு முகங்கள் உடையவன். குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன, அவர் பாடும்ஏழு சுரங்கள்; அவனுக்குத் தோள்கள் எட்டு; பிரமன் திருமால் உருத்திரன் மகேசன் சதாசிவன் நாதம் விந்து சத்தி சிவம் என்னும் ஒன்பது வடிவங்களை யுடையவன் அவன்; அவனால் மெல்லெனமிதித்து நசுக்கப் பெற்றன, இராவணனின் பத்துத் தலைகள்.

> புயலார் வரைஒன்று; இருசுடர்
> தீயிற் பொருந்துகண் மூன்று;
> அயலார் துதிக்கும் மறைநான்கு;
> எழுத்தஞ்சு; அறுமுகன்சேய்;

இயலார் ஏழுசுரம்; எண் தோள்;
வடிவங்கள் என்பது ஒன்பான்,
செயலால் அழித்தனர்வேளூரர்
வீரன் சிரங்கள்பத்தே.

மந்திரமும் மருந்தும் : இத்தகைய வேளூர்ப் பெருமான், "வினை தீர்த்த தேவர்" என்னும் தமது பெயரே மந்திரமாகவும், திருச்சாந்து உருண்டையும் சித்தாமிர்தத் தீர்த்த நீருமே மருந்தாகவும் அமைய, மருந்துப்பைதாங்கி வைத்தியநாதர் என்னும் பெயருடன், தம்மை வழிபடும் அடியவர்களின் தீராத நோய்களை யெல்லாம் தீர்த்து வருகின்றார்.

வார்த்தைவேறு இன்றிவினை தீர்த்ததேவு
எனும்பெயரே மந்திரம் ஆகப்
பார்த்தபேர் மகிழ்திருச்சாந்
துண்டைமருந்தாய்
மருந்துப் பையும் தாங்கிக்
கூர்த்தவேற் குகன்தாதை வைத்தியநா
யகர்; தமது குளத்தில் உள்ள
தீர்த்தமே மருந்தாகத் தீராத
நோய்களெலாம் தீர்க்கின் றாரே

வைத்தியநாதர் : வேளூரில் வைத்திய நாதப் பெருமான் உடற்பிணியை மட்டுமே தீர்ப்பவர் அல்லர். பசிப்பிணியும், உயிர்ப்பிணியும், பிறவிப்பிணியும் ஆகிய பலவகைப் பிணிகளையும் தீர்த்தருள்கின்றார் அவர். அதனால், இரப்பவர்கள் மட்டுமேயன்றிப் புரப்பவர் ஆகிய பெருஞ்செல்வருங்கூட, அவர்தம் திருவருளை நினைந்து தொழுது நிற்பர்.

"துரப்பவரும் தீப்பிணியைத்
தொலைப்பவரென்
றெடுத்திவரைத் துதிக்க வேண்டா;
உரப்பவரும் பசிப்பிணியைத்
தவிர்ப்பவரும்
அவரல்லால் ஒருவர் உண்டோ?
புரப்பவரும் அல்லாமற் பொக்கணமும்
கையுமாய்ப் புகுந்து பிச்சை
இரப்பவரும் வினைதீர்ப்பார்
திருவுளம்உண்
டாகஎன இருப்பர் தாமே" (25)

கேட்டவரம் தருவர் : வேளூர்ப் பெருமான் தமது அடியவர்கள் வேண்டும் வரங்களையெல்லாம் மறுமல் விரைந்து வழங்கும் இயல்பு உடையவன். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் வித்தகன் அவன்! ஆயினும் தம் அடியார்கள் வேண்டும் ஒரு வரத்தினை மட்டும், அவன் தருவதே இல்லை. வேளூர்க்குச் சென்று, அங்குள்ள முத்தையனையும், தையல்நாயகியம்மையையும், வைத்தியநாதப் பெருமானையும் தரிசித்து மகிழ்பவர்கள் மேலும்மேலும் தமக்கு இத்தகைய தலதரிசனமும் வாழ்க்கையும் வேண்டி விரும்பிநிற்பர்; நின்னை இங்கு வந்து வணங்குவதற்கு இன்னும் ஒரு பிறப்பு அளித்தருள்க என்று வரம்வேண்டி மன்றாடிப் பணிவர். ஆனால் எல்லாமும் தரும் பெருமான், அவ்வரம் ஒன்றினை மட்டும் தருவதில்லை. ஏனெனில் வேளூரைத் தரிசித்து வழிபடுபவர்களுக்குப் பிறவிப்பிணி அறவே நீங்கி விடும் என்பது திண்ணம் அன்றோ? ஆதலின் என்பது.

கன்னல்மொழிப் பேதையொடும்
பிள்ளையொடும்
தமியடியேன் கண்டு போற்ற
இன்னம்ஒரு பிறப்பெனக்கு
வேண்டும்எனில்,
வரம்இதனை ஈய மாட்டார்;
தன்னம்அறத் தவம்புரிந்தும்; வேளூரில்
வினைதீர்த்த தம்பி ரானூர்
கின்னமறக் கேட்டவரம் தருவர்எனும்
கீர்த்திஎன்ன கீர்த்தி தானே! (50)

வழிபட்ட திறம் : வேளூர்க்குச் சென்று பெருமானைத் தரிசித்து, அகப்புறக் கருவிகள் அனைத்தாலும் ஆரத் துய்த்து வழிபட்ட திறத்தினைப் படிக்காசர் பின்வருமாறு பாநயம் பொலியப்பாடுகின்றார். "வேளூர்ப் பெருமானே! உன்னைக் கண்டு உச்சியிற் கை கூப்பி வணங்கினேன். நினது கொன்றை மலரின் நறுமணம் என் மூக்குக்கு இன்பம் அளித்தது. நாக்குக்கு நின் திருவைந்தெழுத்து சுவை நல்கியது; நினது சந்நிதியின் சிறப்பனைத்தும் என் கண்களுக்கு விருந்தாயின; மெய்ம்முழுதும் நினது திருச்சாந்து உருண்டை மண்ணைப் பூசி மகிழ்ந்தேன்; என் உள்ளத்தில் நின் திருவடிச் சுவடுகளை அழுத்தமுறப் பதியுமாறு பொறித்துக் கொண்டேன்.

ஊசலிடும் மனத்தடியேன் வேளூர் ஐயா!
உச்சியினிற் கரங்கூப்பி வைத்தேன்; உற்ற
நாசியினில் அணிஇதழி நாற்றம்
கொண்டேன்:
நாவினிலும் அஞ்செழுத்தை நாட்டி
வைத்தேன்;
காசினிநின் சந்நிதியிற் சிறப்பை எல்லாம்
கண்களுக்கே விருந்திட்டேன்: காயம்
எங்கும்
பூசுதிருச் சாந்துருண்டை மண்ணைப் பூசிப்
புந்தியில்நின் அடிச்சுவடு பொறித்திட்
டேனே (79)

பிட்சாடன வடிவம் : வேளூர்க்குச் சென்று வினைதீர்த்த பெருமானை வழிபடுபவர்கள், எல்லா நலமும் பெற்றுச் சிறப்புறுவார்கள். முன்பிறப்பில் அங்குச் சென்று வழிபடாதோரும், ஏழைகட்கு அறம்செய்யாதோருமே, இப்பிறப்பில் இரவலராக வீடுதோறும் பிச்சை எடுத்துத் திரிவார்கள். பிறப்பில்லாதவனும், வேண்டும் வரங்கள் அனைத்தும் தருபவனும், வேளூரில் வாழ்பவனும் ஆகிய நீ, கடிஞை என்னும் பிச்சைப் பாத்திரம் ஏந்திப் பிட்சாடன வடிவம் கொண்டு, ஐயம் ஏற்று உண்பதற்கு யாது காரணம்?

வையகம் அதனிற் பிறந்துளார், ஈகை
மறந்துளார் எனின், மறு பிறப்பிற்
கையகம் தனில்ஓர் கடிஞையும் ஏந்திக்
கடைதொறும் பலியிரந்து உழல்வார்;
வெய்யதோர் பிறப்பும் உனக்கிலை;
இரந்துண்
வினைப்பயன் எவ்விதத் தது! நீ
ஐயம்ஏற் றுண்ட'தென்கொலோ? வேளூர்
அப்பனே! ஒப்பிலா தவனே? (81)

"பெருமானே! உனக்குச் சமானம் ஆனவர் ஒருவரும் இல்லை. உன்னை உலகில் உள்ள எல்லோரும் பணிகின்றனர். மேருமலை ஆகிய பொன்மலை உனக்கேயுரியது. தையல்நாயகி நினக்கு மனைவியாக வாய்த்துள்ளாள். அறிவறிந்தசிறந்தபுதல்வனாக, முத்தையன்நினக்கு அமைந்து விளங்குகின்றான். இவ்வளவு நலங்களும் பெற்றுள்ள நீ புலித்தோல் உடுத்தும், சாம்பர்பூசியும், சடை முடி தரித்தும், கையிற் கப்பரை தாங்கியும், வெண்தலைமாலை அணிந்தும், இரந்து பிச்சை யெடுத்துத் திரிவது எற்றிற்கு? கண்ணேறு கழிப்பதன் பொருட்டோ, நீ இக்கோலம் கொண்டு திரிகின்றாய்?

ஒப்பொருவர் இலை, உனக்கோர் துணையும்
இல்லை;
உலகமெலாம் உனைப்பணியும்; ஒளிபொன்
மேரு
அப்பெரிய மலை இருக்கத், தையல் அம்மை
அருகிருக்க, முத்தையனும் ஆங்கே வைகச்,
செப்பரிய புலித்தோ லும் திருவெண் நீறும்
செஞ்சடைமேற் படஅரவும் செங்கை
மீதோர்
கப்பரையும் வெண்தலையும் பெறல்,கண்
ணேறு
கழிக்கவென்றோ? வேளூர்எம் கடவு ளானே

மண்மருந்து : வேளூரில் வைத்தியநாதப் பெருமானின் மருந்தாகத் தரப்பெறும் திருச்சாந்துருண்டை மண்ணை, அன்பர்கள் அனைவரும் அறிவர். அஃது அன்பும் நம்பிக்கையும் உடையவர்களுக்கு எல்லா நோய்களையும் தீர்க்கின்ற செய்தியினை, மிகவும் சுவை அமைய வேடிக்கையாகப் பாடுகின்றார் படிக்காசர். வேளூரில் ஒருசிறிய மண்ணுருண்டையேமருந்தாக அமைந்து எல்லா நோய்களையும் பிறவியையும் தீர்க்கின்றதே. மக்களெல்லாரும் இதனைக்கண்ணாரக் கண்டுள்ளனரே! திருமால் இம்மண்ணுலகத்தை யெல்லாம் எதற்காக வீணேயுண்டார்? வேளூரிற் பிரமகுண்டத்துள்ள ஒருசிறு மண்ணுருண்டையே அவர்தம் பத்துப் பிறவிகளையும் ஒருங்கே தீர்த்திருக்குமே!

"ஆருண்டார் எனினுமவர் அண்டராய்ப்
பிறப்பேழும் அகற்றா நின்றார்;
காருண்ட திருமேனிக் கண்ணனார்
கண்ணாரக் கண்டி லாரோ?
பாருண்ட மண்ணையெல்லாம்ஏனுண்டார்?
வேளூர்எம் பரம குண்டத்து
ஒருண்டை மண்ணையுண்டால் ஐயிரண்டு
பிறப்பும் அவர்க்கு ஒழிக்கல் ஆமே"

அம்மானை : அம்மானை என்பது, கலம்பகத்தின் உறுப்புகளுள் ஒன்று. முதலில் ஒரு பெண் ஒரு செய்தியைச் சொல்ல, அதுகேட்ட மற்றொரு பெண் ஒரு வினாவை எழுப்ப, அதற்கு முதலாமவள் நயமான விடைபகரும்முறையில், ஐந்து அடிகளால் கலித்தாழிசையால் மடக்கு என்னும் சொல்லணி பொருந்தப் பாடுவது அம்மானை எனப்படும். புள்ளிருக்கு வேளூர்ப் புனிதர் பெற்றெடுத்த முத்தையன் என்னும் பிள்ளைக்கு இந்திரன் பெண்கொடுத்தான் என்றாள் ஒருத்தி. இந்திரன் பெண் கொடுத்திருந்தால், வள்ளி என்னும் மற்றொரு பெண்ணை அம் முத்தையன் மணந்து கொண்டது எவ்வாறு பொருந்தும் என்று வினா எழுப்பினாள் மற்றொருத்தி. வள்ளியம்மை அம்மான் (தாய் மாமனின்; அந்த மானின்; அந்தத் திருமாலின்) மகள் அன்றோ? அதனால் மணந்தது பொருத்தமேயாகும் என்றாள் வேறு ஒருத்தி.

"புள்ளிருக்கு வேளூர்ப்
புனிதனார் தந்துமுத்துப்
பிள்ளைதனக்கு இந்திரனார்
பெண்கொடுத்தார் அம்மானை:
பிள்ளைதனக்கு இந்திரனார்

பெண்கொடுத்தார் ஆமாகில்
வள்ளிதனைக் கொள்ள
வழக்குண்டோ அம்மானை:
வள்ளியம்மை அம்மான்
மகள் அலளோ அம்மானை''

வண்டுவிடுதூது: வண்டு விடுதூது என்பது கலம்பக உறுப்புகளில் ஒன்று. வண்டுக்குத் தேன் என்பது ஒருபெயர். ஆதலின், வண்டுவிடு தூது உறுப்பு அமைந்த பாடலில், 'தேனே' 'தேனே' என்னும் சொல்லும் ஒலியும் பல கால் திரும்பத் திரும்ப அமைந்து வருமாறு, கவிஞர் கவின்மிகத் திறம்படப் பாடுகின்றார். "கரிய தேனே! நான் உனக்குத் தினமும் செந்தேனே தந்தேனே. நான் இன்னமும் சிறிது உணவும் அருந்தவில்லையே. உறக்கத்தால் என் விழிகள் பொருந்திலவே. நீ சென்று தூதுரைத்து, வேளூர்ப் பெருமானின் கொன்றை மாலையைக் கொண்டுவந்து தந்தால், நான் வருந்த மாட்டேன். உன்னையே வழிபார்த்துக் கொண்டிருந்தேன். அதுமட்டுமோ; உன்னை எதிர்கொண்டு இரண்டுகாத தூரமும் வந்தேன்.

"தருந்தேனே அனையமொழித்
தையல்பங்கர்
வேளூரர் தண்டார் வேட்டுக்
கருந்தேனே! தினம் உனக்குச் செந்தேனே
தந்தேனே! கறிசோறு இன்னம்
அருந்தேனே! இணைவிழிகள்
பொருந்தேனே
கொன்றையந்தார் அளித்தால் ஆவி
வருந்தேனே! உடன் வழிபார்த்
திருந்தேனே!
இருகாத வழிவந் தேனே''

முடிவுரை: இத்தகைய சிறந்த இனிய பாடல்கள் பலவற்றைக் கொண்டது வேளூர்க் கலம்பகம். அவற்றின் சொல்நயமும் பொருள் நயமும், ஒலிநயமும், தொடைநயமும் அணி நயமும், ஆராயுந்தோறும் அறிஞர்க்குப் பெரு விருந்தாகும். வேளூர்க் கலம்பகத்தை ஓதியுணர்ந்து வேளூர்ப் பெருமானை வழிபட்டு நம்மனோர் எல்லா நலமும் பெறுவோமாக!

—ஆசிரியர்.

கருவூர்த் தான்தோன்றிமலை ஸ்ரீ கல்யாண வேங்கடரமண சுவாமி கோயில், திருக்கல்யாண மண்டபத் திறப்பு விழாவிற் கலந்துகொண்ட பெருமக்கள்.

ஸ்ரீ குருஞான சம்பந்தர்

முன்னுரை :

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே, நிகழ்ச்சி அவர்கட் டாகலான" என்பது தொல் காப்பியம். அதன்படி, இவ்வுலகமானது ஞானிகளும் அருளாளர்களும் ஆகிய உயர்ந்த சான்ரேர்களின் வழிநின்றே இயங்கி வரு கின்றது.

ஆற்றல் மிகுந்த ஒருவன், கொடிய புலி சிங் கம் யானை முதலிய விலங்குகளையெல்லாம் அடக்கி, அவற்றைத் தன் விருப்பத்தின்படி ஆட்டி வைத்தலை நாம் கண்டறிவோம். அறி வாற்றலிலும், மனத்திண்மையிலும் சிறந்த தலைவர்கள் பலர், பல்லாயிரக்கணக்கான மக் களைத் தம்முடைய கருத்துக்களுக்கு இணங் கித் தம்முடைய கட்டளைகட்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்து வருதலையும், நாம் கண்டு வருகின்ரேம்.

இங்ஙனமே, தவ ஆற்றலிலும் அருளாற்ற லிலும் தலை சிறந்து விளங்கும் ஞானச் செல் வர்களாகிய சான்ரேர்கள், தமக்குள்ள பேராற்றலால் இவ்வுலகினையும், அதன்கண் வாழ்ந்து வரும் மக்களையும் இயக்கி நடத்தி உய்வித்து வருகின்ருர்கள்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும், ஆழ் வார்களும் நாயன்மார்களும், எத்தனையோ பல நூற்ருண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்தவர் களாயினும், அவர்களுடைய கருத்தும் கொள்கையும் ஆற்றலும், இன்றும் நம்மனே ரைத் தம்வயப்படுத்தி இயக்கி நடத்தி வரு கின்றன. சிறந்த ஞானச் செல்வர்களால் ஒரு நாட்டிற்கும் மக்களுக்கும் உண்டாகிப் பெருகிவரும் நலங்களுக்கு அளவேயில்லை.

வரலாறு :

இத்தகைய இனிய ஞானச் செல்வர்களுள் ஒருவராக, நம் தமிழகத்தில் பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில்-கார்காத்த வேளாளர் குலத்தில், சுப்பிரமணிய பிள்ளைஎன்னும் தந் தைக்கும் ,மீனுட்சியம்மை என்னும் தாயாருக் கும்மைந்தராகத்தோன்றியருளியவரே,ஸ்ரீ குரு ஞான சம்பந்தர் என்னும் சிவநெறிச் சான் ரேர் ஆவார் !

குருஞான சம்பந்தர் இளமையிலேயே உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றுணர்ந்தார்; அதன் பயனுக, அவற்றில் 'தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன்கழலிற் செறிவே' என்று தெளிந்து தேறி நின்ருர். தம்தாய் தந்தையருடன் மதுரைச் சொக்க நாதப் பெருமானை வழிபடச் சென்ற அவர்க்கு, அப்பெருமானின் திருவருள் குறைவிலா நிறைவாய்க் கைகூடியது.

இளமையிலேயே துறவுநெறியுணர்வும் சிவ பூசையில் ஈடுபாடும் 'முன்புசெய்தவத்தின்ஈட் டம்' என்னும் முறையில் நிரம்பப் பெற்றிருந்த இவர்க்கு, ஆலவாய்ப் பெருமான் அருளால் பொற்ருமரைக் குளத்தில் சிவலிங்கத் திரு மேனி ஒன்று கிடைத்தது ; அதனை முறையே பூசித்து வழிபட விரும்பினுர். அதற்குக் குரு முதல்வர் ஒருவரின் திருவருளைப் பெற வேண் டுமே எனப் பெரிதும் அவாவி நின்ருர். தட்சிணுமூர்த்திப் பெருமான் திருமுன்னிலை யில், அவரால் ஞானதீக்கை புரியப் பெற்றுக் கொண்டு சிறந்து நின்ருர்.

இவர்தான், நம் தமிழ்நாட்டுத் திருமடங் களுள் ஒன்ருகத் தலைசிறந்து விளங்கிவரும் தருமபுர ஆதீனம் என்னும் திருமடத்தினைத் தோற்றுவித்தருளிய முதற் பெருங்குரவர் ஆவர்!

ஞான சம்பந்தரைப் போன்று, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் செய்து சைவ சித்தாந்தச் செந்நெறியைத் தகவுற வளர்த் துப் போற்றும் சிவஞானச் செல்வராகவும், ஒப்புயர்வற்ற பெரும் சமயத் தலைவராகவும், இவர் எதிர்காலத்தில் இறையருள் ஒளி பரப்பி இனிது திகழ்வார் என்பதனை முன்னுணர்ந்தோ

என்னவோ, இவருக்குத் தாய் தந்தையர்கள் இளமையில் ஞானசம்பந்தர் எனப் பெயரிட்டு வழங்கினர்.

திருஞான சம்பந்தர் போலத் தோன்றி, அவரைப் போன்று தமிழையும் சைவசித்தாந்தத்தையும் வளர்த்துப் பரப்பும் குருவாக விளங்கியதனுல், இவரைத் தமிழ்கூறும் சைவநல்லுலகம், குருஞான சம்பந்தர் எனக்குறிப்பிட்டுத் துதித்துப் போற்றி வருகின்றது.

ஸ்ரீகமலை ஞானப் பிரகாசர், இவர்தம் அதி தீவிர பக்குவ நிலைகளைக் கண்டு வியந்து களித்து, "நின்னுற் பல்லாயிரக் கணக்கான மக்கள் இறைவன் திருவருளுக்கு உரியவராய் ஈடேறப் பெறவேண்டியிருக்கிறது. ஆதலின் நீ சித்திக்ஷேத்திரம் ஆகிய தருமபுரம் அடைந்து, அங்கு ஒரு திருமடத்தினை நிறுவி அடியார்கள் பலரை ஆட்கொண்டு உய்வித்துத் தமிழும் சைவமும் தழைத்தோங்கச் செய்க" என்று பணித்தருளினர்.

அங்ஙனமே இவர் தருமபுரம் அடைந்து, திருமடம் அமைத்து, ஆனந்த பரவசர், சச்சிதானந்தர், மருதூர் ஆபதுத்தாரணர் முதலிய பல மாணவ அடியார்களை ஆட்கொண்டு குரு முதல்வராகவிளங்கி,இவ்வுலகம் குருஞான சம்பந்தர் எனக் குலவிப் போற்றச் சைவச் செந்நெறி பரப்பி, ஒரு வைகாசி மாதம், அபரபக்கம் சப்தமி நாளில் சிவ சமாதி கூடியருளினர்கள். அவ்விடமே ஸ்ரீஞானபுரீசுவரர் ஆலயம் எனத் தருமையம்பதியிற் பெருமையுடன் பிறங்கி வருகின்றது.

ஸ்ரீகமலை ஞானப்பிரகாசர் மழுவாடிப் புராணம் பாடியது, சாலிவாகன சகாப்தம் 1488-ஆண்டு என்று, அந்நூற் செய்யுள் ஒன்ருல் அறியப்படுதலின், ஸ்ரீகுருஞான சம்பந்தரின் காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 400 ஆண்டுகள் ஆகும் என்று கொள்ளலாம்.

ஸ்ரீகுருஞானசம்பந்தர், (1) சிவபோகசாரம் (2) சொக்கநாத வெண்பா (3) முத்தி நிச்சயம் (4) திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் (5) சோடசகலாப் பிராசாத சட்கம் (6) சொக்கநாதக் கலித்துறை (7) ஞானப்பிரகாச மாலை (8) நவரத்நமாலை என்னும் எட்டுச் சாத்திர நூல்களை அருளிச் செய்திருக்கின்ருர்கள்.

செல்வக் களஞ்சியம் "பண்டாரம்" எனப் படுமாதலின், சிவஞானச் செல்வக் களஞ்சியங்கள் எனத் தக்க நிலையில் திகழும் இவ்வெட்டுச் சாத்திரங்களும், "பண்டார சாத்திரம்" எனச் சிறப்பித்து வழங்கப்பெறும்.

இவற்றுள், "சிவபோக சாரம்" என்னும் சிறந்த நூலின் சுவை நிறைந்த பாடல்கள் சிலவற்றை மட்டும் ஈண்டுக் கண்டு அமைவோம்:—

(1) எவ்வளவு நூல்களைத்தான் கற்றிருந்தாலும், எத்தனை சித்திகளைத்தான் பெற்றிருந்தாலும், குருவின் அருள்வழியே நிற்க மாட்டாதவர்களுக்கு, மனம் தினமும் அலைந்து கலங்கித் துன்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

ஒருகோடி ஆகமங்கள் எல்லாம்
உணர்ந்தும்,
பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும்,—
குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத
மாந்தர்க்குச்
சித்தசல னம்ஆம் தினம்.

(2) நெஞ்சமே! நீ மனிதர்களை நல்லவர்கள் என்றும் கெட்டவர்கள் என்றும்ஏன் பாகுபாடு செய்கின்ருய்? அவரவர்கள் செய்த வினைகளுக்கு ஏற்ப, இன்ப துன்பங்கள் ஆகிய பயன்களை, அவரவர்களுக்குரிய மனிதர்களைக் கொண்டு, அனுபவிக்கும்படி, இறைவனின் அருள்தான் செய்விக்கின்றது. ஆதலால் எல்லாவற்றையும் சிவன் செயல் என்றே எண்ணுக.

அவரவருக் குள்ளபடி ஈசன்அரு ளாலே
அவரவரைக் கொண்டியற்று மானல்,—
அவரவரை
நல்லார்பொல் லார்என்று நாடுவதென்
நெஞ்சமே !
எல்லாம் சிவன்செயல்என்று எண்.

(3) நாம் பெரியோம் என்னும் எண்ணம் கொள்ளாது பணிவோடு இருப்பவர்கள் தாம் பெரியவர்கள் ஆவர் என்று நூல்கள் கூறுகின்றன. அங்ஙனம் இன்றித் தம்மைத் தாமே நாம் பெரியர் என்று எண்ணிக் கொண்டு செருக்குறுபவர்களே, சிறியவர்கள்; இத்தகைய அற்பச் சிறியவர்களைத் தவிர, உலகில் துன்பம் ஆகிய சுமையைச் சுமப்பவர்கள் வேறு எவரும் இலர்.

நாம்பெரியம் என்னுமதை நாடா
தடக்குமவர்
தாம்பெரியர் என்றுமுறை சாற்றியிடும்-
நாம் பெரியர்
என்பார் சிறியர்; இவரலா திவ்வுலகில்
துன்பார் சுமப்பார்கள் சொல்.

(4) ஈசனே ! எல்லாம் நின்னுடைய செயலே; என் செயல் எதுவுமின்று என்று உணர்ந்து கொண்டால், யான் எதனை விரும்பிச் சொல்ல வாய் திறப்பேன்? நாயாகிய என்னை எப்படி எப்படியெல்லாம் ஈடேற்ற வேண்டும் என்று நீர் நினைக்கின்றீரோ, அப்படி அப்படியே நீர் செய்தருளுக! தங்கள் திருவுள்ளமே நிறைவேறுக!

என்னதன்று நின்செயலே என்றறிந்தால் யான்விரும்பி
என்னவென்று வாய்திறப்பேன் ஈசனே— இன்னமின்னம்
எப்படியோ நாயேனை ஈடேற்ற வேண்டுமுனக்கு
அப்படியே செய்தருளு வாய் !

(5) சிவபிரான், உயிர்களின் உடம்பாகிய மரப்பாவையினைக் கன்மம் (புண்ணிய பாவம்) என்னும் சூத்திரக் கயிறு கொண்டு பிணித்து, நன்மை தீமைஎன்னும்நாடகம்நடத்துகின்றார். இதனையுணராத அறிவிலிகள், எல்லாம் தங்கள் செயல் என்றே எண்ணிஇறுமாப்புறுகின்றார்கள். இதுபோன்று நகைப்பை விளைக்கும் செயல், மற்றொன்று உள்ளதோ?

வன்மைபுரி காய மரப்பாவை தன்னைஅரன்
கன்மமெனும் சூத்திரத்தாற் கட்டியே— நன்மை தின்மை
ஆட்டுவது நாடா தறிவிலார்தஞ்செயலாய்
நாட்டுதல்போல் உண்டோ நகை ?

(6) மனமே! பரபரப்பு அடைய வேண்டாம். உனக்குப் பலமுறையும் சொல்கின்றேன். போகப்போக நீ தெரிந்து கொள்வாய். ஒருவருக்கும் கேடு நினைக்காதே, செய்ந்நன்றி மறவாதே,கிடையாதபொருளுக்காகக் கவலைப் பட்டுத் துன்பப் படாமல் இரு.

பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக்கண்டாராய் மனமே!-ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
ஏங்கி இளையா திரு.

முடிவுரை :

இத்தகைய பல சிறந்த உபதேசங்களை அருளிச்செய்த ஸ்ரீகுருஞான சம்பந்தர் கி. பி. 16ஆம் நூற்றாண்டில் தோற்றுவித்த தருமபுர ஆதீனம், தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் சமூகத்தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் நல்ல முறையில் ஆற்றிவருகின்றது. இப்பொழுது ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிபவர்கள், இருபத்தைந்தாவது குரு மகா சந்நிதானம், கயிலைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள்.குமரகுருபரர்,சம்பந்தசரணாலயர்,படிக்காசுத்தம்பிரான்போன்ற சான்றோர்கள் பலரை மாணவர்களாகப் பெற்றுச் சிறப்புற்றொளிர்ந்து வரும் இச் சமயப் பெரு நிலையம், மேன்மேல் வளர்ந்தோங்கி மாண்புறச் சிவபிரான் திருவருளை வாழ்த்து வோமாக!

—ஆசிரியர்.

மதிப்புரை

நவமணிகள் : இந்நூல், வைரம்.முத்து மரகதம் மாணிக்கம் நீலம் புட்பராகம் வைடூரியம் கோமேதகம் பவளம் என்னும் ஒன்பது வகையான, விலையுயர்ந்த மணிகளைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல். நவமணிகளைப்பற்றி இத்தகைய விரிந்த முறையில், ஒரு நூல் இதுகாறும் தமிழில் வெளிவந்ததில்லை. திருவாவடுதுறை ஆதீனத்தின் 21-ஆம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் நாள் மலராக, இந்நூல் முதல் முதல் 1959-ஆம் ஆண்டில் வெளிவந்தது. திருமிகு. டி. எஸ். வைத்தியநாதன் அவர்கள், எத்தனையோ பற்பல நூல்களை ஆராய்ந்து, சிறந்த பல நுட்பமான செய்திகளைத் தொகுத்து, மிகவும் சுவையான முறையில், பயன்படும் வகையில் இதனை எழுதியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனம் 22-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் இசைவுடனும் அருளாசியுடனும், இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது. இதன்கண், மேலும் பல புதிய செய்திகளும், விவரங்களும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. பேரறிஞர்கள் பலர், இந்நூலின் சிறப்பைப் பாராட்டிப் போற்றியுள்ளார்கள். நூலாசிரியரின் அறிவும், ஆற்றலும், அனுபவமும், எழுத்துத் திறனும் பெரிதும் பாராட்டற்பாலன. சிறந்த பயன்மிக்க ஆராய்ச்சி நூல் ! திருத்தமான நல்ல புதிய பதிப்பு. பக்கங்கள் 360. விலை ரூபா பத்து. கிடைக்குமிடம்: எழில்மணி பதிப்பகம் 5, மேல் அரண்சாலை, திருச்சி-2.

—ஆசிரியர்.

சிந்தனையும் தத்துவமும்*

'வேதாந்த வித்தகர்'

டாக்டர் திரு. T. M. P. மகாதேவன் அவர்கள், M.A., Ph.D.

(1) முன்னுரை: இந்திய வரலாற்றில் மிகப் பழங் காலத்திலேயே பலதிற அரசியல் வேறுபாடுகளுக்கு இடையிலும்கூட, ஒரு குறிப்பிடத் தக்க பண்பாட்டொருமையுணர்ச்சி ஏற்பட்டிருந்தது. நெடுங்காலம் வரையில் நாட்டில் அனைத்தையும் இணைக்கும் ஒரு தனிப்பெரும் அரசாட்சி எதுவும் அமையவில்லை. பல சிற்றரசுகள் ஒன்றையொன்று அடக்கியாளத் தம்முள்இகலிக் கலாம் விளைவித்துக் கொண்டிருந்தன. அதன் விளைவாக நிகழ்ந்த அரசியற் பிணக்குகளே, அயல் நாட்டுப் படையெடுப்பாளர்கள் ஒவ்வொரு முறையும் எளிதில் வெற்றி பெறவும், ஒரு சில காலம் நாட்டை அடக்கியாளவும், துணை செய்வதற்கு முதற்பெருங் காரணமாக அமைந்தன. உள்நாட்டுப் பூசல்களிலும் அடிக்கடி நிகழ்ந்த வெளிநாட்டார் படையெடுப்புகளிலும்கூட, இந்தியாவானது இத்துணைக் காலமாக வழிவழியே தனது சமய தத்துவப் பண்பாட்டைப் போற்றிக்காத்து வந்துள்ளதென்றால், அதற்குக் காரணம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாக் காலங்களிலும் தோன்றியருளிய அறிவுடைப் பெருமக்கள், நாட்டின் முழுமையுணர்ச்சியை இடைவிடாமல் மக்கள் மனத்திற் புகட்டிக் கொண்டிருந்த உண்மையேயாகும். நாட்டின் ஒருமை நிலையை அறிவுறுத்தி வந்த அப் பெருமக்கள், ஓரொரு காலத்தில் இடையிடையே தோன்றி நிலவும் குறுகிய எல்லையுணர்ச்சிகளைக் கடந்து, தம்முடைய சொல்லாலும் செயலாலும் 'இந்தியா என்பது வடக்கே இமயமலைக்கும் தெற்கே கடல்களுக்கும் இடைப்பட்ட வெறும் நிலப்பகுதி யன்று; பிளவும் சிதைவும் விளைக்கும் அழிப்பாற்றல்களை எதிர்த்து நிற்கும் ஓர் ஆன்மீகக் கருத்துப் பொருளும், தெய்வீக வாழ்க்கையுமே இந்தியாவாகும்' என மக்களுக்குப் போதித்தனர்.

கவிஞர்களும்—அறிஞர்களும்—ஞானிகளும்—அடியார்களும், இந்திய வரலாறு அறிந்த நெடுங்கால முதல், உலகம் முழுமையுமே நலம் பெறுதற் பொருட்டு, மக்களை ஆன்மீக ஒருமை உணர்ச்சியைக் கைக்கொள்ளுமாறு வற்புறுத்தி வந்துள்ளனர். மனித குலத்தைப் பண்பாடு சிந்தனைகளின் மூலமாக மீட்பதே, இச் சான்றோர்களால் வரையறுக்கவும் வழங்கவும் பெற்ற தத்துவக் கொள்கைகள், சமய மரபுகள் என்பவற்றின் நோக்கமாகத் திகழ்ந்தது. ஒரு குறிப்பிட்ட தத்துவக் கருத்து அல்லதுசமயப் பழக்கம், நாட்டின் எந்தப் பகுதியில் முதன்முதலில் தோன்றியதென்று சொல்வது, பெரும்பாலும் இயலாத தொன்றாகவே உள்ளது. என்றாலும், இந்தியாவின் பொதுவான வழிவழிக் கலைச் செல்வத்தை அமைத்தலில், ஒவ்வொரு நிலப்பகுதியும் குறிப்பிடத் தக்க வகையில் தனது பங்கைச் செலுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இந்தியத் தத்துவம்—சமயம்—என்பனவற்றின் ஆக்கத்திற்காகத் தான் வழங்கியிருக்கும் நன்கொடைப் பங்கானது, ஆழ்ந்தும் அகன்று நிறைந்தும் விளங்குந்திறம் குறித்துத் தென்னகம், மிகவும் பெருமிதம் கொள்ளலாம்.

(2) வைதிக அவைதிக நெறிகள்: இந்தியத் தத்துவமானது நமக்குப் பலதிற அறிவு விருந்தை நல்குகின்றது. வைதிக நெறிகளுக்கும் அவைதிக நெறிகளுக்கும் இடையே, மிகப்பெரிய வேறுபாட்டறிகுறி ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. 'வைதிகம்' என்பது வேதத்தைப் பிரமாணமாக உடன்படுதலைக் குறிக்கும். 'அவைதிகம்' என்பது வேதத்தைப் பிரமாணமாக உடன்படாமையாகும். வைதிக சமயங்கள் சில, வேதத்தைப் பிரமாணமாக வெறும் பெயரளவிலேயே உடன்படுகின்றன. அவைதிக சமயங்கள்

* "**Thought and Philosophy**: Contribution of the south to the Heritage of India.

ஒரு சில வகைகளில் வேதக் கருத்துக் களோடு ஒத்துச் செல்வதும் உண்டு. வைதிக சமயங்களுள் 'வைதிகம்' என்னும் சொல் லின் நேரிய பொருளுக்கு ஏற்ப, வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை மீமாஞ்சமும் வேதாந்தமுமே யாகும். மீமாஞ்சமானது வேதத்தின் கிரியைப் பகுதியினின்று தனது தத்துவத்தை அமைக்க முயல்கின்றது. வேதாந்தமோ வேதத்தின் முடிவுப் பகுதி களாகிய உபநிடதங்களினின்று உணர் வெழுச்சி பெறுகின்றது. மீமாஞ்சத்தில் முதன்மையாக இரண்டு பிரிவுகளும், வேதாந் தத்தில் பல பிரிவுகளும் உள்ளன. வைதிக சமயங்களில் ஒருசில வேதத்தைப் பிரமாண மாக உடன்பட்ட போதிலும், தமது கொள்கைளுக்கு அடிப்படையாக, ஆக மங்கள் என்னும் அருளியல் நூல்களையே பெரிதும் சார்ந்து நிற்கின்றன. அவைதிக சமயங்களில் முதன்மையான இரு சமயங்கள் சைனமும் பௌத்தமும் ஆகும். இந்தியத் தத்துவ வகைகளைச் சார்ந்த இச்சமயங்க ளெல்லாம் தென்னகத்திற் செழித்து வளர்ந் துள்ளன. இவைகளில் ஒருசிலவற்றிற்குத் தென்னகம் பிறப்பிடம் அன்றெனினும், இவ் வெல்லா வகை மரபுகளின் விரிவுக்கும் வளர்ச் சிக்கும் தென்னகம் பெருந்துணை புரிந் துள்ளது.

(3) மீமாஞ்சம்: மீமாஞ்ச தத்துவ வளர்ச் சிக்குத் தென்னாடு பெரும்பணியாற்றி யிருக் கின்றது. 'பூர்வ மீமாஞ்சம்' என முழுப் பெயர் கொண்ட மீமாஞ்சமானது, 'கரும காண்டம்' என வழங்கப்பெறும் வேதத்தின் கிரியைப் பகுதிகளை முறையாக ஆராயும் குறிக்கோளையுடையது. இக்கொள்கையின் அடிப்படைச் சூத்திரங்களை அருளிச் செய்த ஆசிரியராக ஜைமினி என்பவர், 'வேதத்தின் குறிக்கோள் சமயக் கடமைகளை விதிப்பதே யாகும்' என விளக்குகின்றார். விதிகளும் விலக்குகளுமே வேத மூலத்தின் முதன்மை யான பகுதிகளாக அமைகின்றன. வேதத் தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்ப தன் மூலமே, ஒரு மனிதன் நலம்பெற முடியும். சபரர் என்பவர் ஜைமினி சூத்திரங் களுக்கு ஓர் உரை வகுத்தார். அவ்வுரை யானது, தென்னிந்தியர்களென்று பொது வாக நம்பப்படுகின்ற புகழோங்கிய இரு பெருங் கல்வியாளர்களால், இருவேறு வகை களில் விரித்துரைத்து விளக்கப் பெறுகின் றது. அவர்களில் ஒருவர் குமாரிலபட்டர். அவர் சங்கரரின் காலத்தில் வாழ்ந்தவர்; அவரினும் மூத்தவராகத் திகழ்ந்தவர். அவர் பிறப்பால் ஆந்திரர் எனக் கருதப்படுகின்றார். மற்றொருவர், குமாரில பட்டர்க்கு எதிர்மாறான கொள்கையைத் தோற்றிய பிரபாகரர். வழி வழிச் செய்தியின்படி, அவர் வட திருவிதாங் கூரில் தோன்றியவரும், குமாரில பட்டரின் மாணக்கரும் ஆவர். ஒரோவழி ஆசிரியரை விட மாணக்கர்கள் சிறந்துயர்ந்து திகழ்ந் தனர் என்னும் செய்தி, புதுமையான தொன்றன்று. சிறப்பாகத் தென்னாட்டில் இத்தகைய வழக்காறுகள் பலவுண்டு. மீமாஞ்ச தத்துவம் பற்றிக் குமாரிலபட்டரும் பிரபாகரரும் கூறிய விளக்கங்களில் முதன்மையான சில வேறுபாடுகள் இருக்கின் றன. அவைகளில் வேதங்களின் கட்டளை களுக்குக் கீழ்ப்படிதற்குரிய நோக்கம் குறித்த தும் ஒன்றாகும். குமாரிலபட்டரின் கருத்துப் படி, 'அங்ஙனம் கீழ்ப்படிந்தொழுகுதல், தனது விருப்பங்கள் நிறைவேறுதற்கு—துன்ப நீக்க மும் இன்ப ஆக்கமும் எய்துவதற்கு ஒரு கருவியாகும் என்னும் ஞானமே' நோக்க மாகும். பிரபாகரரின் கருத்துப்படி, வேத மானது ஆற்றலற்ற தொன்றன்று. அது தனது ஆணையிடும் ஆற்றலுக்கு வேறொரு புறப்பொருளின் துணையை நாடி நிற்பதில்லை. ஆதலின் வேதத்திற்குக் கீழ்ப்படிதற்குக் காரணமான நோக்கம், அவ்வாணைக்கேயுரிய மதிப்பியல் வணக்கமே யாகும். ஒருவனைச் செயலாற்றத் தூண்டுவது கடமையுணர்ச்சி (கார்யதாஞானம்) ஆகுமேயன்றி, விருப்பத்தை நிறைவேற்றும் கருவியைப் பற்றிய அறிவு (இஷ்ட சாதனஞானம்) அன்று.' இவ்விரு திறக் கொள்கையையும் பற்றி, ஏராளமான நூல்கள் தென்னிந்தியாவில் எழுதப்பெற்றுள் ளன. வேதாந்த தேசிகர் போன்ற வேதாந்த ஆசிரியர்களின் வாயிலாக, நாத்திகச் சார் புடைய மீமாஞ்சமானது ஆத்திகச் சார்புடைய மீமாஞ்சமாக மாற்றுருவம் பெற்றுள்ளது. சாயனர் வேதத்திற்கு வகுத்த உரை நன்கு அறியப்பட்ட தொன்று. அவர் தம் உடன் பிறந்தவராகிய மாதவர் மீமாஞ்ச சூத்திரங்களுக்கு விளக்கம் எழுதினார். இவ்விரு வரும் விஜய நகர அரசைத் தோற்றுவித்தவர் களால் ஆதரிக்கப் பெற்ற பெருங் கல்வியாளர் கள் ஆவர். தென்னிந்தியக் கோயில்களிலும் வீடுகளிலும் நடத்தப்பெறும் வழிபாடுகளில், வேத மந்திரங்களை ஓதுதலும், வேதச் சடங்கு களை நிகழ்த்துதலும், சிறந்த பகுதியாகத் திகழ்கின்றன. வேத மந்திரங்களைத் திருத்த மாக ஒலிக்கும் முறையைத் தென்னகம் மிகச் சிறந்த முறையிற் போற்றிப் பொதிந்து காத்து வந்துள்ளதென்னும் உண்மை, அனை வரும் உடன்படுவதொன்று.

(4) **வேதாந்தம் :** மீமாஞ்ச தத்துவ வளர்ச்சிக்கும், வேத மந்திரங்களை ஓதுதலுக்கும், வேதச் சடங்குகளை நிகழ்த்தும் பயிற்சிக்கும், தென்னகம் செலுத்திய நன்கொடைப் பங்கு எத்துணைப் பெரிய தொன்றாக இருந்து வந்திருக்கின்றதோ, அதனை விடப் பெரிய அளவில் தென்னகத்தின் தனிப்பெரும் சிறப்பு, வேதாந்தத் துறையில் மிகவும் விளங்கித் திகழ்கின்றது. ''வேதாந்தம்' என்னும் சொல்லைக் குறித்த அளவிலேயே, கேரள நாட்டில் காலடி என்னும் இடத்தில், பேரறிஞர்கள் பலர் கருதுகின்றபடி கி.பி. 788—820 இல் தோன்றி வாழ்ந்தருளிய சங்கரரை, ஒருவன் நினைவு கூர்வான். சங்கரரால் அறிவுறுத்தப்பெற்ற, குறித்ததொரு வடிவமுடைய வேதாந்தமானது 'அத்வைதம்' என வழங்கப்பெறும். உபநிடதங்கள் எத்துணைப் பழமையுடையனவோ அத்துணைப் பழமையை அஃதுடையதாகும். சங்கரர் தமது 'இரண்டில்லாத' ஏகான்ம வாதத்தினை முதன்மையான உபநிடதங்களுக்கும், வாதராயணரின் பிரம்ம சூத்திரத்திற்கும், பகவத் கீதைக்கும் தாம் இயற்றிய உரைகளில் மட்டுமேயன்றி, உபதேச சஹஸ்ரீ, விவேக சூடாமணி போன்ற வேறு பிற நூல்களிலும் விளக்குகின்றார். 'உபநிடதங்களில் முடிந்த பொருளாகக் குறிப்பிடப்பெறும் பிரம்மம் அல்லது ஆத்மா என்ற ஒன்றே உள்ளது. அதுவே முழுமையானது. உலகம் பலவகையாகத் தோன்றினும், அது வெறும் மாயை அல்லது பொய்த் தோற்றமே. தனி உயிர் என்று சொல்லப்படுவது பரப்பிரம்மமேயன்றி வேறன்று' என்பதே, சங்கரர் கூறும் கொள்கையின் சாரமாகும். சங்கரர்க்கு முன்பே வேதாந்திகளும், அத்வைதிகளும்கூட இருந்தனர். அவர்களில் ஒருவர் தாம் தென்னாட்டிற் பிறந்தவராதலைக் குறிக்கும் வகையில், 'திரமிடா' அல்லது 'திராவிடாசார்யா' என்னும் பெயரைப் பெற்றிருந்தார். சங்கரரும், சங்கரர்க்குப் பின்னே தோன்றி 'விசிட்டாத்வைதம்' என்னும் வேதாந்தக் கொள்கையைத் திருத்தமுற வகுத்த இராமாநுஜரும் ஆகிய இருவராலும், அவர் மிக்க பெருமதிப்புடன் குறிப்பிடப் பெறுகின்றார். சங்கரர்க்கு முன்னே விளங்கிய மற்றோர் அத்வைதி, சங்கரரின் ஆசிரியர்க்கு ஆசிரியர் என்று பழைய வழிவழிச் செய்தி கூறுகின்ற கௌடபாதர் ஆவர். ஆயினும் அத்வைதக் கொள்கையை முதன் முதலில் விரிவும் தெளிவும் மிக்க முறையில் விளக்கியவர் சங்கரரே. வேதாந்தத்தின் அடிப்படை நூல்களாகிய உபநிடதங்கள்—பிரம்மசூத்திரம் பகவத்கீதை ஆகிய மூன்றிற்கும் சங்கரர் வகுத்த உரைகள், அவற்றின் கருத்துத் தெளிவும் ஆழமும் குறித்துப் பொருந்திய முறையிற் புகழ்ந்து போற்றப்படுகின்றன. அவர் காலத்திற்கு முன்னரே உரை நூல்கள் பல இயற்றப்பெற்றிருந்தும், அவற்றுள் ஒன்று தானும் நின்று நிலவவில்லை. மேலும், சங்கரர்க்குப் பின்னே போந்த வேதாந்திகள் அனைவரும் அறிந்தோ அறியாமலோ, அவர் அமைத்த மாதிரியினையே பின்பற்றுவாராயினர். சங்கரரின் நேர்முக மாணவர்களுள் ஒருவராகிய சுரேசுவரர் ஒத்த கருத்தே அமைந்த மேற்கோள்களைக் கௌடபாதர் சங்கரர் ஆகிய இருவர் நூல்களிலும் இருந்து எடுத்துக்காட்டித் தம்முடைய ஆசிரியரை இயற்பெயராலன்றித் 'தென்னாட்டில் தோன்றியவர்' என்னும் பொருளில் 'திராவிடா' என வழங்கியிருப்பது குறிப்பிடத்தகும் சிறப்புடைய செய்தியாகும்.

சங்கரர் ஒரு சிறந்த தத்துவ ஆசிரியராகவும் பேரறிஞராகவும் முனிவராகவும் திகழ்ந்தார். அதனோடு மட்டுமேயன்றி இந்து சமுதாயத்தின் ஆற்றல் மிக்க அமைப்பாளராகவும், அஞ்சாமை வாய்ந்த சீர்திருத்தக்காரராகவும் விளங்கினார். அவர் இந் நிலவுலகில் வாழ்ந்த ஆண்டுகள் சிலவே எனினும், அவற்றை அவர் இந்தியாவின் இடையறாத் தொண்டிற்கே உரிமையாக்கினார். நாட்டின் ஒரு முனையில் இருந்து மறுமுனை வரையில் அவர் பலமுறை நடந்து சென்று, தூய உயரிய வாழ்க்கைக்குத் திரும்புமாறு மக்களுக்குப் போதனை செய்தார். இந்து மதத்தின்கண் நுழைந்திருந்த மறுக்களையெல்லாம் அகற்றினார். சமயக் கொள்கைகளைத் தூய்மையுற நிலை நாட்டினார். திருக்கோயில்களோடு இணைத்தெண்ணும் வகையில் ஏற்பட்டிருந்த இழுக்குகளையெல்லாம் போக்கித் துப்புரவாக்கி, அத் திருக்கோயில்கள் எந்த நோக்கங்கள் குறித்து அமைக்கப்பட்டனவோ, அவைகள் நிறைவேறுமாறு செய்தார். நாட்டின் முக்கியப் பகுதிகளில் சமுதாயத்தின் ஆன்மீக நலங்களைப் போற்றிப் பாதுகாக்கும் திருமடங்களை நிறுவினார். அவைகளில் ஐந்து திருமடங்கள் மிகவும் முதன்மையானவை. இமயமலைச் சாரலில் உள்ள பதரி ஒன்றைத் தவிர ஏனைய நான்கும் இந்திய தீபகற்பப் பகுதியில் பூரி துவாரகை சிருங்கேரி காஞ்சி என்னும் இடங்களில் அமைந்துள்ளன. காஷ்மீரத்தில் இருந்து கன்னியாகுமரி வரையில், சங்கரர் செய்தருளிய புரட்சியின் நலஞ் சிறந்த விளைவுகளை இந்தியாவிற்

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்

அன்பளிப்பு:

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
சென்னை-1.

பயணஞ் செய்கின்ற எவரும் இன்றுகூடக் காணலாம்.

விசிட்டாத்வைதம்: அத்வைதத்தின் வேருக, நன்கறியப்பட்ட வேதாந்தத்தின் வேறு இரு திறக் கொள்கைகள், விசிட்டாத்வைதமும் துவைதமும். ஆகும். அவைகள் முறையே இராமாநுஜரோடும் மத்வரோடும் தொடர்புறுத் தப்படுகின்றன. அவர்களும்கூடத் தென் னிந்தியரேயாவர். இராமாநுஜர் தோன்றி யருளிய ஸ்ரீபெரும்பூதூர் சென்னைக்கு அண்மையிலேயே உள்ளது. சங்கரர்க்குப் பின்னர் இரண்டு நூற்ருண்டுகள் கழித்துத் தோன்றிய இராமாநுஜர் பிரம்மம் நிர்க்குணம், 'பிரபஞ்சம் மித்தை' என்னும் அத்வைதக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தார். இராமாநுஜர் கொள்கையின்படி, உயிர் உட லோடு தொடர்பு கொண்டிருப்பதுபோல, பிரம்மமானது உயிர்ப் பொருள்களோடும் உயிரில் பொருள்களோடும் கலந்துள்ளது. உணர்வுடைப் பொருள்களாகிய ஜீவன்களும், உணர்வில் பொருள்களாகிய அசத்துக்களும் பிரம்மத்திற்குவிசேடணமாகவிளங்குகின்றன. பிரமம் இவற்றின் விசிட்டப் பொருளாக விளங்குகின்றது. அதுபற்றியே இராமாநுஜ ரின் வேதாந்தம் 'விசிட்டாத்வைதம்' என வழங்கப்பெறுகின்றது. பாஞ்சராத்திர ஆக மங்களையும், தென்னுட்டு வைணவ சமயச் சான்ருேர்களாகிய ஆழ்வார்கள், தமக்கு முற்பட வாழ்ந்திருந்த நாதமுனிகள் ஆளவந் தார் ஆகியவர்களின் உபதேசங்களையும் பின் பற்றி, இராமாநுஜர் பிரம்மத்தினை விஷ்ணு, நாராயணன் என வழங்கினுர். பக்தி நெறிக்கு அவர் நுண்ணிய அறிவு அடிப்படையை உதவினுர். அவர்தம் உபதேசங்களிலிருந்து வடநாட்டில் பல பக்தி இயக்கங்கள் உணர் வெழுச்சி பெற்றன. அவர்தம் வாழ்க்கை யில், மனத்தை மிகவும் உருக்கத் தக்க நிகழ்ச்சிகளில் ஒன்று, ஸ்ரீநாராயண மந்திரத் தைத் தம் ஆசிரியரின் கட்டளைக்கும்கூட மாருக, மக்களெல்லாருக்கும் வெளிப்படை யாக வழங்கிய செய்தியாகும். மிகப் பெரிய அருட்கொடை என்று தாம் கருதியதனை, மக்களெல்லாருக்கும் வழங்கியதன் இன்றி யமையா விளைவாகத் தாம் நரகத்திற்குச் செல்ல நேருமெனினும், அவர் அதற்காகத் தயங்காமற் சமைவாகவே இருந்தார்.

துவைதம்: கி. பி. 12ஆம் நூற்ருண்டின் இறுதியில் உடுப்பிக்கு அருகில் தோன்றிய மத்வர், இராமாநுஜரைவிடச் சங்கரரோடு பெரிதும் மாறுபட்டார். அவர் வேதாந் தத்தை முழுவதும் பன்மை (அத்யந்தா பேதவாதம்) ஆக விளக்கினுர். 'துவைதம்' என வழங்கும் மத்வர் கொள்கையின்படி கடவுள் உலகம் உயிர்கள் என்பன ஒன்ருே டொன்று முற்றிலும் வேறுபட்டவையாகும். ஓர் உயிரானது தான் அடைவதற்கு மிகப் பெரிய தொன்ருக எதிர்பார்க்கக்கூடிய நன்மை, கடவுளுக்கு அடிமையாகும் நிலையே யாகும். இராமாநுஜரைப் போலவே, மத்வரும் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொள் கின்ருர். தென்னிந்தியாவில் எங்கோ ஓரிடத் தில் இயற்றப்பெற்றதாக நம்பப்படும் பாகவத புராணத்தால் மிகப் பெரிதும் கவரப்பெற்ற மத்வர், கிருஷ்ண வழிபாட்டு நெறியைப் பரப்பினுர். வங்காளத்தில் எழுந்த சைதன்ய ரின் இயக்கமானது, தனது பிற்பகுதியில் மத்வரின் பன்மைக் கொள்கையையே பின் பற்றத் தேர்ந்து கொண்டது.

துவைதாத்வைதம்: வைணவ சமயத்தின் பிற தத்துவக் கொள்கைகளுள், தென்னிந்திய ரால் தோற்றுவிக்கப் பெற்ற இரண்டை ஈண்டுக் குறிப்பிடலாம். பதினென்ரும் நூற் ருண்டில் தோன்றியவரும், தெலுங்கரும், வடக்கேயுள்ள பிருந்தாவனத்தைத் தமது வாழ்க்கையிடமாகக் கொண்டவரும் ஆகிய நிம்பார்க்கர் 'துவைதாத் வைதம்' என்னும் வேதாந்தக் கொள்கையைத் தோற்றுவித்தார். அவர் பிரம்ம சூத்திரத்திற்கு உரை இயற்றி ஞர். அதன்கண் உயிர்களும் உலகமும் ஆகிய இரண்டும் பிரம்மத்தினேடு வேறு பட்டும் வேறு படாமலும் இருக்கின்றன என்றும், பிரம்மம் என்பது இராதையோடு கூடிய கோபாலகிருஷ்ணனே என்றும் விளக்கினுர்.

சுத்தாத்வைதம்: வைணவ சமயத்தின் மற்ருெரு பிரிவு 'சுத்தாத்வைதம்' ஆகும். அது பதினைந்து பதினுரும் நூற்ருண்டினரும், தெலுங்கராய்ப் பிறந்து காசியில் வாழ்ந்த வரும் ஆகிய வல்லபாசாரியருடன் தொடர் புடையது. நிம்பார்க்கரைப்போல அவர் வேருெரு கிருஷ்ண வழிபாட்டு நெறியைத் தொடங்கினுர். வல்லபாசாரியர் கொள்கை யின்படி, பிரம்மத்திற்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு, நிம்பார்க்கர் கூறுவதுபோல வேறுபாடும் வேறுபாடின்மையும் உடைய தன்றி, வேறுபாடின்மை யொன்று மட்டுமே கொண்டதாகும். வல்லபர் தம்முடைய அத்வைதத்தை, உலகத்தை வெறும் மாயை எனக் கூறுதலினுற் களங்கமுற்றதாகத் தாம் கருதும் சங்கரரின் அத்வைதத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டத் தூய (சுத்த) அத்வை தம் என அழைக்கின்ருர்.

சைவசித்தாந்தம்: வைணவ சமயத் தத்துவக் கொள்கை வகைகளைப் போலவே, அவற்றிற்கு நிகரான ஆற்றல் மிக்க சைவக் கொள்கைகள் தென்னிந்தியாவில் இருக்கின்றன. இவைகளில் மிகவும் முதன்மை வாய்ந்தவை சைவ சித்தாந்தம், வீரசைவம், சிவாத்வைதம் என்பனவாகும். வைணவத்திற்கு வைணவ ஆகமங்கள் இருப்பது போலவே, சைவத்திற்கும் சைவ ஆகமங்கள் இருக்கின்றன. சைவத்தின் தமிழ் வகையைச் சார்ந்த சைவ சித்தாந்தமானது சைவ ஆகமங்களை மட்டுமேயன்றி, 'நாயன்மார்கள்' எனப்படும் தென்னகச் சைவச் சான்றோர்களின் உபதேசங்களையும் தனது கொள்கைகளுக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படைப் பிரமாண நூல் பதின்மூன்றும் நூற்றாண்டினராகிய மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதம் ஆகும். அருணந்தி சிவாசாரியரின் சிவஞான சித்தியார், உமாபதி சிவாசாரியரின் சிவப்பிரகாசம் திருவருட் பயன் என்பன, இக் கொள்கையைச் சார்ந்த வேறு பிற முக்கியமான நூல்களாகும். கடவுள் (பதி) உயிர் (பசு) ஆணவம் மாயை கன்மம் (பாசம்) உள்பொருள்கள் என்பது, சைவ சித்தாந்தத்தின் முதன்மையான கொள்கையாகும். 'கடவுள் சிவம், அவரே பரம்பொருள், உயிர்கள் சிவத்தின் இயல்புகளுடையவை. ஆனால் சிவத்திற்குச் சமமாவன அல்ல. 'அத்வைதம்' என்பது கடவுளோடு வேறுபாடின்மையன்று, கடவுளினின்று பிரியாமையே. இதுதான் உண்மையான அத்வைதம் ஆகும் என்று சைவ சித்தாந்தம் சாற்றுகின்றது.

வீரசைவம்: இரண்டாவதாக நாம் கருதத்தக்க சைவக் கொள்கையானது, வீரசைவம் ஆகும். மிகத் தொன்னெடுங் காலத்திலேயே தோன்றிய தொன்றாக அது தன்னைச் சுட்டிக் கொள்கிறது. கல்யாணியில் விளங்கிய கலாசூரி பிஜ்ஜல அரசரின் முதலமைச்சராகத் திகழ்ந்த பசவர் என்பவரால் கன்னட நாட்டில் 12ஆம் நூற்றாண்டில் அது மக்களிடையே பெரிதும் பரப்பப் பெற்றது. வீரசைவம் என்னும் சொல் "உறுதிப்பாடுடையவர்களின் சைவம்" அல்லது "செயலாண்மைத் திறச் சைவம்" என்னும் பொருளுடையது. அதனைப் பின்பற்றுபவர்கள் தம் உடம்பில் இலிங்கத்தை அணிந்து கொள்ளுதலால், அஃது 'இலிங்காயதம்' எனவும் வழங்கப்பெறுகின்றது. வேத ஆகம புராணங்களை மட்டுமேயன்றி, 'புராதனர்கள்' எனத் தாம் போற்றும் தமிழ்ச் சைவ அடியார்களையும் 'வசனங்கள்' எனப்படும் கன்னட சமயப் பெரியார்களின் உபதேசங்களையும் வீர சைவர்கள் பிரமாணமாகக் கொள்கின்றனர். கலைக் குறியீட்டின்படி, வீரசைவத் தத்துவக் கொள்கையானது சக்தி 'விசிட்டாத்வைதம்' என வழங்கப்பெறும். 'கடவுளின் இரண்டல்லாத் தன்மையாவது தனது ஆற்றல் அல்லது சக்தியினால் விசேடிக்கப்படுதல்' என்பது அதன் பொருளாகும். இத்தத்துவ முறையின்படி, தன்னின் வேறல்லாத ஆற்றல் அல்லது சக்தியினால் கடவுளும் உயிர்களும் தனித்தனியே பிரிக்க வியலாத நிலையில் ஒன்றியுள்ளன. இங்ஙனம் ஒன்றியுள்ள நிலையை உணர்ந்துய்வதே வாழ்க்கையின் குறிக்கோள். இதனை லிங்கமும் (சிவமும்) அங்கமும் (உயிரும்) ஒருமைப்படுதல் என்னும் கருத்தில் 'லிங்காங்க சமரஸ்யம்' எனக் கூறுகின்றது.

சிவாத்வைதம்: சிவாத்வைதக் கொள்கையானது, இராமாநுஜரோடு ஒரு காலத்தவராக வாழ்ந்திருக்கக்கூடிய ஸ்ரீகண்டரால் வகுக்கப் பெற்றது. சங்கரரின் அத்வைதக் கொள்கையோடு இது பெரிதும் நெருங்கிய நிலையில் வருகின்றது. பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பைய தீட்சிதர் தம்முடைய பல நூல்களில் சைவமும் அத்வைதமும் ஆகிய இரு கொள்கைகளையும் ஒருமைப்படுத்த முயன்றுள்ளார். 'பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீகண்டர் வகுத்த உரையில் ஒரோவழி மந்த மதியினராகிய மக்களின் நலங்கருதி விசிட்டாத்வைதத்தை உபதேசிப்பதாகத் தோன்றிய போதிலும், அவருடைய தத்துவக் கொள்கையின் சாரம் அத்வைதமேயாகும்' என அப்பைய தீட்சிதர் கூறுகின்றார். ஸ்ரீகண்டர் பிரம்மப் பொருளைச் சிவம் நீலகண்டம் உமாசகாயம் திரிநேத்திரம் என ஒற்றித்துக் காண்கின்றார். சிவம் மங்களத் தன்மை வாய்ந்தது. நீலகண்டம் உயிர்கள் பாற் கொண்டுள்ள பேரருளுக்கு அறிகுறியாக நிற்பது. உமாசகாயம் ஞானமும் ஆனந்தமும் ஆகிய ஒப்புயர்வற்ற ஒளியாகத் திகழ்வது. திரிநேத்திரம் உலகங்களையெல்லாம் முத்தொழிற்படுத்தும் பேராற்றலை உணர்த்துவது. சுவேதாசுவதர உபநிடத சுலோகம் ஒன்றை மேற்கோளாக எடுத்துக்காட்டி 'ஒருவன் சிவபரம்பொருளை உணராமல் வீடுபேறு அடைவதென்பது வானத்தை ஒரு தோல் போலச் சுருட்ட முயல்வதைப் போன்று முடியாததொரு செயல்' என ஸ்ரீகண்டர் கட்டுரைக்கின்றார்.

“ பரசிவன் உணர்ச்சி இன்றிப்
பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி
வீடுபேறு அடைதும் என்றல்,
உருவமில் விசும்பின் தோலை
உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற் றென்னில்
பின்னுமோர் சான்றும் உண்டோ ?”

—கந்த புராணம்.

ஜைன பௌத்தம்: இனி, இவ்வைதிக நெறிகளுக்குப் புறம்பான கொள்கைகளை நோக்குவோமாயின், ஒரு சிலகாலம் தென்னகத்தில் ஜைனமும் பௌத்தமும் பெரும்பாலான மக்களாற் பின்பற்றப் பெற்றமையையும், இந்து மதத்தில் தோன்றிய சீர்திருத்த இயக்கத்தாலும், சைவ வைணவ ஆசிரியர்களின் அருளுரைகளாலும் அவைகள் அடுத்து விரைவில் அழிவுநிலை எய்தியமையையும், அறியலாம். ஜைன பௌத்த ஆசிரியர்கள் தாம் இயற்றிய நூல்களின் மூலம், தென்னிந்திய மொழிகளின் இலக்கியங்களைச் செழிப்புறச் செய்துள்ளனர். மிக விரிவான நீதிக் கோட்பாடுகளை யுடையதும், உலகப் பெருநூலாக இருப்பதுமான திருக்குறளை இயற்றிய ஆசிரியர் திருவள்ளுவர், ஜைனர் பௌத்தர் சைவர் வைணவர் ஆகிய எல்லாராலும் ஒருசேரத் தத்தமக்குரியவராகக் கொண்டாடப்படுகின்றார். சாத்தனார் இயற்றிய மணிமேகலை என்னும் பௌத்தத் தமிழ் நூலில் அதன் கதைத் தலைவியாகிய மணிமேகலை, வேதம் சைவம் வைணவம் ஆசீவகம் ஜைனம் சாங்கியம் வைசேடிகம் லோகாயதம் முதலிய சமயவாதங்களைக் கேட்டறிந்து உணர்ந்து கொள்ளுமாறு பணிக்கப்படுகின்றாள். புகழ்பெற்ற திக்நாகர் என்னும் பௌத்த தருக்க நூல் ஆசிரியரைத் தோற்றுவித்தும், தருமபாலர் என்பவரைக் கி.பி. ஆறும் நூற்றாண்டில் நலாந்தா பல்கலைக் கழகத்திற்குத் தலைவராக அனுப்பி வைத்தும், “கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்” இணையற்ற தனிப்பெருஞ் சிறப்பை எய்தியுள்ளது. ஜைனர்கள் கருநாடகத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர். கன்னட மொழியில் ஜைனர்கள் இயற்றிய நூல்கள் பலப்பல இருக்கின்றன. அவைகளிற் பல தீர்த்தங்கரர்கள்—ஜைன சமயப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை விளக்குவனவாகும். ஒருசில காலம் மதுரை மாநகரம் ஜைனர்களின் கோட்டையாக விளங்கியது. அந்நகரிற் கி. பி. 470இல் வச்சிரநந்தி என்பவனால் ஒரு சங்கம் அமைக்கப்பட்டதென நாம் கேள்விப்படுகிறோம்.

தென்னாட்டுச் சமயச் சான்றோர்கள்: இந்தியாவில் தத்துவமானது சமயத்தோடு பெரிதும் தொடர்புடையதாக உள்ளது. தத்துவ ஆசிரியர்களே சமயத் தலைவர்களாகவும் கருதப் பெறுகின்றனர். இதுவரையிற் குறிப்பிடப் பெற்ற தத்துவ ஆசிரியர்கள் ஒவ்வொருவரும், மாட்சிமைமிக்க சமயத் தலைவர்களாகவும் விளங்கினர். தென்னிந்தியச் சைவ வைணவ சமய ஆசிரியர்களைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். தென்னகச் சைவ சமயச் சான்றோர்கள் எனப் போற்றப் படுவோர் அறுபத்துமூவர் ஆவர். ‘தலைவர்கள்’ என்னும் பொருளில் அவர்கள் ‘நாயன்மார்கள்’ என அழைக்கப்படுகின்றனர். அவர்களில் மிகவும் முதன்மை வாய்ந்தவர்கள் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் நால்வர்கள் ஆவர். இவர்கள் நால்வரும் அருளுணர்வு பெற்ற சிறந்த கவிஞர்களாக விளங்கி, நாட்டிற் பக்திவெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்து, மக்கள் மனத்தில் ஆன்மீக வாழ்க்கைக்குரிய பண்பாட்டை உண்டாக்கினர். வைணவ சமயப் பெரியோர்கள் பன்னிருவர்கள் ஆவர். தெய்வ அருளில் ‘ஆழ்ந்து திளைப்பவர்கள்’ என்னும் பொருளில், அவர்கள் ஆழ்வார்கள் எனச் சிறப்பித்து ஓதப்படுவர். அவர்களில் தலைசிறந்தவர் ஆகிய நம்மாழ்வார் பிறவியிலேயே ஒரு யோகியாவர். அவர் அருளிச் செய்த கவிதை நூல் ஆகிய திருவாய்மொழி, வேதாந்த தேசிகரால் ‘திராவிட உபநிடதம்’ எனப் போற்றப்பட்டுள்ளது.

கருநாடகத்திற் பரவிய வீர சைவமானது பல அருளாளர்களைத் தோற்றுவித்துள்ளது. அவர்கள் அக்கொள்கையை மக்கள் அனைவரும் தழுவும் வகையிலும்கவர்ச்சிமிக்க முறையிலும் விளக்கிப் பரப்பினர். அத்தகையவர் இரு நூற்றுக்கும் மேற்பட்டவர்களாவர். அவர்களில், அவர்களுக்குத் தலைமை நிலையில் விளங்கிய அக்கமாதேவி என்னும் பெண்பாலாரும் ஒருவர். வீரசைவப் பெரியோர்கள் இயற்றிய நூல்கள் ‘வசன சாத்திரங்கள்’ என்னும் தொகுதிப் பெயரால் வழங்கப்படுகின்றன. கன்னட நாட்டில் மிகமிக எளிய சிறு வீடுகளிலும்கூட, இந்நூல்கள் பெரிதும் போற்றிப் படிக்கப்பட்டு வருகின்றன. இந்த வசன நூலாசிரியர்களின் பொருள்பொதிந்த சிறுசிறு தொடர்கள், ‘மக்களின் பேச்சு

வழக்கில் இயல்பாக அடிக்கடி வழங்கப்படும் நிலையில் பெரிதும் பிரிவறக் கலந்துவிட்டிருக்கின்றன. இந்நூல்களில் அடுத்தடுத்து வற்புறுத்திக் கூறப்படும் ஒரே பொருள், "மனிதர்காள்! பாவ வழியினின்று திரும்புங்கள், சிவபிரானைச் சரண் அடையுங்கள்!" என்பதேயாகும்.

கன்னட நாட்டில் வைணவ சமயமானது அரிதாசர்களின் இயக்கத்தை எழுச்சியுறச் செய்தது. அரிதாசர்களில் மிகவும் தலை சிறந்தவர் புரந்தரதாசர். அவர் ஒரு சிறந்த கவிஞரும் பக்தரும் ஆவார். கன்னட மொழியில் அவர் இயற்றிய எளிய இனிய பதங்கள், கடவுள் அன்பையும் கடவுட் காதலையும் அளவின்றி ஏராளமாகப் பொழிவனவாகும். இத்தகைய ஓர் இயக்கம் மகாராட்டிரத்திலும் கால்கொண்டது. ஞானதேவர், நாமதேவர், ஏகநாதர், துக்காராம், இராமதாசர் முதலினோர் அவ்வியக்கத்தோடு தொடர்புடையவர்கள்.

'சித்தமார்க்கம்' எனப்படும் தனிச் சிறப்புடைய அருளியற் கொள்கை ஒன்று தென்னகத்தில் நிலவிக்கொண்டு வருகின்றது. தென்றமிழ்ச் சைவ சமயத்தின் மிகச் சிறந்த தெய்விக நூலாகத் திகழ்ந்துவரும் திருமந்திரம் என்னும் நூலை அருளிச் செய்த திருமூலர் ஒருபெருஞ் சித்தர் ஆவர். வழிவழிச் செய்தியின்படி, கயிலையில் இருந்து தெற்கு நோக்கி வந்த ஒரு சிவயோகியாகிய அவர், இறந்து போன மூலன் என்னும் இடையன் ஒருவனின் உடலைக்கண்டார். பசுக்களின் துயரை நீக்கும் பெருங்கருணையினால் அவ்வுடலிற் புகுந்தார். மூவாயிரம் யாண்டுகள் யோகம் இருந்து திருமந்திரத்தின் மூவாயிரம் பாடல்களையும் இயற்றினார். மனித உடலை அழியாமற் (காய கற்பம்) செய்துகொள்ள இயலும் என்பது சித்தர் நெறியின் தனிச் சிறப்பான ஒரு கொள்கையாகும். தனது பிறிதொருபகுதியாக, இந்நெறி வடநாட்டு "அடயோக நெறி"யைப் பெற்றுள்ளது.

முடிவுரை: அண்மையிற் சில நூற்றுண்டுகளிலும், நாம் வாழும் இந்நாளிலும்கூட, புகழ் மிக்க ஞானிகளையும் முனிவர்களையும் தென்னகம் தோற்றுவித்துள்ளது. அவர்களில் தாயுமானவர், சதாசிவப்பிரம்மம், தியாகராஜர், இராமலிங்க அடிகள், நாராயணகுரு, ரமண மகரிஷி முதலினோர் ஒருசிலர் ஆவர். "அன்றைய இந்தியாவையும், என்றுமுள்ள இந்தியாவையும் மறுபடியும் ஒருவன் அவர்களிற் சந்திக்கின்றான்" என, அண்மைக் காலத்தின் மேலைநாட்டு எழுத்தாளர் ஒருவர், கடைசியாகக் குறிப்பிடப்பெற்றமுனிவர் அவர்களைக் குறித்துக் கூறியிருப்பது ஏனையருக்கும் கூடப் பொருந்துவதாகும்.

—தமிழாக்கம்,

ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு: மாயூரம் தருமபுர ஆதீனத்தில், 27—5—69 முதல் 6—9—69 வரை, வழக்கம்போல் மிகவும் சிறப்புற நடைபெற்றது. அதன் சார்பில், இம்முறை அது திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழாவாக, 10 நாட்கள் கொண்டாடப்பெற்றது. பட்டி மன்றம், கருத்தரங்கம், கவியரங்கம் முதலியன, சிறப்பாக நிகழ்ந்தன. நீதிபதி கனம் திரு கே. எஸ். வெங்கட்ராமன், I.C.S., நீதிபதி கனம் திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், B.A., B.L., உயர்கல்வித் துணை இயக்குநர் திரு பெ. திருஞானசம்பந்தம், M.A., கவியோகி சுத்தானந்த பாரதியார், திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், B.A., B.L., திரு. கொத்தமங்கலம் சுப்பு, திரு கி. வா. ஜகந்நாதன், M.A., மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் M.A., அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா, B.A., தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு பா. உ. ஷண்முகம், உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு ம. முத்துசாமி, B.A., L.T., தலைமை நீதிபதி கனம் திரு. கே. வீராசாமி, முதலிய பெருமக்கள் பற்பலர், விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர். 5—6—69 அன்று ஸ்ரீகுருஞான சம்பந்தர் குருபூசை விழாவும், 6—6—69 அன்று பட்டணப் பிரவேசமும், வழக்கம் போல் மிகவும் சிறப்புற நடைபெற்றன.

—ஆசிரியர்

குடம்பையும் புள்ளும்

முன்னுரை :

செந்நாப் புலமைத் திருவள்ளுவர் பெருமான் தலைசிறந்த கவிஞர்; துறைபோய மெய்யுணர்வின் பேரறிஞர்; பல்கலைக் குரிசில். ஒருவர் சிறந்த கவிஞரா எனக் காண்பதற்கு எண்ணற்ற உரைகற்கள் உண்டு. "எவனும் ஆழ்ந்த மெய்யுணர்வாளனாயிராமல், ஒரு போதும் ஓருயர்ந்த கவிஞனாய் இருந்ததில்லை" என்ற ஓர் உரைகல்லினை மேனாட்டு ஆசிரியர் ஒருவர் படைக்கின்றார். இவ்வுரைகல்லில் தீட்டிக் காணுங்காலும், உலகப் புகழ்பெற்ற திருவள்ளுவரின் புலமைப் பசும்பொன்னொளி, மாற்றில் உயர்ந்தே துலங்குகின்றது.

திருக்குறளில் கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும், ஒளியும் நிழலும் போலவே ஒத்தியைந்து திகழ்கின்றன. கவிதை நலம் பிறங்குமிடத்திலே மெய்யுணர்வு மெலிந்திருப்பது, கண்ணுக்கு இனிமையும், தின்னற்குக் கசப்புமாய பயனில்கனி போன்றது. கவிதை நலமின்றி மெய்யுணர்வின் விளக்கம் மட்டும் இருப்பது, உடலுக்கு உரனூட்டியும் நாவிற்குச் சுவையில்லா மருந்து போன்றது. ஆனால் கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும் ஒருங்கே விரவித் திகழ்வதோ, நாவிற்கு மட்டுமன்றி உடலுக்கும் உயிருக்கும் பெருநலன் விளைவிக்கும் இன்னமிழ்தம் போன்றது! இவ்விரு பெருநலமும் ஒருங்குறுமையால் மேனாட்டிலும் நம் நாட்டிலும் எத்தனையோ கவிஞர் பலர், திறனாய்வாளர்களின் போற்று தலைப் பெறுது போயினர். ஆனால், ஆசிரியர் திருவள்ளுவரோ இவ்விரு பெருநலனும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற பெரும் புலவர்! அதனால்தான் அவர் பிறமொழியினராலும் புகழ்ந்து போற்றி இசைபாடப்பெறுகின்றார்.

திருக்குறள் :

இவ்வரும்பெரும் புலமை, திருவள்ளுவர் பெருமான் இயற்றியருளிய திருக்குறள் முழுமையிலும் பரவிக்கிடக்கக் காண்கின்றோம். இவ்வரும் பெறற் புலமை நலத்தின் பெற்றி தெளிய "ஒரு குழிசிச் சோற்றிக்கு ஒரு சோறு பதமாம்" என்னும் முறைமைபற்றி, ஒரே ஒரு குறள் மணியினை மட்டும் ஆராய் தலே ஈண்டைக்கு அமையும்.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு"

என்பது திருவள்ளுவரின் திருக்குறளுள் ஒன்று. "நிலையாமை" என்னும் தலைப்பிற் காணப்படும் மிகச் சிறந்ததொரு கருத்தோவியமாகக் கவினுற்றுத் திகழ்கின்றது அது.

நிலையாமை :

உடம்புக்கும் உயிர்க்கும் இடையே நிலவும் தொடர்பினை இத்திருக்குறளின் வாயிலாகத் திருவள்ளுவர் இனிது விளக்கி யருள்கின்றார். ஆசிரியர் மணக்குடவர்,

"கூடு தனியே கிடக்கப் புள்ளுப்
பறந்து போனாற்போலும்
உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு"

என இத் திருக்குறட்குப் பொருள் காண்கின்றார். ஆனால், ஆசிரியர் பரிமேலழகரோ

"முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு"

என மணக்குடவரிற் சிறிது வேறுபட்டு உரை வகுக்கின்றார். தம் உரை வேறு பாட்டிற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கமும் கூறுகின்றார் :

"இனி 'குடம்பை' என்பதற்குக் 'கூடு' என்று உரைப்பாரும் உளர். அது புள்ளுடன் தோன்றுமையானும், அதன்கண் அது மீண்டு

புகுதல் உடைமையானும் உடம்பிற்கு உவமையாகாமை அறிக''

பரிமேலழகர் :

இங்ஙனம் மணக்குடவர் முதலினோர் உரையினை மறுப்பது மட்டுமே யன்றி, இத்திருக்குறட்குப் பரிமேலழகர் வரைந்துள்ள சிறப்புரை பொன்னினும் மணியினும் போற்றத் தகுவதாய்ப் பொலிகின்றது. அவ்வழகிய இனிய சிறப்புரை வருமாறு.

''தனித்தொழிய என்றதனால் முன் தனியாமை பெற்றும்; அஃதாவது கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறுந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்; அதனால், அஃது உடம்பிற்கு உவமை யாயிற்று. வேற்றுமை யின்றி நின்றே பின்புகாமற் போகலின், புள் உயிர்க்கு உவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவும் உளவேனும் புள்ளையே கூறினர், பறந்து போதல் தொழிலான் உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவேயாகலின். 'நட்பு' என்றது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும் அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறுதலின், வினைவயத்தாற் கூடியதல்லது நட்பில என்பது அறிக''

மணக்குடவர் :

ஆசிரியர் பரிமேலழகர் இவ்வழகிய இனிய உரையினால் மணக்குடவரின் உரையினை மறுத்துரைத்துள்ளாராயினும், மணக்குடவர் அங்ஙனம் உரை வரைந்தமைக்கு உரிய காரணமும் இல்லாமற் போகவில்லை. ''குடம்பை'' என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில்யாண்டும்'முட்டை' என்னும் பொருளில் வழங்கப் படாமையினை நினைந்தே 'கூடு' என்று, அவர் பொருள் கொண்டனராதல் கூடும்.

''மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
யாணர் நரம்பின் சுகிரோடு வயமான்
குரற்செய் பலியின் இழைத்த குடம்பை''
(புறம்—378)

''வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும்,
புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரல்தோற் றினவே''
(புறம்—397)

என்பன போன்ற பாடற் பகுதிகளில் 'குடம்பை' என்னும் இலக்கியச் சொற்குக் 'கூடு' என்னும் பொருளே ஆட்சியில் உள்ளது. மேலும்,

''கேளாதே வந்து கிளைகளாய் இற்றோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—
வாளாதே
சேக்கை மரன்ஒழியச் சேண்ஒங்கு
புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து''

எனவரும் நாலடியார் வெண்பாவினை ஆதாரமாகக் கொண்டும், மணக்குடவர் தம் உரையினை வகுத்தனராதல் வேண்டும்.

மணிவாசகர் :

இனி ஆசிரியர் பரிமேலழகர் 'குடம்பை' என்னும் சொல்லுக்கு 'முட்டை' என்பது நேர்முகப் பொருளன்றாயினும், அதனைக் கொண்டமைக்குரிய காரணம்,

''காண லாம்பரமே கட்கிறந்ததொர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர்
பார்ப்புஎனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே''

''உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந்
துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக்
கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை
இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோள்நோக்கம்
ஆடாமோ''

எனப் பிறாண்டும் பறவைகளின் இயல்பு பற்றிக் குறிப்பிட்டிருத்தல் குறிக்கொளற் பாலது. அன்றியும் 'குடம்பை' என்பதன் பிறிதொரு வடிவமாகிய 'குரம்பை'' என்னும் சொல்லை, மாணிக்கவாசகர் ''கள்ளப் புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே'' ''மலவன் குரம்பையை மாற்றிஅம்மால்முதல் வானவர்க் கப்பால் செலவன்பர்க் கோக்கும் சிவன்'' என ஆங்காங்கு அருளிச் செய்திருத்தலும் அறிந்தின்புறற் பாலது. எனவே, ''இங்கொர் பார்ப்பு எனப் பாணனேன் படிற்று ஆக்கையை விட்டுனைப் பூணுமாறு அறியேன்'' என வரும் மாணிக்கவாசகரின் அருமைத் திருமொழியினை ஆதாரமாகக் கொண்டே பரிமேலழகர் 'புள்' என்பதற்குப் பார்ப்பு' (பறவைக்குஞ்சு) எனவும் 'குடம்பை' என்பதற்கு 'முட்டை' எனவும் பொருள் கொண்டார் போலும்.

மரபுநெறி பிறழாமை :

பரிமேலழகரின் இச்சிறப்புரை மிகவும் பாராட்டற் குரியதேஎனினும், மணக்குடவரின் உரையும் மரபு நெறி பிறழாத ஒன்று என்பது மனங்கொண்டு மகிழ்தற்குரியது. மணக்குடவரின் உரைக்கு,

"அலங்கல் அஞ்சினைக் குடம்பை
புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்எழுந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகி அவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர் என்
உயிரே" (அகம்—113)

எனவரும் பழஞ்சங்ககாலப் பாடலின் கருத்தும் ஆக்கந் தருவதாதல் காணலாம்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்
புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்
கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் பாரே
அநுபவிப்பார்
பாவிகள் அந்தப் பணம்"

எனவரும் ஔவையார் பாடலினும், உடல் 'கூடு' எனவே குறிப்பிடப்பட்டுண்மை காண்க.

இங்ஙனம் குடம்பை என்னும் சொல்லுக்கு முட்டை எனவும், கூடு எனவும் அவரவர் கருத்திற்கு ஏற்றபடி இரண்டு வகையிலும் பொருள் கொள்ளுதற்குச் சான்றும் வாய்ப்பும் இருத்தலை நன்கு ஆராய்ந்து கடைப் பிடித்தே,

"குடம்பை முட்டையும் கூடும் ஆகும்"

என இருதிறப் பொருளையுமே பின்னைய நிகண்டுநூல் தழுவிக் கொள்ளுவதாயிற்று என்பது, இங்கு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது.

இன்னோ ரனையவை பலவும் கருதுங்கால், பண்டை யுரையாசிரியர்கள் தாம் காணும் உரை விகற்பங்களுக்கு உரிய சான்றுகள் ஏதேனும் கொண்டன்றித் தத்தம் மனஞ் சென்றவாறு உரை கூறியொழியும் இயல்பினரல்லர் என்பது நம்மனோரால் நன்கினிது தெளியப்படும்.

சிறந்த கவிதையின் நலம் :

இவ்வுரைத் திறங்கள் ஒருபுறம் இருப்ப, இத்திருக்குறளால் தெய்வப் புலவர் திருவள்ளுவர்தம் மெய்யுணர்வின் மேம்பாடும், மிகச் சிறந்த கவிதை நலமும் இனையவென்பது இனிதறியக் கிடக்கின்றது. குடம்பையும் புள்ளுமாகிய உவமைகள், உடம்பும் உயிருமாகிய இரண்டும் ஒன்றினை யொன்று விட்டு நீங்கும் என, அம்மட்டுமே உணர்த்த வந்துள்ளன, என்று உரையாசிரியர்கள் கொண்டிருப்பதாகக் கருத இடனுளது. ஆனால் மிகச் சிறந்த கவிஞரும் மெய்யுணர் வாளருமாகிய திருவள்ளுவர் வேறு பிறகருத்துக்களையும் ஈண்டுக் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

"ஒரு சிறந்த கவிதையில் அமைந்துள்ள ஒவ்வொரு சொல்லும், செவ்விய ஆழ்ந்த பொருட் குறிப்பை உடையதாக விளங்கும். நன்கு சுருதி கூட்டி வைக்கப் பெற்ற யாழின் நரம்பினைக் கலைஞன் ஒருவன் தன் மெல்லிய விரல்களால் தைவந்து திறம்பட மீட்டி விடுப் பின் அதனினின்று அலையலையாக இனிய நாதம் எழுந்திசைப்பது போன்று, ஓர் உயர்ந்த கவிதையின் ஒவ்வொரு சொல்லும் அறிஞர்கள் ஆராயுந்தோறும் புதிய புதிய நுண் பொருட் குறிப்புக்களை யுணர்த்தி நிற்கும்" (1)

இங்ஙனம், நுண்ணிய ஆழ்ந்த பொருட் குறிப்புக்களை எண்ணி எண்ணியுணருந் தோறும் புலப்படுமாறு தோற்றிக் கொண்டு நிற்றலே, ஒரு நல்ல கவிதைக் குரிய சிறப்பான இயல்பாகும். "பளபளப்பு மிக்க வண்ணப் பட்டாடையினைப் போன்றது கவிதை. அவரவர்கள் தத்தம் எண்ணத்திற்குப் பிடித்த வண்ணங்களை அதனினின்று எடுத்துக்கொள்ளலாம்." (2)

"நல்ல கவிதைகள் என்பவை, அவரவர்கள் தத்தம் ஆற்றலுக்கு ஏற்றவகையிற்பொருள் கொள்ளும்படி, விரிந்து பரந்து விளங்கும்" (3)

கடலின் கண் மூழ்கி ஆழமாகச் சென்று முத்துக்குளிப்பவர்கள் முத்தெடுப்பது போல, அழகிய இனிய கவிதையாகிய கடலில், சிறந்த அறிஞர்களாகிய முத்துக் குளிப்பவர்கள், தம் நுண்மாண் நுழைபுலனால் ஆழ்ந்து நுணுகிச் சென்று பல அரும் பொருட் குறிப்புக்கள் ஆகிய முத்துக்களைக் கண்டெடுத்து உலகுக்கு விரித்துரைத்து விளக்குவார்கள்.

அதற்கு ஏற்ப இத்திருக்குறள் நாம் நீள நினைந்து எண்ணுந்தோறும், பல அரிய நுண்ணிய கருத்துக்களைப் புலப்படுத்திக் கொண்டு பொலிவுற்றுத் திகழ்கின்றது.

"தாழ்ந்த நெடுநீர்க் கடலாழம்
சார்ந்து தடவி மிகமுயன்று
வீழ்ந்து தேடி நுளையர்குழாம்
விளையும் மணிகள் கொணர்தலைப்போல்,
ஆழ்ந்து பெருநூல் இடைக்கிடந்த
அரிய பொருள்கள் பலவற்றை
வாழ்ந்த புலமைப் பேரறிஞர்
வகுத்து விளக்கி மகிழ்விப்பர்!

—தழுவற் செய்யுள், ஆசிரியர்.

மெய்யுணர்வுக் கருத்து :

பறவைகள் கூடு கட்டும் இயல்பினை நாம் ஊன்றிப் பார்ப்பதில்லை. பறவைகள் தொடக்க முதலே கூடுகட்டி வாழ்வதில்லை. தத்தமக்குரிய இரை தேடியுண்டு மரக்கிளை களில் வைகிக் கவலையின்றித் தாம் தாம் வேண்டும் இடங்களில் திரிந்து பறந்து பொழுது கழிப்பதே பறவைகளின் இயற்கை. ஆயினும் சூல் கொண்டு முட்டையிட்டு அடை காத்துக் குஞ்சு பொரிக்கும் நிலை நெருங்கும் காலத்தில் மட்டுந்தான், பறவைகள் கூடு கட்டி வாழத் தலைப்படும். இவ்வியல்பு

"சூன்முதிர் துள்ளுநடைப் பெடைக்
கிற்றுணைச் சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக்
குதர்செம்மல் ஊரன்"

என மணிவாசகர் அருளிய திருக்கோவை யார் செய்யுளாலும்,

"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக்
கரும்பின்
நாறு வெண்பூக்கொழுதும்......"

எனவரும் குறுந்தொகை (85)ச் செய்யு ளாலும் உணரப்படும். கூடுகட்டிய பறவை அதன்கண் நெடுநாள் தங்குவதில்லை. முட்டை யிட்டு அடைகிடந்து குஞ்சு பொரித்து, அக் குஞ்சுகளை வளர்த்த பின்னர் அக்குஞ்சுகளை யும் போக்கித்தானும் அக்கூட்டினை விட்டுப் பறந்து போய்விடும்.

ஆணவமல இருளின்கண் அறிவு மயங் கித் தரிதரும் உயிர் ஆகிய பறவையானது, இருவினைப் போகம் நுகருதற் பொருட்டு இடையே வேண்டப்படும் உடம்பு ஆகிய கூட்டில், கருவுயிர்த்தல் ஆகிய வினைப் பரிபாகம் எய்தும் அளவும் வைகியிருந்து, பின் வினைக்கழிவின்கண் விட்டுப் பிரிந்தொழி யும் என்னும் மெய்யுணர்வுக்கருத்தும் பிறவும், இத்திருக்குறளில் அமைந்து திகழ்கின்றது. "வினைப்போகமே ஒருதேகங் கண்டாய் வினை தான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" என வரும் பட்டினத்தடிகள் திரு மொழியும் ஈண்டுச் சிந்தித்தற் குரியது.

முடிவுரை :

இன்னோரன்ன அரும்பெருங் கருத்துக்கள் பலவும் அமைய இவ்வழகிய திருக்குறள் மணியினைச் செவ்விதின் அருளிச் செய்த ஆசிரியர் திருவள்ளுவரின் அளப்பரிய பெரு மாட்சிமையை, யாம் என் என்போம்! "கரை யற்ற தொன்றைக் கரை காணலாகுமோ?",

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

லால்குடி தம்பாச்சியாப்பிள்ளை சத்திரத்தில், திருக்குறள்வேள் திரு.ஜி. வரதராஜப்பிள்ளை, பி.ஏ., அவர்கள் ஆதரவில், 15—5—69 முதல் 29—5—69 வரையில், சைவ சித்தாந்த வகுப்புகள் நடைபெற்றன. தமிழாசிரியர்களும், தமிழ் எம்.ஏ., தேறியவர்களும் ஆகிய மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர். திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்கள், சிவப்பிரகாசம் பற்றியும்,வித்துவான் திரு. ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்கள்'அகத்தியர் தேவாரத்திரட்டு' பற்றியும் முறையே காலை மாலை இருவேளைகளிலும் வகுப்புக்கள் நிகழ்த்தினர். பின்னர் இரவில் 8 மணி முதல் 10 மணி வரையில் வாளூர்ச் சைவ சிந்தாந்த சபையினர் விரும்பி வேண்டிக்கொண்டபடி, திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேல் எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்கள், பொதுமக்களுக்குப் பயன்படும் பொருட்டு "உண்மை விளக்கம்" என்னும் சைவ சித்தாந்த நூலை 18—5—69 முதல் 28—5—69 முடிய, வகுப்பு முறையில் பாடம் நடத்தினர்கள். தக்கவர்கள் பலர் வகுப்பிற் கலந்துகொண்டு பயன் அடைந்தனர்.

—ஆசிரியர்.

ஞானத் தொண்டர்

[திரு. டாக்டர் மு. வரதராசனுர், M.A., M.O.L., Ph.D.,
தமிழ்ப் பேராசிரியர் – சென்னைப் பல்கலைக் கழகம்]

காந்தியடிகளால் உலகறியச் செய்யப்பட்டது 'சத்தியாக்கிரகம்' என்னும் அன்புவழிப் போராட்டம். காந்தியடிகளால் அதன் பெருமை தெளிவாக்கப் பட்டது; அதன் முறை நன்கு பயன்படுத்தப்பட்டது; அரசியல் துறைக்கும் உரியது அது எனப் புலப்படுத்தப் பட்டது. ஆனால் அந்த அன்புவழிப் போராட்டம் முன்னமே நம் நாட்டில் இருந்து வந்த ஒன்று. திருநாவுக்கரசு நாயனுர் நம் நாட்டின் முதல் சத்தியாக்கிரகியாக விளங்கிய சான்ருேர் என்று திரு. வி. க. கூறுவதுண்டு. பழையாறைவடதளியில் சிவபெருமான் திருவுருவம் மறைக்கப்பட்டதை உணர்ந்து உண்ணு நோன்பு இருந்து, அங்குப் பண்டைய நிலைமை நிலவுமாறு செய்த பெருமை அவர்க்கு உரியதாகும். அவருடைய சத்தியாக்கிரக உண்ணு நோன்பால் அரசன் மனமாற்றம் அடைந்து ஆவன செய்தான் என்று வரலாறு கூறுகின்றது.

கல்வி கேள்வியறிவில் சிறந்த அறிவாளிகள் உடலுழைப்பும் செய்யவேண்டும் என்பது இந்த நூற்றுண்டில் சான்ருேர் சிலர் அறிவுறுத்திவரும் கொள்கையாகும். டால்ஸ்டாய், காந்தியடிகள் முதலான பலர், அந்தக் கொள்கையின்படியே வாழ்வும் நடத்தி வழிகாட்டினர்கள். அறிவால் உணர்வால் தொண்டு செய்தல் மட்டும் போதாது; உடலுழைப்பாலும் தொண்டு செய்தல் வேண்டும் என்பதே பழங்காலக் கோயில் வழிபாட்டில் அமைந்திருந்தது. அவ்வாறு பழங்காலத்திலேயே வழிபாட்டில் உடலுழைப்பின் பெருமை விளங்க வாழ்ந்து காட்டிய சிறப்பும் அப்பர் பெருமானுக்கு உண்டு. கையிலே உழவாரம் ஏந்தி ஊர் ஊராகச் சென்று ஆங்காங்கே கோயில்தோறும் கல்லும் புல்லும் ஒதுக்கித் தூய்மைப்படுத்தியவர் அவர். தருமசேனர் என்ற உயர்பட்டம் பெற்றுச் சைன அறிஞர் கூட்டத்தின் தலைவராக விளங்கிய அறிஞர்—கற்றறிந்தவர்க்குத் தாம் வரம்பாய்த் திகழ்ந்த தெளிவினர்— இனிய செந்தமிழ்ப் பாக்களை இசையுடன் ஆயிரக்கணக்கில் பாடிய கலைஞர்—அந்த உழவாரத்தை விடாமல் ஏந்திச் சென்று கோயில் தோறும் கையால் தொண்டு செய்த புதுமை இந்த நாட்டில் பதின்மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது என்பதை உணரும்போது, உள்ளம் வியப்பில் ஆழ்கிறது. காந்தியடிகளுக்கு நூல் நூற்கும் இராட்டினம் போல், அப்பர் பெருமானுக்கு உழவாரப் படை கைத்தொண்டின் அறிகுறியாக விளங்கியது என்பதை, நாம் உணர்ந்து போற்ற வேண்டும்.

இன்னெரு வகையிலும், திருநாவுக்கரசரின் பெருவாழ்வு இக்காலத்துக் காந்தியடிகளின் பெருவாழ்வுக்கு முன்னேடியாக விளங்கியது. கடவுளையும் கடவுளாட்சியையுமே போற்றி வாழும் உறுதியான நெஞ்சம் பெற்றுவிட்டவர்கள், இவ்வுலகத்து இன்ப துன்பங்களையும் ஆட்சியின் அதிகாரப் பெருமைகளையும் பொருட்படுத்துவது இல்லை. அத்தகைய உத்தமர்கள் இறைவன் ஒருவனுக்கே தாம் ஆட்பட்டவர்கள் என்றும், வேறு எந்த மண்ணுலக வேந்தனுக்கும் தாம் கடமைப்பட்டவர்கள் அல்லர் என்றும் தெளிவுகொண்டு, பெருமிதத்துடன் வாழ்பவர்கள். ஆதலின்

அவர்கள் அரசாட்சியின் அடக்குமுறையைக் கண்டோ வேறு இன்னலைக் கண்டோ சிறிதும் அஞ்சுவதில்லை. அப்பர் பெருமானின் வாழ்க்கையில் நேர்ந்த மாறுதலை எண்ணி வெறுப்பும் பகையும் கொண்டு, அவரைத் துன்புறுத்த முனைந்தான் அக்காலத்து அரசன். அங்நிலையில் அரசனுடைய ஆட்களைப் பார்த்து அவர் பாடியருளிய பாடல், பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க சிறந்த திருப்பாடல் ஆகும்.

நாமார்க்கும் குடி அல்லோம்
 நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
 நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம்
 பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும்
 துன்பம் இல்லை
தாமார்க்கும் குடி அல்லாத்
 தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண்
 குழைஓர் காதின்
கோமாற்கே நாம் என்றும்
 மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே
 குறுகி னோமே.

எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே இந்த உலகை எக்காலத்திலும் ஆண்டுவரும் தலைவன் என்றும், அவனுடைய ஆட்சிக்கே தாம் கட்டுப்பட்டவர் என்றும் உணர்ந்துவிட்ட சான்றோர் 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்' என்று அஞ்சாமையுடன் எடுத்துரைத்தார். தனிமனிதனின் உரிமையைச் சாய்க்கும் சக்தி தோன்றக் கூடாது என்றும், மனச்சான்றின்படி நடக்க ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை இருக்கவேண்டும் என்றும் தெளிவாக எடுத்துரைத்து, அதற்காகப் போராடியவர் காந்தியடிகள். அவ்வாறு போராடுவதால் நேரும் துன்பங்களை எல்லாம் துன்பமாகவே கருதாதவர் அவர். பல ஆண்டுகள் சிறையில் கிடக்க நேர்ந்த காலங்களிலும்மனம்கலங்காதவர்அவர். அவர் பெற்ற தெளிவிலும், போராடிய போராட்டத்திலும் அடிப்படையாக விளங்கியது எது? உண்மை என்னும் தெய்வம் தவிர வேறு எந்த மண்ணுலகச் சக்திக்கும் தாம கட்டுப்படக் கூடாது என்று பூண்ட உறுதியே ஆகும். அதனாலேயே வரலாறு காணாத வல்லரசாக விளங்கிய ஆங்கில அரசாங்கத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் எதிர்க்க அவரால் முடிந்தது. 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்' என்ற பொன்மொழியில் புலப்படும் அப்பர் பெருமானின் அஞ்சாநெஞ்சம் அத்தகைய கடவுளாட்சியில் உறுதியான பற்றுக் கொண்டது. மண்ணுலகத்துப் பதவியும் பரிசும் அத்தகைய நெஞ்சத்தைக் கவர முடியாது ; அடக்கு முறையும் அதிகாரமும் அச்சுறுத்தவும் முடியாது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற வீர முழக்கத்தில் அந்த உறுதியும் அஞ்சாமையும் தெளிவாக விளங்குகின்றன.

கடவுள் நெறியினை உணர்ந்துவாழ்க்கையினை நடத்திப் பயின்றவர்களுக்கு மரணம் பற்றிய அச்சமும் இல்லை. 'சாதலை முன்னம் அஞ்சேன்' என்று எடுத்துரைக்கும் வீரம் அவர்களுக்கு இயல்பானது. 'நமனை அஞ்சேன்' என்று நாவுக்கரசர் கூறுவதில் அந்தப் பெருமிதம் காண்கிறோம். 'உடல் நான் அன்று' என்று வாயால் பேசுதல் எளிது. ஆனால் உடலுக்கு ஊறுவிளைக்கும் நோய் வந்து உற்ற போது, உடல் நான் அன்று, என்னை இந் நோய் என்ன செய்யும் என்று அதனைப் பொருட்படுத்தாமல், புறக்கணிக்கும் பெருமிதம் வெறுங் கல்வியாலும் கேள்வியாலும் மட்டும் வராது. கடவுள் நெறியில் உறுதியான உணர்வு பெற்றுத் தெளிந்த வாழ்வு வாழ்வோர்க்கு மட்டுமே அது கைகூடுவதாகும். நாவுக்கரசர் 'உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்த ஞானப்பேறு' பெற்றவர். ஆகையால் அவர்க்கு அது எளியது ஆயிற்று.

மரணத்துக்குப் பிறகு மறுமையில் என்ன நேருமோ என்ற கவலையும் நாவுக்கரசர்க்கு இல்லை. நரகமே வாய்ப்பதானாலும், அங்கும் இடர்ப்பாடு இல்லை என்ற நம்பிக்கை அவர்க்கு இருந்தது. 'எள்ளேன் நரகம் புகினும்' என்ற மாணிக்க வாசகரின் தெளிவும் அத்தகையதே

ஆகும். எங்கும் உள்ள இறைவன் நரகத்திலும் உள்ளான்; அவனுடைய அருளாட்சி இல்லாத இடமேயில்லை என்றால், நரகத்தை நினைந்து கவலையுறுவதற்குக் காரணமே இல்லை. இறைவனுடைய அருளை நம்பி வாழும் பேறுபெற்றமையால் 'நரகத்தில் இடர்ப்படோம்' என்றார். எது கிடைக்கும் என்று பெறுவதைப் பற்றிக் கருதாமல், எப்படி வாழ்வது என்று நெறியைப் பற்றியே கருதும் உள்ளம் பெற்ற சான்றோர் அவர், என்பதை இதனால் தெளியலாம்.

அவ்வாறு, நெறியைப் போற்றுதலே தம் கடமை என்பதை, அடுத்து அறிவுறுத்துகிறார். நரகத்தில் இடர்ப்படாமல் வாழமுடியும் என்ற நம்பிக்கைக்குக் காரணம் இடர்ப்பாட்டுக்கு வித்தான பொய்ம்மை தம் வாழ்வில் இல்லை என்பதைத் தெளிவாக்குகிறார். 'நடலை இல்லோம்' என்கிறார். நடலையான பொய்ம்மை இல்லாத வாழ்வு எம் வாழ்வு என்று கூறவல்ல தூய்மை வாழ்வில் ஒளிரும்போது, அவர் எந்த இடர்ப்பாட்டுக்கு? ஏன் அஞ்சவேண்டும்? ஆகவே தலை குனிவு இல்லாத பெருமிதமான வாழ்வு எம் வாழ்வு. இடர்ப்பாடு இல்லாத காப்பு அமைந்த வாழ்வு எம் வாழ்வு என முழங்குகிறார். 'ஏமாப்போம்' என்கிறார்.

பொய்ம்மையும் இடர்ப்பாடும் இல்லாத வாழ்வில், மனத்தில் கவலை காரணமாக உடலில் விளையும் நோய்களுக்கு இடம் இல்லை. மனத்தின் மெலிவும் அலைவும் நாடி நரம்புகளை அரித்து இரத்தத்தைக் கெடுத்துப் பல நோய்கள் ஏற்படுத்துகின்றன என்பதை இக்காலத்து மருத்துவ நூலார் உடன்பட்டு வருகிறார்கள். நெறியில் நிலைத்துவிட்ட சான்றோர்களின் தூய வாழ்வில் அத்தகைய நோய்கள் தோன்றுவதற்கு இடம் இல்லை. அதனால்தான், நடலை இல்லோம் ஏமாப்போம் என்ற திருநாவுக்கரசர், தயங்காமல் 'பிணி அறியோம்' என்றும் முழங்கினார்.

தூய்மையும் வீரமும் இணைந்த அந்தப் பெருவாழ்வு இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாரையும் பணியாத சிறப்பு உடையது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று தம் உரிமையை முழக்கிய அவர் ஆட்சிக்கு மட்டும் இல்லாமல் வேறு எதற்கும் பணிவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தப் 'பணிவோம் அல்லோம்' என்கிறார். கணவன் ஒருவன் தவிர வேறு எந்த ஆடவனின் ஆண்மையையும் பொருட்படுத்தாத கற்புடைமை போன்ற திட்பம், கடவுளடியார்களுக்கு உண்டு. அந்தத் திட்பத்தையே 'பணிவோம் அல்லோம்' என்ற தொடர் புலப்படுத்துகிறது.

இறுதியாக நாவுக்கரசர் தம் கொள்கைத் தெளிவாகக் கூறிய கருத்து, 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்பது ஆகும். உலகை ஒரு குடைக்கீழ் ஆளுகின்றோம் என்ற அரச செல்வம் பெற்றவர்களும், எமக்கு நிகரான செல்வம் படைத்தவர் இந்த உலகத்தில் எவரும் இல்லை என்று கருதும் பொருட் செல்வம் படைத்தவர்களும், கல்வியறிவில் எம்மை வெல்லவல்லார் எவரும் இல்லை என்று செருக்குக் கொள்ளும் கல்விச் செல்வம் பெற்றவர்களும்ஆகிய, பலர்வாழ்க்கையை வரலாறு கண்டிருக்கிறது. ஆனால் அவர்களுள் யாரும் 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்று முழங்க முடியாது. சேரன் செங்குட்டுவன் போன்ற வீர மன்னர்களும் 'துன்பம் அல்லது தொழுதகவு இல்லை' என்றே தம் முடியாட்சியின் அனுபவத்தைப் பற்றிக் கூறியுள்ளனர். 'கிரீடம் சூடும் தலையில்தான் கவலை குடிகொள்கின்றது' என்று ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் விளக்குகிறார். பெருஞ் செல்வர்களே பெருங் கவலையாளர்கள் என்பதை இன்றைய சூழ்நிலையிலும் காணலாம். கல்வியில் தேர்ந்த அறிஞர் பலர் வாழத் தெரியாதவர்களாய்க் கலங்குவதை இன்றும் காணலாம். 'இங்நிலையில், நாவரசர் போன்ற அருள் நெஞ்சச் சான்றோர்களே துன்பமற்ற அமைதியான வாழ்வு வாழ்கின்றவர்கள் என்பதை ஐயமின்றி உணரலாம். அதை அவர் கூறும்போது எவ்வளவு தெளிவாக அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார்? இன்பமே என்கிறார். துன்பம் இல்லை என்கிறார். ஒரு சில காலம் மட்டும் உள்ள நிலை அன்று, எந்நாளும் உள்ள

நிலை என்கிருர், இன்பமே எந்நாளும் என்றும், எந்நாளுமே துன்பம் இல்லை என்றும், உடன்பாடு எதிர்மறை ஆகிய இருவகையாலும் கூறி வற்புறுத்துகிருர்.

இந்த உயர்நிலை பெறுவதற்கு அரிய பெரும்பேறு, இதற்கு அடிப்படை தாம் பெற்ற கடவுளுணர்வும் அதற்கு ஏற்றவாறு தாம்நடத்தும் நெறியான — உறுதியான வாழ்வுமே என்பதைக்கூறி, அந்தப் பாடலை முடிக்கிருர்.

கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே
குறுகி னேமே.

இப்பாடலிற் புலனுகும் தூய்மையும் தெளிவும் பெருமிதமும், உலகில் பல நாடுகளில் வாழ்ந்த கடவுளடியார்களின் வாழ்வில் விளங்கியவைகளே. ஆயினும் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வளவு தெளிவாகத் தம் சொற்களாலேயே ஒருவர் உணர்த்தியுள்ளார், பாட்டாக வடித்துள்ளார் என்ருல், அவர் திருநாவுக்கரசரே என்பது இங்கு உணரத் தக்கதாகும்.



திருவுசாத்தானம் குடமுழுக்கு விழாவில், கலந்துகொண்ட பெருமக்கள். (24—4—69)

தமிழ் அமுது

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள்.

"தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்பது பாவேந்தர் பாட்டு. இந்தக் கருத்துப் புனைந்துரையும் அன்று-பொய்யும் அன்று. உண்மை-முக்காலும் உண்மை. அமுது சாவா மருந்து என்பர் புராணநூலறிஞர். ஆம்; தமிழும் சாவா மருந்து. தமிழ், வாழ்க்கையில் வளர்ந்த மொழி-வாழ்க்கையை வளர்க்கும் மொழி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்க்கையின் நல்லியல்புகளைக் கண்டு காட்டிய பேரிலக்கியம் அறநூல்-முழுதுறழ் ஒழுக்க நூல்-ஆய எல்லாமாக விளங்கும் திருக்குறளைக் கண்டெடுத்த மொழி. சமுதாயத்தின் படிமுறை வளர்ச்சியில் முதற்படியில் நாகரிகம் தோன்றும். அதனைத் தொடர்ந்து பண்பாடு தோன்றும். அதனைத் தொடர்ந்து விழுமிய சமயம் தோன்றும். இந்தப் படிமுறைகளை முழுதும் உணர்த்தும் நூல் திருக்குறள்.

காலத்தினையும் தூரத்தினையும் இன்றைய அறிவியல் வெற்றி கொண்டிருக்கிறது. இவ்வெற்றியின் நிழலாக இனம் தெரியாத அச்சமும் தோன்றியுள்ளது. அதாவது போர் வழிப்பட்ட அச்சமாகுமது. இந்த அச்சத்தினின்று உலகம் விடுதலை பெற விரும்புகிறது. அதன் காரணமாக நாடு இன மொழி சமய வேறுபாடுகளைக் கடந்து விழுமிய ஒருமைப்பாட்டுணர்வுடைய ஒரு சமுதாயஅமைப்பைநல்லவர்கள் விரும்புகின்றனர். ஆனால் திருக்குறள் இரண்டாயிரமாண்டுகட்கு முன்பே இத்தகைய ஒரு சமுதாயத்திற்குக் கால்கொள்ளச் செய்தது. திருக்குறள் முழுதும் எழுத்தெண்ணிப்படித்தாலும் சாதி இன மொழி சமயப் பெயர்கள் தென்படவில்லை. திருக்குறள் தமிழ் நாகரிகத்தில் கால்பாவி உறுதியாக நிற்கிறது; அதே போழ்திலும் உலக மானிட சமுதாயத்தைத் தழுவியும் நிற்கிறது.

"ஒழுக்கம்" இது தமிழுக்கே உரிய தனிச் சொல்-பொருள் நிறைந்த சொல்-நடைமுறையை நினைவுபடுத்தும் சொல். ஒழுக்கத்திற்குப் பலபட விதிகளும் விளக்கங்களும் சொல்வார்கள். பொதுவாக ஒரு மனிதன் தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் தன்னுடைய உடல்நலனைக் கருதியும் ஆன்ம நலன் கருதியும் கைக்கொள்ளும் சில நல்ல பழககங்களையே ஒழுக்கம் என று சிலர் கருதுகின்றனர். உதாரணமாகக், காப்பி, தேநீர் முதலியன குடித்தல், புகைபிடித்தல், திரைப்படம் பார்த்தல், முதலியவற்றை விலக்குதலும் அளவோடு உண்ணுதலும் நல்ல பழக்கம். இப்பழக்கங்களை ஒழுக்கத்தின்பாற் படுத்துவதில் குற்றமில்லையாயினும் காலப்போக்கில் ஒழுக்கத்தைப் பற்றிய தெளிவான கருத்து இல்லாமலே போய்விடுகிறது. திருக்குறள் உலகத்தோடு அதாவது உலகத்தில் வாழும் மக்கட் சமுதாயத்தோடு இணைந்து வாழுதலையே ஒழுக்கம் என்று கூறுகிறது.

> "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்"

என்றும் ஒப்புரவியலில் "ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்" என்றும் கூறுகிறது.

மனிதன் போற்றிக் காப்பாற்ற வேண்டிய விழுமிய ஒழுக்க நெறியில் தலையாயது மனித குல ஒருமைப்பாடு-அதாவது கோடிப்பேர் கூடித் தொழில்செய்து வாழ்வது.

இத்தகு ஒருமைப்பாடு நிறைந்த வாழ்க்கையையே திருக்குறள் கல்வியின் பயன் என்றும், வாழ்க்கையின் ஒழுக்க நெறி என்றும் கூறுகிறது. மனிதனோடு பிறந்த பகை பல உண்டு. ஆயினும் ஒரு பகையை வென்று விடுவானாயின் மற்ற எல்லாப் பகைகளையும் அந்த ஒரு வெற்றியின் மூலமே வெற்றி

கொள்ள முடியும். அந்த ஒருபகையானது அறியாமை ஆகும். சமய நூல் இதனை அஞ்ஞானம் என்று கூறும். அறியாமை அஞ்ஞானம் எனப் பெற்றால் அதனை அறிவு இல்லாமை என்று, பொருள் கொள்ளக் கூடாது. உயிர்க்கு இயல்பிலேயே அறிவு உண்டு. ஆனால் அந்த அறிவு முரண்பட்டதாகவும் மாறுபாடு கொண்டாதாகவும் இருக்கிறது. அந்தக் குறைபாடுடைய அறிவினை நிறையுடையதாக்கிக் கொள்ளுதலே வாழ்க்கை. அந்த அறிவுக்குரிய குறையினை நிறைவு செய்தற்குரிய வழிகள் (1) சிந்தனை, (2) கற்றல், (3) கேட்டல், (4) ஒழுகுதல், (நடைமுறைப்படுத்துதல்)ஆகியவையே யாம். திருக்குறள் எந்தவித விதிவிலக்கும் இன்றி இரண்டு பொருள் படாமல் "கற்க" என்று ஆணையிடுகிறது. "கற்பவை கற்க" என்று ஆணையிடுகிறது. "கசடறக் கற்க" என்று ஆணையிட்டுக் கற்றலின் பயனை அறிவுறுத்துகிறது. கசடறக் கற்றல் என்பதற்குப் பொருட் பிழையின்றிக் கற்றல் என்று பொருள் கொள்ளுதல் முறையன்று. கசடு என்ற சொல்லுக்கு இங்குப் பொருட் பிழை என்ற பொருள் பொருந்தாது. கசடு என்ற சொல்லுக்கு அறிவுக்குற்றம் என்றே பொருள் கொள்ள வேண்டும். உயிர் அறிவில் உள்ள குற்றம் நீங்குகிறவரையில் கற்க வேண்டுமென்பதே ஏற்றது. உயிர் அறிவில் உள்ள குற்றங்கள் பலவற்றுள்ளும் மிகக் கொடுமையானது, காரணம் பற்றியோ காரணமில்லாமலோ வேற்றுமைகளை வளர்த்துப் பகையைத் தோற்றுவிப்பது ஆகும். மனிதன் சாவதற்குள்ளாகவாவது முயன்று ஒழுக்க நெறி நிற்றல் வேண்டும். எந்த நாடாக இருந்தாலென்ன? அந்தந்த நாட்டையும் அந்தந்த ஊரையும் ஆங்காங்கு வாழும் மக்களையும் உடன்பிறந்தாராக ஏற்றுக்கொண்டு உறவு கொண்டு வாழ்தலே கல்வியின் பயன் என்று உணர்த்துகிறது திருக்குறள்.

> "யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு"

இத்தகைய பெருங்கேண்மையுடைய மனித சமுதாயம் தோன்ற வேண்டும். அன்பு என்ற பயிர் செழிக்க வேண்டும். தீமை என்ற களை களையப்பெறுதல் வேண்டும். இந்த இரண்டு கடமைகளையும் தெளிவாக ஆனால் உறுதியாக எளிமையாக, ஆனால் உணரக் கூடிய வகையில் திருக்குறள் உணர்த்துகிறது.

உடல் உயிர் கூடி இயங்கும் இந்த வாழ்வியல் மிகமிக நுட்பமானது. திருக்குறள் "தீமை கொடியதா" "தீ கொடியதா" என்று ஆராய்கிறது. இந்த ஆராய்ச்சியை ஒன்றே முக்கால் அடியில் மிகமிக ஆழமாக ஆராய்கிறது. தீ புறத்தே தெரிவது. வைக்கப்படும் பொருள்கள் எரியும். ஆனால் வைப்பவர் எரிவதில்லை. ஆனால் தீமையோ அப்படியன்று. விறகு எரியாமல் இன்னொன்றைப்பற்ற வைக்கமுடியாது. அதுபோலப் பிறருக்குத் தீமை செய்கிறவன் தான் கெட்டுப்போகாமற் பிறருக்குத் தீமை செய்ய முடியாது. ஒரு மனிதன் தன்னளவில் கணிசமான அளவு கெட்டுப்போன பிறகே பிறருக்கு ஓரளவு தீங்கு செய்ய முடியும். இவன் கெட்டுப்போவதைவிட இவன் கெட்டுப் போன அளவை நோக்கப் பிறர்க்குச் செய்த தீங்கின் அளவு குறைவாகவே இருக்கும். ஆதலால் தீயைத் தொட்டாலும் தப்பித்துக்கொள்ளலாம். தீமையை நெஞ்சால் நினைத்தவர்கள் தப்பித்துக்கொள்ளவே முடியாது, என்று விளக்குவதின் மூலம் மனித சமுதாயத்தினின்று தீமையை அகற்றினால் களையற்ற கழனியில் பயிர் செழித்து வளர்வதுபோல, தீமையற்ற சமுதாயத்தில் மனித குலம் செழித்து வளரும் என்று, திருக்குறள் வாழ்க்கையை வழிமுறைப் படுத்துகிறது.

தீமையாகிய களையை நீக்கியவுடன் அன்பு என்ற பயிரை வளர்க்க வேண்டும். உடலுக்கு மூச்சு, காற்று. உயிருக்கு மூச்சு அன்பு. இது ஆன்றோர்நெறி. யோசிக்கும் வேளையில்பசிதீர உண்டு வேடிக்கை மனிதராய்வாழ்வோருக்கு, உயிர்உடம்பிலேயே, உடலுறுப்புக்களிலேயே இருக்கிறது. அந்த உறுப்புக்களுக்கு இடையூறு நேரும்போது உயிர் பிரிகிறது. ஆனால் சான்றோர்க்கு உயிர் உடம்பளவில் மட்டும் இருப்பதில்லை. இது தமிழ் வழக்கு. பாண்டியப் பேரரசன் நெடுஞ் செழியனின் உயிரிருப்பு அரச நீதியில் இருந்தது. அதற்குப்பிழை ஏற்பட்டபோது அது பிரிந்தது. பாண்டியமாதேவியின் உயிரிருப்பு கற்பிலிருந்தது. கணவன் மீதிருந்தது. அதற்குப் பிழை ஏற்பட்டபோது தன்னியல்பாகப் பிரிந்தது. திருவள்ளுவர் எல்லா மனிதர்களுடைய உயிர்களையும் மற்றவரிடம் அன்பு காட்டுகிற ஒழுக்கத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும் என்று கூறுகிறார். உயிரியல் வாழ்க்கையின் வழியாக அமைந்து, வழக்கமாக மாறவேண்டும் அன்பு காட்டுதல் என்று கூறுகிறார்.

இங்ஙனம் சிறந்த முறையில் வாழ்வியலைக் கண்டு காட்டிய திருக்குறள், தமிழ் நூலாக இருப்பது தமிழுக்குப்பெருமை. அதனாலேயே அமுது என்று பெயர்பெறுகிறது. ஆயினும் தமிழர்கட்குப் பெருமை திருக்குறளை வைத்திருப்பது மட்டுமாகாது. திருக்குறள் வாழ்க்கையை மேற்கொள்வதன் மூலம்தான் தமிழர்கட்குப் பெருமை ஏற்படமுடியும். தேவ அமுதுக்குச் சாவா மருந்து என்று பெயர். ஆயினும் தன்னலத்தின்பாற்பட்ட விருப்பு வெறுப்புக்களிற் சிக்கிய விண்ணோர்கள் "அமுதுண்டும் செத்தார்கள்." ஆனால் குறைவிலா நிறைவாக விளங்கும் சிவபெருமான் சாவதற்கே உரிய நஞ்சுண்டும் சாகவில்லை, வாழ்ந்தான். சாவுக்கும் வாழ்வுக்கும் நஞ்சும் அமுதும் மட்டும் காரணமன்று. உளம் சார்ந்த தன்மையும் முக்கியம். அதுபோலவே தமிழினத்தின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் தமிழ் அமுதாக இருப்பது மட்டும் போதாது. அந்தத் தமிழ் அமுதைப் பருகிவளரும் தமிழினம் இன்ப நலத்தில் சிறந்து விளங்கினாலேயே தமிழினத்திற்குப் பெருமை; தமிழகத்திற்குப் புகழ்; அவ்வழி திருக்குறளுக்கும் சிறப்பு.

இந்தச் சிறப்பினைத் தமிழர்கள் பெற்று விளங்க வேண்டும் என்ற பேருணர்வோடு, சென்ற காலத்தில் சிறந்த முறையில் பணி செய்து வந்துள்ள மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினர்க்கு நமது உளம் நிறைந்த வாழ்த்துக்கள். இனிப் பெற இருக்கும் எதிர்காலச் சிறப்புக்கு நம்முடைய பிரார்த்தனை. வள்ளுவர் புகழ்பாடி வண்மைத் தமிழ் வளர்க்கும் திருப்பணியில் ஈடுபட்டோரிடம் ஒத்துழைப்பு உரிமைவைப்பாகும்.

நாகூர் ஸ்ரீ நாகநாதசுவாமி கோயில் திருப்பணித் துவக்கவிழாவிற் கலந்து கொண்ட பெருமக்கள் (24—4—69).

திருக்குறள் கூறும் செல்வம்

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள்,
பேரூர் ஆதீனம், கோவை-10.

திருக்குறள் பொதுமறை; அனைவருக்கும் ஒப்ப முடிந்தவற்றைக் கூறுவது. வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையினை விளக்குவது, உறுதிப் பொருள்களிவை எனத்தெளிவிப்பது. திருக்குறளில் இல்லறம், துறவறமாகிய இரு நெறிகளும் பேசப்படுகின்றன. நாடாளும் நெறிகளும் பேசப் படுகின்றன. நாடாளும் அரசும், அமைச்சும் எப்படி இருக்க வேண்டும் என்று வரையறுக்கப் பட்டிருக்கின்றன. பண்புகள், ஒழுகலாறுகள் முதலியன, மனித வாழ்க்கையில் எவ்வாறு இடம் பெறவேண்டும் என்பன பல்வேறு கோணங்களிலிருந்தும் வலியுறுத்தப்படுகின்றன. இத்தகைய அமைப்புகளுக்கெல்லாம் முதன்மையாக அமைவது செல்வம் என்பதையும் திருக்குறள் வற்புறுத்திக் கூறுவதைக் காணலாம்.

செல்வம் என்ற சொல் திருக்குறளில் பல்வேறிடங்களில் கையாளப்படுகின்றது. திருக்குறளை ஒட்டி எழுந்த பண்டைய இலக்கியங்களிலும், இச்சொல் பயின்று வரக்காண்கிறோம். இச்செல்வத்தைப் பொருளென வழங்குவதும் உண்டு. பொருள் என்பது பலவற்றைக் குறிப்பது. அறம், பொருள், இன்பம், வீடு என்பதில், பொருள் வாழ்க்கையில் வளந்தரும் பலவற்றையும், அவ்வளத்தைப் பேணிப் பெறுமுறைமையையும் உணர்த்தும் சொல்லாக அமைகிறது. ஆனால் செல்வம் என்பது, பொன் மணியாதியவற்றைக் குறிப்பதாகக் கருதலாம். இதனை "நடுவண தெய்த இருதலையும் எய்தும்" என்று பழைமையோர் கூறுவர். திருவள்ளுவரும், பொருளுக்கும் செல்வத்துக்கும் வேற்றுமை கூறுபவர் போல "பொருள் என்னும் செல்வச் செவிலி" என்கின்றார். பொருளென்று சொல்லப்படுகின்ற செல்வம் எனக் கூறுதலால், செல்வத்தையும் பொருள் என்று கூறுவதுண்டு எனக் கொண்டு, பொருள் என்றே செல்வத்தையும் பல இடங்களில் கூறியுள்ளார். செல்வம் பொருளில் ஒரு கூருகக் கருதலாம்.

செல்வம் என்பது மேம்பாட்டுக்கும் புகழுக்கும் காரணமானது. உயர்வு தருவன வெல்லாம் செல்வமாகக் கருதப்பட்டன. ஆதலின் சான்றோரும் ஆன்றோரும் கூறும் அறிவுரைகளைக் கேட்பது சிறப்புடையது என்பதனை, "செல்வத்துட்செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை" என வள்ளுவர் கூறுகின்றார். மனித வாழ்வின் மேம்பாட்டுக்கும் புகழுக்கும் பெரிதும் துணை புரிவது கல்வி. கல்வி இல்லாதவர் வாழ்க்கை இருண்ட வாழ்க்கை. சிற்றுயிர்க்கு உற்ற துணையாக அமைவது கல்வியே ஆதலின் திருக்குறள் "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று வற்புறுத்துகின்றது. கற்றுக் கேட்டுத் தெளிந்த அறிவின் பயன், பிறிதொன்றிற்கு வரும் துன்பத்தைக் கண்டு, தனக்கு வந்தது போல வருந்தும் இரக்கப் பண்பு எனலாம். இத்தகைய அறிவினுல் இருள் நீங்கி இன்பம் எய்தலாம். மருளற்ற வாழ்வு அருள் வாழ்வு. அருளை வளர்ப்பதே மனித இனம் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுதற்குரிய வழியாகும் இவ்வருட் செல்வம் மேலானது என்று கருதுகின்றார், தெய்வப் புலவர் திருவள்ளுவர். அதனை "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள" என்று குறட்பா தெளிவுறுத்துகிறது.

எனினும், திருக்குறள் பொருட் செல்வத்தை முழுதும் புறக்கணிக்குமாறு கூறுவதில்லை. இவ்வுலகில் வாழ்வதற்குச் செல்வம் மிக இன்றியமையாதது என்பதையும், அச்செல்வம் வரும் வழியும், செலவிடும் முறையும் இத்தகையதாக இருக்கவேண்டும் என்பதை

யும், மிக அழகாக விளக்குகின்றது. செல்வர்களை அறிவுடையான், நயனுடையான், பெருந்தகையான் என்று திருக்குறள் கூறுகின்றது. அறிவுடையவன் அறிவால் பொருள் தேடுகின்றான். அறிவாளியின் நோக்கு செல்வந் தேடுவதும், மேலும் பெருக்குவதுந்தான். அச்செல்வத்தால் எண்ணிய இடங்களில் எல்லாம் பகையின்றி வாழ முயல்வான். செல்வந் தேடும்அறிவுடையவன் உலகம் விரும்பத்தக்க செயலைச் செய்வான். உலகோர் தன்னைப் புகழ்தற்கும், பொருளாக்கத்திற்கும் உரிய வழிகளை மேற்கொள்வான். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் உணர்வே அறிவாளிக்கு முதன்மையாக இருக்கும். ஆதலின் வள்ளுவர் ஊருக்கு நீருதவும் குடிநீர்க் கிணற்றை உவமையாக்குகிறார். குடிநீர்க் கிணற்றில் நீர் மொண்டு செல்பவர்கள் அதனைப் பருகலாம், உணவு சமைக்கலாம், மங்கலச் செயல்களுக்குப் பயன் படுத்தலாம். அல்லது அழுக்கைப் போக்கி உடம்பைத் தூய்மை செய்யலாம். குடி கிணற்றின் நீர் பயன் படுத்துவோரைப் பொறுத்து, உயர்ந்தனவற்றிற்கும் தாழ்ந்தனவற்றிற்கும் பயன்படும். நீரைமொண்டு கொள்வதால் கிணறும் நன்மையடைகிறது; குடிநீர்க் கிணறு என்று புகழப்படுகின்றது. பலருடைய போக்குவரத்துக்களால் மதிப்புடையதாகிறது. நீரை எடுக்க எடுக்க ஊற்றுக் கால்கள் அடைபடாமல் நீர் சுரக்கின்றது. தெளிந்த நீரைப் பெறுகிறது. ஆனால் கிணற்று நீரைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டால், தூசியும் பாசியும் படிந்து நாற்றமெடுத்துப் புழு நெளிந்து பாழ்படும். ஊராள்வோர் ஊரின் நலனுக்குக் கேடு எனக் கருதி அதனை மூடி விடவும் முயல்வார்கள். இன்றைய சமுதாயத்தில் அறிவினால் மட்டும் தேடும் செல்வத்தின் நிலையும் இதுதான். இது, சிறிய குறட்பாவில் ''ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு'' என்று அழகாகக் கூறப்படுகின்றது. பேரறிவாளர்கள் செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயனுடையதாக்க வேண்டுமென்பதே குறள்நெறி.

இதுபோன்றே புல்லறிவாளர்களிடத்துச் செல்வம் சேருமாயின் அது எதிர்மாறாகப் போய்விடும் என்பதையும் திருக்குறள் விளக்குகிறது. இன்று நாட்டில் பல திட்டங்களின் மூலமாகச் செல்வத்தைப் பெருக்க முயல்கிறார்கள். கறவைப் பசுவினை நன்குபேணினால் மிகுந்த அளவு பால் தரும். பால் ஊட்டமான உணவு. குழந்தைகள் முதல் முதியோர்வரை விரும்புந்தன்மை உடையது. நோயாளிகளின் நலிவை நீக்குவது. கறவைப் பசு மிகுந்த பாலைத்தருகிறது. ஆனால் கறப்பவன் கைதூய்மையாக இருக்கவேண்டும். பால் சேமிக்குமிடம் நல்லதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் குழந்தைக்கும் முதியோர்க்கும் நோயாளிகளுக்கும் பயன்படும். பால் கறக்கும் கலம் (பாத்திரம்) அழுக்குடையதாக, நாற்றமுடையதாக கசப்புப் பொருள் உடையதாக இருந்தால், பால் நாற்றமெடுத்துப் புளித்துக் கெட்டுப் போகும். சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வினைப் போக்கி வறுமையை ஒழிப்பதற்கே திட்டங்கள். திட்டங்கள் கறவைப் பசுவைப் போன்றன. அதனால் பெருகும் செல்வம் பால் போன்றது. ஆனால் திட்டங்களால் வரும் செல்வம் நல்லறிவும் நீதியும் அறமும் உடையவர்களிடம் சேராமல் அல்லற்படுத்தும் வன்கண்ணர்களிடம் சேருமானால் அதனால் பயன் இல்லை.

பயனின்மை மட்டுமல்லாமல் தீமையாகவும் முடியும். எனவே அவ்வாறு பொருள் சேர்வது ஏற்புடையதல்ல என்பதனைப் ''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால் கலந்தீமையால்திரிந் தற்று'' என்று திருக்குறள் விளக்குகின்றது. பேரறிவாளன் செல்வம் பயன்படுகின்றது. செல்வனும் சிறப்பிக்கப்படுகின்றான். பண்பிலான் செல்வம் தாழ்வுடையதாகிறது. அவனும் இழிக்கப்படுகின்றான். இன்னும் அறமும் நீதியும் உடைய நல்லோரிடம் உள்ள செல்வம் நடுவூரில் பழுத்துள்ள பயனுடையமரம்போல்வது என்பதையும், பிறரால் விரும்பத்தகாத நிலையில் வாழ்வோனது செல்வம் நடுவூரில் பழுத்த நச்சுமரம் போன்றதென்பதையும் கூறுமுகத்தால், செல்வம் யாரிடத்துச் சேர்ந்தால் நாட்டுக்கு நன்மை என்பதை விளக்குகிறார். எனவே செல்வம் புகழையும் நீதியையும் வளர்க்கவேண்டும். அறத்தையும் அறிவையும் வளர்க்க வேண்டும். சான்றாண்மையையும் அருளையும் வளர்க்க வேண்டும். அச்செல்வமே மருந்துக்கு உதவும் மரம் போன்றது. அதனையுடைய செல்வர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். இந்நிலையே அருட் செல்வம் தேடும் நிலை. இச்செல்வம் வளர்வதாக. செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

மகாபாரதம்

அருண்மொழியரசு

திரு முருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

காந்தாரி அப்போது கருவுற்று இரு ஆண்டுகள் ஆயின. அவளுக்கு வயிறு பெரிதாக ஆயிற்று. அதனால் அவள் வருந்தினாள். குந்திக்குக்காலைக்கதிரவனைப் போன்ற மைந்தன் பிறந்தான் என்பதைக் கேட்டும், தன் வயிறு கல்லைப்போல் இருப்பதைக் கண்டும், அவள் மனதில் சிறிது பொறாமை தோன்றியது. தனியிடத்தில் தன் வயிற்றைக் கரங்களால் ஓங்கி இடித்துக் கொண்டாள். அப்போது இரும்புக்குண்டு போன்ற ஒரு மாமிசப்பிண்டம் வெளிப்பட்டது. வயிற்றில் இரு ஆண்டுகள் வளர்ந்த அப்பிண்டத்தைப் பார்த்து அவள் அஞ்சினாள். அப்போது வியாசமுனிவர் அங்குத்தோன்றி "சுபல குமாரியே! என்ன காரியஞ் செய்தாய்? உனக்கு நூறு புதல்வர்கள் பிறப்பார்கள் என்று வரங்கொடுத்தேனே. என் வாக்கு விளையாட்டுக்கும் பொய் சொன்னதில்லை. நீ அவசரத்தால் இத்தகாத செயலைச் செய்தாய்." என்று கூறினார். நூறு குடங்களில் நெய்யை நிரப்பச் செய்தார். அந்தக் கரும் பிண்டத்தை நீரில் அலம்பினவுடன், அது நூறு பிரிவாக ஆயிற்று. கட்டைவிரற்கணு அளவுள்ள அப்பிண்டங்கள் ஒவ்வொன்றை ஒவ்வொரு நெய்க்குடத்தில் இட்ட காந்தாரி, பெண் ஒன்று வேண்டும் என்று விரும்பினாள். வியாசர் கருத்தின்படி கடைசியில் மிஞ்சிய நூற்றியொன்றாவது துண்டினை, மற்றொரு குடத்தில் இட்டாள். "அம்மா! இவைகளைக் காவல் உள்ள இடத்தில் வைத்துக்காப்பாற்று. ஓராண்டுக்குப்பின் குடங்கள் வெடித்துக் குழந்தைகள் தோன்றும்." என்று கூறிவிட்டு, அத்தவமுனிவர் இமயமலைக்குச் சென்றார்.

பாண்டு குந்தியைப் பார்த்து, பெண்ணே! அரசனுக்கு ஆற்றல் சிறந்தது. அந்தணனுக்கு வாக்கு சிறந்தது. வேள்வியில் சிறந்தது அசுவமேதம். ஒளிகளில் சிறந்தவன் கதிரவன். நீரில் சிறந்தது கங்கை. அது போல் தேவர்களில் சிறந்தவன் வாயு. வலிமையுள்ளதேவன். அவனை ஆராதித்து நம்குலம் வளர ஆற்றல் மிகுந்த புதல்வனைத் தருவாய்" என்று வேண்டினான்.

குந்தி தனிமையில் மந்திரத்தைக் கூறி வாயுதேவனை வழிபட்டாள். அத்தேவன் வந்து அவளுக்கு அருள்புரிந்தான். சிம்மராசியில் குருவும், துலாத்தில் சூரியனும், மகத்தில் சந்திரனும் கூடிய திரயோதசியில், ஆற்றலே ஒரு உருக்கொண்டது போன்ற புதல்வன் தோன்றினான். இவன் பலசாலிகள் எல்லோரிலும் சிறந்தவன்; இவன் பீமன் என்று வானொலி தோன்றியது. 'பீமன்' என்றால் யாவரும் பயப்படத் தக்கவன் என்பது பொருள். பீமன் பிறந்தபோது அங்கங்கேயுள்ள அரசர்கள் சிறுநீர்விட்டுக் கொண்டார்கள். அப்போது பூமியசைந்தது. பீமன் பிறந்த பத்தாவது நாளில், குந்தி பீமனை இடையில் ஏந்திக் கொண்டு ஒரு தடாகத்தில் நீராடிவிட்டுத் தெய்வத்தை வணங்கும் பொருட்டுச் சென்றாள். ஒரு புலி அவளை விரட்டியது. அவள் மலையின்மீது ஏறினாள். குழந்தை நழுவி விழுந்துவிட்டது. இந்திரன் விட்ட வஜ்ராயுதம் போல் பாறை விபூதியாக ஆயிற்று. இந்தப் பேரொலியைக்கேட்டுப் பாண்டு ஓடிப்போய்ப் பார்த்தான். பீமன் விழுந்தமலைச்சரிவில் பாறை நூறு சுக்கலாகப் பொடிந்ததைக்கண்டு வியப்புற்றான்.

பீமன் பிறந்த தினத்துக்கு முன்தினத்தின் இரவில் துரியோதனன் பிறந்தான். பிறந்த

வுடன் கழுதை கத்துவதுபோல் அழுதான். குரூரமான கழுகுகள் நரிகள் விலங்குகள் ஆகியவைகள் அப்போது அமங்களமாகக் கத்தின. அநேக உற்பாதங்கள் நிகழ்ந்தன.

திருதராஷ்டிரன் இதனையறிந்து விதுரரையும் வேதியர்களையும் அழைத்து, எனக்குப் பிள்ளை பிறந்தபோது தீய நிமித்தங்கள் உண்டாகின்றனவே, இதன் விளைவு யாது ? என்று வினவினன்.

விதுரரும் வேதியர்களும் "உமக்கு மூத்த புதல்வன் பிறந்தபோது இந்தப் பயங்கரமான நிமித்தங்கள் உண்டாயின. இப்பிள்ளை குலத்துக்கு அழிவையுண்டாக்குவான். இவன் கண்கள் சிவப்பாக இருக்கின்றன. இவனை விட்டுவிடுவதுதான் இதற்குப் பரிகாரம். இவனைக் காப்பாற்றினல் பெருந்தீங்குவரும். இவன் குலத்தை மட்டுமன்று; அரச வம்சத்தையே அழிப்பான். நீர் குலத்துக்கு நலஞ்செய்ய விரும்பினல் இந்த ஒருவனை விட்டுவிடும். ஒரு குலத்திற்காக ஒருவனைவிட வேண்டும்! ஒரு கிராமத்துக்காக ஒரு குலத்தைவிட வேண்டும்! ஒரு தேசத்துக்காக ஒரு கிராமத்தை விடவேண்டும். தனக்காகப் பூமியையே விடவேண்டும்" என்றார்கள். திருதராஷ்டிரன் புத்திரபாசத்தால் அதைச் செய்யவில்லை.

பின்னர் ஒவ்வொரு தினத்தில் ஒவ்வொரு குடம் வெடித்து, நூறு புதல்வர்களும், முடிவில் ஒரு பெண்ணும் உண்டானார்கள். வயிறு பெருத்துக் காந்தாரி இடர்ப்பட்டிருந்தபோது பணிவிடை புரிந்து கொண்டிருந்த ஒரு வைசியப் பெண்ணைத் திருதராஷ்டிரன் மருவினன். அந்தக் கன்னிகையான வைசியப் பெண்ணிடம் "யுயுத்சு" என்ற ஒரு புதல்வன் பிறந்தான். அவன் நல்ல குணங்களுடையவன்.

அர்ச்சுனன் :

பீமசேனன் பிறந்த பின்னர் பாண்டு மன்னன் உலகில்மிகச் சிறந்த மற்றொரு மைந்தன் தனக்கு எவ்வாறு உண்டாவான் என்று சிந்தித்தான். இந்திரன் மூன்று உலகங்கட்கும் தலைவன்; அளவற்ற பெருமையுடையவன்; ஆதலால் இந்திரனை மூன்று கரணங்களாலும் வழிபட்டு ஒப்பற்ற மகனைப் பெறுவேன் என்று எண்ணினன். குந்தியை இந்திரனை வேண்டி ஓராண்டு தவம் இருக்கச் சொன்னன். பாண்டுவும் இந்திரனை நினைத்து ஒரு காலால் நின்று தவஞ் செய்தான். இந்திரன் அவனிடம் வந்து "மூன்று உலகங்களிலும் பேர்படைத்த—வெல்லுதற்கரிய ஒரு வீரகுமாரனை உனக்குத் தருவேன்" என்று வரங்கொடுத்தான்:

குந்தியைப் பார்த்து "பெண்ணே! இந்திரனுடைய அருள்கிடைத்திருக்கின்றது. மனிதர்கட்கு எட்டாத செய்கையுடையவனும், ஓங்கிய புகழுள்ளவனும், பகைவரையடக்குகின்றவனும், நீதியுள்ளவனும், சூரியனைப் போன்ற தகுதியுள்ளவனும் ஆகிய ஒரு திருக்குமாரனை இந்திரன் அளித்தான். இந்திரனுடைய அருளினல் அர்ச்சுனனைப் பங்குனி மாதத்தில் பூரமும் உத்தரமும் சேர்ந்த பகலில் பெற்றாள். அதனல் அம்மகன் பல்குணன் என்ற பெயரையும் பெற்றான்.

அப்போது வானிடை தெளிவான ஒரு வாக்கு எழுந்து "குந்தியே! கார்த்தவீரியனுக்கு நிகரான ஆற்றல் படைத்த இம்மகன் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவான். இவனல் உன்னுடைய புகழ் எங்கும் பரவும். அதிதி திருமாலைப்பெற்று மகிழ்ந்தது போல் நீ இம்மகனைப் பெற்றாய். இவன் எல்லா அரசர்களையும் வெல்வான். இவன் காண்டவவனத்தை அக்கினிக்கு உணவாகத் தருவான். இவன் உடன் பிறந்தாருடன் மகிழ்ந்து மூன்று அசுவமேதங்களைச் செய்வான். இவன் பரசுராமரையும் நாராயணரையும் போல் ஆற்றல் படைத்து சிவமூர்த்தியிடம் பாசுபதம் பெறுவான். நிவாதகவசர்களை அழித்து விண்ணுலகமும் மண்ணுலகம் மதிக்க வாழ்வான்" என்று கூறியது.

இந்த வானொலியைப் பாண்டுவும், சதச்ருங்க மலையில் வசிக்கும் முனிவர்களும் கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்றார்கள். தேவதுந்துபி முழங்கியது. பூமழை பொழிந்தது. அமரர்கள் விண்ணிடைக்கூடி அர்ச்சுனனைக் கொண்டாடினார்கள். உரகர், நாகர், யட்சர், அரம்பையர், பரத்துவாஜர், காசிபர், கௌதமர், விச்வாமித்திரர், சமதக்னி, வசிட்டர், சப்த முனிவர்கள், மரீசி, அங்கீரசர், புலஸ்தியர், புலகர், ரகிரது, தக்கர், இவர்கள் வந்து வாழ்த்தினார்கள். அரம்பையர்கள் ஆடினார்கள். யட்சர்கள் பாடினார்கள். முனிவர்கள் வேதமந்திரங்களை ஓதினார்கள். நாரதாதி முனிவர் கானஞ் செய்

தார்கள். பன்னிரு ஆதித்தர்களும், பதினொரு உருத்திரர்களும் அஷ்டவசுக்களும், சப்தமருத்துக்களும், விசுவதேவர்களும், சாந்தியர்களும் வந்து அங்கே சுற்றிநின்று கொண்டிருந்தார்கள். இந்தத் தேவக் கூட்டங்களைத் தவத்தில் சித்தி பெற்ற முனிவர்கள் மட்டுங்கண்டார்கள். மற்றவர்கள் காணவில்லை. பாண்டு தேவர்களை வணங்கினான். தேவர்கள் பாண்டுவைப் பார்த்து உத்தமனே! நீ செய்த தவத்தின் பயனாக அறக்கடவுளே முதற் புதல்வனாகவும், வாயுதேவனே பகைவரையழிக்கும் வீமனாகவும், இந்திரனே இந்த அர்ச்சுனனாகவும் பிறந்தார்கள். நீ தேவர்களுக்குப் பிதாவாக ஆனாய். உன்னினும் மேலான புண்ணியவான் இல்லை. பிதிர்களின் கடனிலிருந்து விடுபட்டாய். நற்கதியடைவாய்" என்று கூறிச் சென்றார்கள்.

நகுலசகாதேவர் :

பாண்டு மீளவும் குந்தியைப் பார்த்து மற்றொரு குமாரனைப் பெறுமாறு கூறினான். குந்தி அது அறமன்று என்று மறுத்து விட்டாள்.

மாத்திரி தனியே பாண்டுவை நோக்கி "எனக்கும் சந்ததியில் ஆர்வம் மேலிட்டுளது. நான் கூறியதாகச் சொல்லாமல் தாங்களே குந்திக்குக் கட்டளையிடுங்கள். மந்திர வலிமையால் எனக்கும் மகப்பேறு கிடைக்கட்டும்" என்றாள்.

பாண்டு மாத்திரி இல்லாத நேரத்தில் "குந்தி! உன் தங்கைக்கும் மந்திர சக்தியால் மகப்பேறு கிடைக்க நீ அருள் செய்" என்றான். அதன்படியே குந்தி மாத்திரிக்கு மந்திரத்தை உபதேசித்து ஒருமுறை இதனை உபயோகிக்க வேண்டும்!' என்றாள். மாத்திரி தனிமையில் ஒரு முறையில் இரு புதல்வர் பிறக்க வேண்டும் என்று எண்ணி இணை பிரியாமல் இருக்கும் சூரிய குமாரர்களாகிய அசுவினிதேவர்களை ஆராதித்தாள். அவர்கள் வந்து அருள்புரிய இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள். அப்போது வானில் இவர்கள் தர்மம் ஒழுக்கம் அழகு குணம் வலிமையென்ற குணங்களால் நிறைவு பெற்றவர்கள்" என்ற சொற்கள் ஒலித்தன.

யுதிஷ்டிரன் பீமசேனன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் என்று பேர் சூட்டினார்கள். அவர்கள் ஒவ்வொரு ஆண்டுக்குப் பின் பிறந்தவர்கள். புதல்வர்களைப் பார்த்துப் பாண்டு உள்ளமும் உடம்பும் பூரித்தான். அம்மைந்தர்கள் சதச்ருங்கமலையில் வசிக்கும் முனிவர்களுக்கும் முனிவர் பத்தினிகட்கும் பணிவிடைகள் புரிந்து அவர்களுடைய சிறந்த ஆசியைப் பெற்றார்கள்.

பாண்டு இலைகளையும் சருகுகளையும் புசித்துக் கொண்டு தவஞ் செய்து கொண்டிருந்தான். வசுதேவர் தன் புரோகிதரான கசியப கோத்திர மறையவனையும் பணியாளர்களையும் குழந்தைகட்கு வேண்டிய பொன் வெள்ளி ஏனங்களையும் அனுப்பினர். அந்தப் புரோகிதர் பாண்டவர்க்கு உபநயனம் முதலிய கிரியைகளைச் செய்தார். சர்யாதியின் குமாரனான சுகன் என்னும் ராஜன் வில்லினால் உலகை வென்றவன். நூறு அசுவமேதயாகங்கள் செய்தவன். அவன் முனிவனாகி அம்மலையில் தவஞ்செய்து கொண்டிருந்தான். அவனிடம் பாண்டவர்கள் விற்பயிற்சி பெற்றார்கள்.

யுதிஷ்டரன் : யுத்தத்தில் புறந்தராது உறுதியுடன் நிற்பவன்.

பீமசேனன் : எல்லோரும் அஞ்சத்தக்க சேனையுடையவன்.

அர்ச்சுனன் : தூய்மையானவன்.

நகுலன் : பகைவர்களாகிய சர்ப்பங்களுக்குக் கீரியைப் போன்றவன்.

சகாதேவன் : தாயாருடைய வேற்றுமையின்றிப் பிறந்தாரிடம் ஒற்றுமையுடையவன்.

பீமன் கதைப் போரில் வல்லவனானான். யுதிஷ்டிரர் ஈட்டிச் சண்டையிலும், நகுல சகாதேவர்கள் வாட் போரிலும் தேர்ச்சி பெற்றார்கள். அர்ச்சுனன் விற்போரில் கரை கண்டவனாக ஆனான். அநேக சிறந்த கணைகளையும் உயர்ந்த வில்லையும் அர்ச்சுனனுக்குச் சுகன் தந்தான்.

ஜனமேஜயர் வைசம்பாயனரைப் பார்த்து "தவத்திருவுடைய பாண்டவர்களின் ஆயுளை அறிய விரும்புகின்றேன்" என்று கேட்டார்.

வைசம்பாயனர், பாண்டு மரணம் அடைந்து அத்தினபுரம் போனபோது,

தருமருக்கு	வயது	16
அத்தினபுரத்தில் இருந்தது	,,	12
காசியில் வசித்தது	,,	1
அரக்கு மாளிகையிலிருந்து விடுபட்டு வாழ்ந்த ஆண்டு		½
வேத்திர கீயத்தில் ஆண்டு		½
துருபதன் மாளிகையில் ஆண்டு		1
மீளவும் அத்தினபுரத்தில்		5
இந்திரப்பிரஸ்தத்தில்		23
வனவாசம்		13
அரசாண்டது.		36
பின் கானகத்தில் ஆண்டு		½
	ஆக	108½

108 வருஷம் 6 மாதம்.

இது தருமருடைய ஆயுள். தருமருக்குப் பீமன் ஓராண்டு இளையவன். பீமனுக்கு விஜயன் ஓராண்டு இளையவன்.

விசயனுக்கு நகுல சகாதேவர்கள் ஓராண்டு இளையவர்கள். அர்ச்சுனனுக்குக் கண்ண பிரான் மூன்று மாதம் பெரியவர். கண்ணனுக் குப் பலராமர் மூன்று மாதம் பெரியவர் என்று கூறினர்.

பாண்டுவின்முடிவு :

பாண்டு முனிவர்களுடன் தன் மைந்தர் களைக் கண்டு களித்திருந்தான். அப்போது வசந்தகாலம் வந்தது. குந்தி எப்போதும் எச்சரிக்கையுடன் இருப்பாள். பாண்டுவுடன் இளமையும் எழிலும் உடைய மாத்திரியைத் தனியே பழக விடாமல் காப்பாற்றுவாள்.

அன்று அர்ச்சுனன்பிறந்த உத்தர பல்குண நட்சத்திரம். அர்ச்சுனனுக்குப் பதினன்காவது பிறந்தநாள் கொண்டாட்டம். முனிவர்களி டத்திற்கு மக்களை அழைத்துக்கொண்டு போய் அவர்கட்கு அன்னமும் சொன்னமும் தந்து மக்களை வாழ்த்துமாறு செய்தாள்.

ஆச்ரமத்தில் பாண்டு மாத்திரியுடன் தனியே இருந்தான். விதியால் மதிமயக்க முற்றான். இளவேனிற் காலம். நல்ல தென்றல் மலர்களின் மணத்தை அள்ளி வீசியது. மாத் திரியின் இளம் எழிலைப்பார்த்த பாண்டு விருப்பமேலிட்டு, சாபம் ஏற்பட்ட பதினெட்டா வது ஆண்டில், அவள் மறுத்தும் கேளாமல் அவளை மருவினன். உடனே நிலத்தில் விழுந்து மாய்ந்தான்.

மக்களுடன் முனிவர்களுடைய ஆச்ரமத்தில் இருந்த குந்தி தேவி செய்தி கேட்டு, ஓடிவந்து பார்த்தாள்.

மாத்திரி என்று கதறி அழுதாள். கணவன் மேல் விழுந்து தாங்கமுடியாத வேதனையால் அழுதாள். "ஆ! மன்னரேறே! எங்களை நட்டாற்றில் விட்டதுபோல் இக்காட்டில் விட்டு விண்ணுலகஞ் சென்றீரே! இதோ தங்கள் குமாரர்களைப்பாரும். இவர்களை அநாதைகளாகச்செய்துவிட்டீரே. கடுந்தவம் புரிந்த நீர்உத்தமமானஉலகஞ் சென்றிருப்பீர். இதோ நானும் தங்களைத்தொடர்கின்றேன். உம்மைக் காணவருவேன்" என்று கதறி அழுதாள்.

மாத்திரி "பிராணபதி! தங்கள் மரணத்துக் குப் பாவியாகிய நான் தானே காரணமாக ஆனேன், இனி தங்கள் மலர் முகத்தை என்று காண்பேன். சூரியன் அஸ்தமிப்பது போல் முடிவடைந்தீரே" என்று அழுதாள்.

பாண்டவர்கள் "ஆ! பிதாவே! தங்களை விட்டு நாங்கள் எப்படி வாழ்வோம். உலக நாதராகிய தங்களின் புதல்வர்களாகிய நாங்கள் ஒரு நொடியில் நாதனில்லாதவர் களாக ஆனோம். நாங்கள் இனியாரை அப்பா என்று அழைப்போம்? எமைப் பெறு வதற்கு நீர் எத்தனையோ தவஞ் செய்தீரே? எங்கள் வளர்ச்சி இனி யாரால் உண்டாகும்? அப்பா? அப்பா! என்று கண்ணீர் சொரிந்து அழுதார்கள்.

குந்தி 'தங்கையே! நீ பிள்ளைகளைக் காப் பாற்று. நான் கணவனுடன் அனுமரணம் அடைவேன். வீரபத்தினியாகின்றேன்" என்றாள்.

மாத்திரி "அக்கா! எனக்கு இன்னும் கணவனிடம் உள்ள அவா தணியவில்லை. அவர் மரணமும் என்னால்தான் நிகழ்ந்தது. பிள்ளைகளிடத்தில் தங்களைப்போல் சமநோக்கு எனக்கு இல்லை. கணவனுடன் தொடர நீ எனக்கு விடைகொடு" என்று கூறி அழுதாள்.

முனிவர்கள் ஆறுதல் கூறினர்கள். கசியபர் யாகாக்கினியை மூட்டினர். யுதிஷ்டிரர் பிதாவுடைய சரீரத்தை நீராட்டி னர். நெருப்புக்கடனைச் செய்தார். மாத்திரி குந்தியை வணங்கி "யது குல குமாரியே! மக்களின் எதிர்காலச் சிறப்பை நீ கண்டு களிப்பாய். உத்தமமான நற்குணமுள்ள உனக்கு வணக்கம். குழந்தைகளே! நீங்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ்வீர்கள்" என்று கூறிவிட்டு, தீப்பாய்ந்து கணவனுடன் மேலுலகம் போனாள். பின்னர் இருவருக்கும் நீர்க்கடன் செய்தார்கள்.

முனிவர்கள் குந்தியையும் ஐவர்களையும் மாண்டவரது எலும்புகளையும் எடுத்துக் கொண்டு நெடுந்தூரம் நடந்து அத்தினபுரம் போய், பீஷ்மர் திருதராஷ்டிரன் இவர்களைக் கண்டு பாண்டவர்களது பிறப்பைப்பற்றியும், பாண்டுவின் மரணத்தைப் பற்றியும் விவர மாகக் கூறி, அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு காந்தர்வநகரம்போல் மறைந்து விட்டார்கள்.

அத்தினபுரத்தில் அனைவரும் பாண்டுவின் மரணத்தைக்கேட்டு வருந்தினர்கள். திருதராஷ்டிரன்மிக்கவருத்தமுற்று,தம்பியைக் கருதி அநேக தானதருமங்களைச் செய்தான். பாண்டுவின் மாத்திரியின் எலும்புகளை ஆடை அணிகளால் அலங்கரித்து மேளதாளத்துடன் கங்கையில் விட்டார்கள். மகனே! மகனே! என்று அம்பாலிகை அழுதாள். பீஷ்மரும் விதுரரும் கண்ணீரால் நனைந்து பாண்டுவின் நற்குணங்களை நினைந்து துயரமுற்றார்கள்.

(தொடரும்)

மாலையில் மலர்ந்த மலர்

[திரு. என். எஸ். தாத்தாசாரியர், தஞ்சாவூர்.]

மற்றொன்றும் வேண்டா மனமே
மதிள்அரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் உற்ற
திருமாலை பாடும்சீர்த் தொண்ட
ரடிப்பொடிஎம்
பெருமானை எப்பொழுதும் பேசு.

முன்னுரை: இறைவன் எங்கும் நிறைந் தவன். நாம் நம் கண்கொண்டு அவனைக்காண இயலாது. அவன் "கட்கிலி" எனப் பேசின சிலமதங்கள். காணலாம் அவனை. உருவுடன், உள்ளபடி காணலாம். மனம் குளிர வாழ்த்தலாம் என்றன சைவமும் வைணவமும். இதுவும் இச்சமயங்களின் சிறப்பு. இச்சமயங்கள் அவனைக்காண அறிவுக்கண்ணும், அன்புக் கண்ணுமே அமையும் என்று கூறுகின்றன.

நம் உள்ளத்தில் ஊறிய அன்பு நீர் கண்களில் கசியக் காணுங்கால் இறைவன் தரிக்க மாட்டாதவனாய் அருட்கண்கொண்டு நம்மை நோக்குவான். அன்பு என்ற நீரும், அவனது அருள் என்ற நீரும் கலக்கக் காவிரியும் கடலும் கலந்ததொக்க அலைபாய்ந்து ஆநந்த வெள்ளமாகிறது. நாமும் இறைவனும் ஈர்த்தவாய் தெரியாத ஒரு பொருளாகி விடுகிறோம். இத்தகைய அனுபவநிலையில் ஆட்பட்டே ஆர்ப்பரித்த குருகூர் வந்த வள்ளலாம் நம்மாழ்வார், தமது தமிழ் மறையாகிய திருவாய் மொழியில்

ஆரா அமுதே! அடியேன்
உடல் நின் பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய
உருக்கு கின்ற நெடுமாலே

என அருளிச் செய்தார்.

இறைவனின் நாமம்: அன்பு வெள்ளம் கரைபுரள, நம்மை நாம் மறக்க நாவினால் அவன் திருப்பெயர் நவிற்றி அவனை அழைக்கின்றோம். "ஒரு நாள் காணவாராயே" என்ற ஆழ்வார் திருவாக்குப்படி அவனைக் காணக் கதறுகிறோம். அவன் எங்குற்றான்? எவ்வாறுள்ளான்? என்ற சிந்தனை செய்வதில்லை. திருநாமம் கேட்ட உடனேயே ஓடி வருகிறான். உயிர் காத்தருளுகிறான். கராங் கதுவ மடுவில் தத்தளித்த யானை 'ஆதிமூலமே' என்றது. திரௌபதி இருகையையும் நீட்டிக் "கோவிந்தா" எனக் கதறினாள். ஓடிவந்து உயிர் காத்தான் ஒருபுடை. நாடி அருளி மானங்காத்தான் ஒரு விசை. ஆதலால் தான் முமுட்சுப்படி என்ற சமய நூல் திருநாம மகிமையையேகூற இசைந்து :—

"அவன் தூரஸ்தன் ஆனாலும் இது கிட்டி
நின்று உதவும்;
திரௌபதிக்கு ஆபத்திலே புடவை
சுரந்தது திருநாமமிறே; சொல்லும்
கிரமம் ஒழியச் சொன்னாலும் தன்
சுவரூபம் கெட நில்லாது; இதுதான்
'வலம்தரும்' என்கிறபடியே எல்லா
அபேட்சிதங்களையும் கொடுக்கும்"

எனக் கூறி இருப்பது காணலாம். மற்றும் திருமங்கை ஆழ்வார் திருநாமத்தின் ஏற்றத்தை,

"துஞ்சும் போது அழைமின், துயர்வரில்
நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்!
நஞ்சு தான் கண்டீர்! நம்முடைய
வினைக்கு
நாராயணா என்னும் நாமம்!"

என்றருளிச் செய்தார்.

வேதங்களும் கலியுகத்தில் நாமசங்கீர்த்தனமே, அவனைக் காணவும் அடையவும் சிறப்புற்றவழி என்றன.

எளிதில் இரண்டுஅடியும் காண்பதற்கு
என்உள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே
களியில்
பொருந்தா தவனைப் பொரலுற்று
அரியாய்
இருந்தான் திருநாமம் எண்"

என்று பொய்கை ஆழ்வாரும்,

ஓத்தின் பொருள் முடிபும் இத்தனையே
உத்தமன்பேர்
ஏத்தும் திறம் அறிமின் ஏழைகாள்—
ஓத்ததனை
வல்லீரேல் நன்றுஅதனை மாட்டீரேல்
மாதவன் பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு"

என்று பூதத்தாழ்வாரும் ஒருசேர அருள் வாக்கிட்டார்கள்.

திருநாமத்தின் சிறப்பினையே முழுவதையும் பேசவந்த தொண்டரடிப் பொடி ஆழ்வார், தமது ஈடு இணையற்ற செந்தமிழ் மணிக்களஞ்சியமான திருமாலையின் முதற் பாசுரத்திலே, தாம் நமன்தமர் தலைகள் மீது நாவலிட்டு உழிதருவதற்குக் காரணம்,

மூவுலகு உண்டு உமிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டாய்
அரங்கமா நகரு ளானே.

எனச் சோதிவாய் திறந்து பணித்தார். இவ்வடியின் உரையான ஈட்டில் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை, "சர்வாதிகாரமான யாத்ருச்சிக பகவந் நாம சங்கீர்த்தனமே, சேதநருடைய பாபத்தைப் போக்கி சுகிருத அநுகூலமாகக் கர்மயோகாதிகளிலே மூட்டும்" என்றார். மேலும் "விஷ்ணுதர்மம்" என்ற நூலின் கண்ணே கூறப்படுவதாவது பாண்டவர்களின் பின் தோன்றலாகிய "சதாநீகன்" என்ற அறங்காக்கும் மன்னனுக்கு, சௌனக பகவான் கூறுவதாவது: "காலம் கலி காலமாய் இருந்தது, பாபமேலீட்டினாலே வேறு ஒன்றுக்கு அதிகாரிகள் இல்லை. சர்வாதிகாரமான பகவந் நாமசங்கீர்த்தனமே ஆத்மாக்களுக்கு உய்தி அளிப்பதாய் இருப்பது" என.

இறைவன் திருப்பெயரைச் சுவை அறிந்து செப்புங்கால், பக்தர்களின் அடிவயிற்றிலேயே களிஎனவும், அமுது எனவும் தித்திக்குமாம். இச்சுவையின் இன்பம் உணர்ந்தபின், அச்சுவை யாய வைகுந்த வாழ்வும் வேண்டாம் என்பர். அர்ச்சை என்னும் திருவுருவ வழிபாட்டிற்கு அடிகோலியான சௌனக பகவானின் வழியில் நின்றவரும், அடியார்களுக்கே தம்மை ஆட்படுத்திக்கொண்டவருமான தொண்டரப் பொடியாழ்வார், இறைவன் திருநாமப் பெருமையை முழுவதும் விரித்து உரைக்கும் தமது திருமாலை என்ற நூலாகிய தெய்வீக மாலையில், மலர்ந்த மலர் ஆக ஒரு பாசுரத்தை அருளிச் செய்தார்.

பச்சை மாமலை போல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே

என இப்பாசுரத்தின்பால் அமைந்த சுவை அழகினை இங்குச் சுருக்கமாக ஒரு சிறிது அனுபவிக்கலாம்.

ஆழ்வாரும் திருமாலையும்: ஆழ்வார்களுள் தொண்டரடிப் பொடிக்குத்தனிஏற்றம் உண்டு. இதனை உரை "அர்ச்சாவதார சாமாந்யமும் அன்றிக்கே, பெரிய பெருமாளை அல்லது வேறறியா திருப்பவர் ஒருவராய்த்து" என்றது. அரங்கனையன்றி மற்றைய திருப்பதி எம்பெருமான்களைப் பாடாதவர் இவர். திருமண்டங்குடியில், முன்குடுமி அந்தணர் மரபில் தோன்றித் திருவரங்கம் சென்று, அழகியமணவாளனுக்குத் திருமாலை புனையும் திருப்பணிசெய்துகொண்டு, தொண்டர் அடிப்பொடி என அடிமை நாமம் பூண்டுவாழ்ந்த விப்பிர நாராயணர் என்னும் இவர், அரங்கனைப் பற்றித் திருப்பள்ளி எழுச்சி, திருமாலை என இருபிரபந்தங்களை அருளிச் செய்தார். அவைகளில் 45 பாசுரங்கள் சொண்டது திருமாலை. அது முதலாயிரத்தில் ஐந்தாவதாகக் கணக்கிடப்பட்டது. "திருமாலை அறியார் பெருமாளை அறியார்" என்ற சமயப் பழமொழியும் உண்டு.

திருமாலை என்பது, வைணவர்கள் அதிகாலையில் நிச்சலும் ஓதுகின்ற அருள் நூலாகும். அதன் அருமை பெருமைகள் அளப்பரியன. திருமாலை என்னும் நூலின் பாடலைக் கேட்க, அரங்கன் அகமகிழ்ந்து ஸ்ரீபட்டர் என்ற ஆசாரியருடன் பேசுவாராம் 'திருமாலை' அறியாதாரை வைணவராகவே ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

பாசுரம்: திருமாலையில் இது இரண்டாவது பாசுரமாகும். இப்பாசுரம் முழுவதிலும் திருநாமம் கற்றார் சிறப்பும், அடியார் பெருமையுமே புகழ்ந்து பேசப்படுகின்றன. தொண்ட

ரடிப் பொடி ஆழ்வார் அரங்கனைக் கண்டு களிக்கிறார். முதன்முதலில் சமுதாய சோபை அநுபவம், அதாவது பொதுவாகத் தொகை அனுபவம் தொடங்குகிறது. ''பச்சை மாமலை போல் மேனி'' என்று. நீல வண்ணன் பச்சையாகக் காட்சி தந்தமை, இவருக்கு அடுத்து முந்தியவரும், அழகிய பச்சைக் கிளியாளுமான ஸ்ரீஆண்டாள் சேர்த்தியால் ஏற்பட்டது போலும்.

(1) பச்சை மாமலைபோல் :—திருவுடன் கூடியமலையாக அனுபவிக்கும் நிலையில், மா-பெரியஅல்லதுதிருமகளுடன் கூடிய மலையை மாமலை என அழைத்தார். காணப் புக்கால் கண்கள் குளிரும், நெஞ்சமும் குளிரும். "தூரத்துப் பச்சைக் கண்ணுக்குக்குளிர்த்தி'' என்றபடி இல்லாமல் அருகே நெருங்க நெருங்கப் பசுமையே, தண்ணளியே வடிவாய்க் குளிர்ந்து காண்கிறதாம். "நெல் திணுங்கினைப் போலே அகவாயில் தண்ணளியினுடைய செறிவெல்லாம் வடிவிலே காணலாம் படி இருக்கை'' என்று ஈட்டுரை : பச்சை-என்பதற்குப் பசுமை என்றும் பொருள் உண்டு. ஆகவே இவ்விடத்தில் பச்சை என்றசொல் எம்பெருமானுடைய ஈர நெஞ்சத்தை உணர்த்திற்று.

(2) மேனி : இறைவன் அர்ச்சாவதாரத் திருவுருவத்தைக் காண்பதே அமுதமாயும் அருள்வெள்ளமாயும் வினைகள் தீர்க்கும் மருந்தாயும் இருக்கும்; அதனால் தான் ''என் அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே''என்று அனுபவித்தார் திருப்பாணாழ்வார். ''குன்றுரும் கொழுமுகில் போல் குவளைகள்போல் குரை கடல்போல் நின்றாரும் கணமயில்போல் நிறமுடையநெடுமால்'' என்றபடி கருத்தே கட்டளையாக நீரை முகந்து மலையின் உச்சியிலே சாய்ந்த மேகம்போன்ற திருமேனியாகவும் தென்படுகிறது.

(3) பவளவாய் : அடுத்து உறுப்பு உறுப்பாய் அனுபவிக்கும் நிலை தொடர்கிறது. வா வா! என அழைத்து அழைத்து வாய் பவளம் போல் சிவந்துவிட்டதாம். திருவுள்ளத்தில் அமைந்த ''ராகம்'' அதாவது அன்பு சிவந்து வாயளவில் வீசிற்றும். பேசுவதுபோல் அழகாய் அமைந்த திருவாயின் பான்மையை விளக்குகிறது.

(4) கமலச் செங்கண் : திருவாயழகிற்கும் தப்பினாரை விடாதே அணைக்கிறதாம் கமலம் போன்ற திருக்கண்கள். காதல் வெள்ளமிடும் இடத்துக் கண்களால் அன்றோபேசுவது. அது அன்பின் முதிர்ச்சியைக் காட்டும். நம்மைக் கண்டு அனுபவிக்கும் பக்தர்களைக் கண்டோமே என்ற மகிழ்ந்து காணும் திருக்கண்களாம். அன்பும், மயக்கமும், திருவும் வந்தால் கண்கள் சிவப்பது இயல்பாகுமன்றோ!

(5) அச்சுதா! : கண்களுக்கு மேலே ஆழ்வாரை அனுபவிக்கமுடியாமல், கண் கண்டார் கண்ணே கண்டார் என்ற நிலைக்கு அழியச் செய்ததுதான். உடனே நீர்ச்சுழலில் சிக்கியவன் ஆர்த்துக்கொண்டுகூவுமாபோலே,அச்சுதா! என அழைக்கிறார்,—அச்சுதன் என்ற சொல்லுக்கு, தாமும் நழுவாமல், நம்பினோரையும்தாழவிடாதவன் என்ற பொருள். இத்திருப்பெயர், பெருமையின் மேல் நிலையை உணர்த்திற்று.

(6) அமரர் ஏறே: தெய்வத்துக் கரசு என்ற பொருள். ''காலமெல்லாம் இடைவிடாதே அனுபவியாநின்றாலும் எல்லை காண ஒண்ணாதபடி அவ்வருகாயிருக்கை'' என்றார் இவ்விடத்தில் பெரிய வாச்சான் பிள்ளை. ஏறு என்ற சொல்எருதையும்,ஆண்சிங்கத்தையும், ஏற்றத்தையும் குறிக்கும்.

(7) ஆயர்தம் கொழுந்தே : ''ஏறு'' என்றதுமே ஆழ்வாருக்குக் கிருஷ்ணாவதாரநினைவு முந்தி நின்றது. முதலில் பெருமையின் எல்லையை ''அமரர் ஏறே'' என்று குறிப்பிட்டு எளிமையின் எல்லை நிலத்தை, இச்சொற்றொடரால் குறிப்பிட்டார். வேரில் தாக்கினால் கொழுந்தில் தான் முதலில் வாட்டம் காணும். அதுபோல் மிகவும் கீழ்நிலையில் உள்ள ஆயர்கள் மனம் வருந்தினால் கொழுந்தாகிய கண்ணன் திருமுகச் செவ்விவாடுமாம். 'ஆயர்தம் கொழுந்தே'' என்பதினால் ''மதிளரங்கர் கற்றினம் மேய்த்த கழல்'' என அரையர் திருவாக்குப்படிக்கு, ஆயருக்கே அவன் விற்கவும் வாங்கவும் தக்க விலைப் பொருளாய் நின்று, அவர்கள் தர நாம் அவனை அடையநிற்கும் நிலையில் கண்ணன் நின்றான் என்பதினைக் குறிக்கின்றது.

(8) என்னும் : கருத்து அறிய வேண்டாம். கிளிபோல் இம்மூன்று திருப்பெயர்களை நாவினால் சொன்னாலும் போதும், இவற்றின் இனிமைதான் என்னே! ஏற்றம்தான் என்னே! பெரும்பயன் தான் என்னே! என அலமந்து நின்றார் ஆழ்வார்.

(9) இச்சுவை தவிர : நாவினால் சொல்லலும் மனத்தால் நினைத்தலும் செவியாற்

கேட்டலும், இது என்ற அகச் சுட்டினுல் அண்மையில் :உள்ளது. வியக்கத்தக்கது, எடுத்து இயம்ப இயலாச் சுவை என்பது புலப் படுத்தப்படுகின்றது. "திருநாமத்தை உம் முடைய நாக்கிலே இட்டுப் பாராமையிறே நான் உபதேசிக்க வேண்டுவது" என்ற உரைப்படி, நாக்குக்கு அறுசுவையாய், செவிக்கு ஒன்பான் சுவையாய் இருப்பது. யான் போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன் :

(10) அச்சுவை: நூல் வாயிலாகக் கேட்ட சுவை. 'கையில் கனியிருக்கக் காய் கவர்ந் தற்று' என்னுமாபோலே, திருநாமம் கற்ற யான், கால தாமதம் பொறுக்காதயான் என்ற படி. நெடுங்கை நீட்டான பரமபதம் போய் "ஆள் மின்கள் வானகம்" என்று ஆளத்தந் தாலும், அச்சுவையை வேண்டேன் என்கிருர். "பெறினும்" என்பதால் கேட்டார் வாய்க்குக் கேட்டதாக நின்றது. இங்குக் காணும் அரங் கனின் திருநாமம் செப்புதலும், அவன் அழியா அழகைக்காணுதலும்கண்முன் கிடைத்தவை. இந்த இடத்தில் காணும் ஈட்டுரையின் அழ கைக் காணவேண்டும். "அது கிடைத்தாலும் வேண்டாம்"என்பதனுல் பால் கைக்கும் புளிக் கும் என்னிலன்றே பிணங்கவேண்டுவது, அதுதான் வேண்டா என்பாரைச் செய்வ தில்லையே" என்பது. உருவவழிபாட்டின் ஈடுபட்டு அதன்கண் உயர்ந்து நின்றபடியே இதைவிட அழுத்தமாகவும் ஆழமாகவும் கூற இயலுமோ.

அரங்க மா நகருளானே!: அரங்கமாநகர் அப்பனே, அத்திருமாலை நூற் பாடல்களை முற்றும் சுவைத்தறியப் பெரும் பேறு செய் திருக்கவேண்டும் என்பதுடன் ஒருவாறு இதனை முடிப்போம்.

செய்திச் சுருக்கம்

சங்கரர் ஷண்மத மாநாடு: இந்து மதத்தினரின் எல்லாப் பிரிவினரையும் ஒன்று சேர்த்து, எல்லோருக்கும் பொதுவான பக்தியை வலியுறுத்தும் முறையில், காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின்படி, 1—6—69 முதல் 9—6—69 முடிய முறையே காணபத்தியம் — கௌமாரம் —, வைஷ்ணவம்—சௌரம்—சாக்தம்—சைவம் என்னும் அறுவகைச் சமயங்களைக் குறித்தும், ஒன்பது நாட்கள் சென்னை ஆழ்வார்ப்பேட்டை வீனஸ் காலனியில், மிகவும் சிறப்புற நடைபெற்றது.

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, டாக்டர் கஜேந்திர கட்கர், பி. பி. முகர்ஜி, மகாமகோ- பாத்தியாய தத்தோவாமன போத்தார், எஸ். ஆர். டிகேகர், டாக்டர் சுநீதிகுமார் சட்டர்ஜி, திருமதி ரத்ன நவரத்தினம், டாக்டர் பி. நாகராஜராவ், டாக்டர் வெ. இராகவன். டாக்டர் டி. எம். பி. மகாதேவன், திரு கி. வா. ஜகந்நாதன், திருமதி சௌந்தரா கைலாசம், தமிழவேள் திரு பி. டி. இராஜன், அக்னிஹோத்திரம் ராமாநுஜ தாத்தாசாரியார், மகாவித்துவான் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார், டாக்டர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனர் முதலிய பேரறிஞர்கள் பற்பலர், கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

சகடபுரம் சங்கராசாரிய சுவாமிகள், உடுப்பி ஸ்ரீபேஜாவர் சுவாமிகள், காஞ்சிபுரம் ஸ்ரீஞானப்பிரகாச சுவாமிகள், திருப்போரூர் சிதம்பர சிவஞான சுவாமிகள், பிருந்தாவனம் ஸ்ரீபுருஷோத்தம கோசுவாமிகள், காயத்ரீபீடம் ஸ்ரீவித்யா சங்கர பாரதி சுவாமிகள், புதுக் கோட்டை ஸ்ரீசாந்தானந்த சுவாமிகள், மதுரை சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள், ஸஜ்ஜன்காட் மடம் ஸ்ரீஅன்னுபுவா ராமதாச சுவாமிகள் முதலிய சமயப் பெருஞ்சான்றோர்கள் பலர், கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். பாரதரத்னம் பூஜ்யஸ்ரீ இராஜாஜி அவர்களால், "விழாச் சிறப்பு மலர்" வெளியிடப்பெற்றது.

இந்துசமய வரலாற்றிலேயே, சங்கரர் ஷண்மத மாநாடு, ஒரு பெருஞ்சிறப்பிடம் பெறத் தக்க வகையில், மிகவும் சிறப்பாக நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

—ஆசிரியர்.

" அப்பர் தமிழினைப் போல வாழி "

(திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார், சென்னை)

நம் செந்தமிழ் நாட்டில், தெய்வமணம் கமழும் தீந்தமிழ்ப் பாடல்களை அருளிச் செய்த சைவ சமய ஆசிரியர்கள் ஆகிய நால்வர் பெருமக்களுள், திருநாவுக்கரசர் என்னும் அப்பர் சுவாமிகள் ஒருவராவர். அவர் திருவதிகைக்கு அருகேயுள்ள திருவாமூர் என்னும் சிறந்த தலத்தில், திருவவதாரம் செய்தருளினர். "சிவம் பெருக்கும், திரு + ஆம் + ஊர் திருவாமூர்" எனச் சேக்கிழார் பெருமான், அதனைப் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளார். அத்தகைய சிறந்த திருவாமூர் என்னும் தலத்தில், திருநாவுக்கரசர் திருவவதரித்த இல்லம் இருந்த இடமே, அண்மையில் ஒரு திருக்கோயிலாக அமைக்கப் பெற்று, அங்கு அவர்தம் குருபூசை விழா, மிகச் சிறந்த முறையில், சில ஆண்டுகளாக நிகழ்த்தப்பெற்று வருகின்றது. திருநாவுக்கரசர் இந்நிலவுலகத்தில் 81 ஆண்டுகள் வாழ்ந்து, சிவத்தொண்டும் தமிழ்த் தொண்டும் சிறக்கச் செய்து வந்தவர். ஆதலின் அவர்தம் அவதாரத் தலத்திற்கு 81 அடியார்கள், சென்னையினின்று பாதயாத்திரையாகவே சென்று வழிபட, ஆர்வம் கொண்டனர். வழிமுழுவதும் தேவாரப் பண்ணிசைப் பாடல்களும், சமயச் சொற்பொழிவுகளும் சிறப்புற நடத்திக்கொண்டு, அவர்கள் திருவாமூர்க்குப் பாதயாத்திரை புரிந்தனர். அப் பாதயாத்திரைத் துவக்கவிழாவில், நீதிபதி கனம் திரு பி.எஸ். கைலாசம், பேராசிரியர் டாக்டர் திரு மு. வரதராசனுர் போன்ற சான்றோர்கள், பலர் கலந்து கொண்டனர். அப்போது, பாத யாத்திரைக் குழுவினரைப் பாராட்டி வழியனுப்பி வைக்கும் முறையில், அம்மையார் அவர்கள் பாடியளித்த வாழ்த்தியற் கவிதை இது. செந்தமிழ்ச் சிவநலஞ் சான்ற இச்சிறந்த கவிதை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.

உறுதியும் குழைவும் மிக்க உயர்தமிழ்ச் சொற்க ளாலே
பெறுவதற் கரிய தான ஞானநற் பெட்ட கத்தைச்
சிறப்புற அமைத்து நல்ல செந்தமிழ் நாட்டிற் கீந்த
அறப்பணி யாளா ரான அப்பரின் நினைவு வாழி. (1)

நாவாலே அரசராகி நலம்பெறப் பக்தி பற்றி
பாவிலே முரச றைந்து உழவாரப் படையை ஏந்திக்
கோவிலே புகுந்து தொண்டு குறைவறச் செய்த அப்பர்
பேரிலே காணும் பூசைப் பெருவிழா வாழி ! வாழி ! (2)

பணியதே செய்து முற்றிப் பழுத்தநற் சிவப் பழத்தைத்
தணிவதே அறியாக் காதல் ததும்பிட என்னும் சான்றோர்
அணியதே திரண்டு வீதி அழகுற நடக்கும் போது
பிணியது நிற்கும்? இங்கே பிறவியே பேர்ந்து போகும் ! (3)

எதுவழி என்று காட்டி இருவினை தவிர்க்க வந்த
முதியவர், தேவாரத்தின் மூவரில் நடுவர், அப்பர்
நிதியவர் எங்கட் கென்றும் நினைப்பினை நெஞ்சில் என்றும்
பதித்திவண் நடக்கத் தூக்கும் பாதங்கள் நீடு வாழி ! (4)

ஒருவழி உலகம் உய்ய உண்டெனச் சொன்னல், அஃது
அருள்வழி, திருவா மூர்எம் அப்பரின் வழிஎன் றோதித்
தெருவழி நடந்து செல்லத் திட்டமிட் டொன்று பட்டீர் !
கருவழி இனிமேல் நீங்கள் காணவே மாட்டீர் வாழி! (5)

ஒளியினை நல்கும் உங்கள் ஒருதனி நடையி னுலே
வழியெல்லாம் நின்று நீங்கள் வழங்கிடும் உரைக ளாலே
தெளிவினைப் பெற்றுத் தெய்வத் திருநெறிதனில் திளைத்துக்
களியினைப் பெறுவார் மக்கள் கவலையை விடுவா ரன்றோ ? (6)

அடியவர் தம்மைக் கூட்டி அணியென வகுத்துக் காட்டிக்
கொடியென உழவா ரத்தைக் கையிலே கொடுத்து மாயக்
கொடுமையைக் களையும் நல்ல குறிப்பினை நினைவில் ஊட்டும்
தருமையா தீனம்,அப்பர் தமிழனைப் போல வாழி. (7)

சூலாலே வாழ்வில் நின்று சுடர்விடும் அப்பர் ஊரைக்
காலாலே சென்று சேரும் காரியம் தனக்குத் தூண்டு
கோலான தம்பிரானும், அவருடைக் கொள்கை தானும்,
வேலாலே சூரைக் கொன்ற வீரனுல்,நீடு வாழி ! (8)

செவிச் செல்வம்

திருமலை நல்லான் இராமகிருஷ்ணயங்கார்.

முன்னுரை :

செவிச் செல்வம் செவியால் வரும் செல்வம், அதாவது, கற்றறிந்து ஒழுகுவார் பாடே கேட்டேயறிய வேண்டியவைகளும், உறுதி பயப்பனவுமான நூற் பொருள்களை எல்லாம் கேள்வியறிவாலே தெளிய அறிதல். சான்றோர் நூற் பொருள்களைத் திரட்டிப் புகட்ட, அதனைச் செவி மடுத்தலால் வரும் தெள்ளறிவே செல்வம் என்க. கற்றவர் கல்லாதார் எல்லார்க்கும், செல்வம், இன்றியமையாதது. கற்றவர்க்குத் தம் கல்வியினாலாய அறிவினைத் தூய தாக்கி வலியுறுத்துவதாலும், கல்லாதவர்க்குத் தூய அறிவைப் புதியதாய்த் தோற்றுவிப்பதாலும், இதன் இன்றிமையாமை நன்கு விளங்கும். இதனால் கற்றல்வேறு கேட்டல் வேறு என்பது நன்கு போதரும்.

கல்வியும் கேள்வியும் :

கல்வியாவது, உறுதிப்பொருள் உணர்த்தும் நூல்களை முதல் இடை கடை முழுதும் வரியடைவே ஆசிரியன் உணர்த்த நெஞ்சில் வாங்கித் தேங்கப் பண்ணுதல். கேள்வியாவது, கற்றறிந்த சான்றோர்களின் நல்லுரைகளைச் செவி மடுத்துத் தன் நெஞ்சில் விடாப்பிடியாக அப்படியே தேக்கிக் கொள்ளுதல். கற்பதற்குப் பாடுபட வேண்டி யிருக்கிறது. கேட்டற்கு அது தேவையில்லை. நம்பிக்கை மாத்திரம் தேவைப்படுகிறது, கற்றவனுக்குத் தான் நூல்களில் காணும் பொருளும், கேட்கும் பொருளும் ஒத்திருப்பது கண்டு உவகை பொங்கி எழுகிறது. அத்தகைய உவகை கல்லாமல் கேட்பவனுக்கு நேர வழியில்லை. கற்றவன் கேட்பின் பின்னர் மற்றவர்கட்குந் தான் உபதேசிக்கும் ஆசிரியன் ஆதல் கூடும். கல்லாது கேட்பவனோ அங்ஙனம் ஆதற்கு இடமேயில்லை. ஆயின் இறுதிப்பயனும் வீட்டின்பம் இருவருக்கும் எய்துதற்குரியதாய் ஒத்தேயுள்ளது. கல்வியின் பயனாகப்பிறரைஉபதேசத்தால் திருத்தும் பணிநலம் கைகூடாவிடினும், கல்லாதவன் நல்லாசிரியனிடமிருந்து பெறும் கேள்வியறிவே உறுதுணையாய் அவனுக்கு ஆபத்திலே உதவுவதற் கொருகுறையுமில்லை.

கற்றவனுக்கும் கேள்வி வேண்டுவதாதலின், கற்றலிற் கேட்டலே நன்று. கற்றிலன் ஆயினும் குறையின்று. பேறு பெறுதற்குக் கேள்வியே இன்றியமையாதிருத்தலின், கல்வியினும் கேள்வியிலேயே முயல வேண்டும் என்கின்றனர் பெரியோர்.

> "கற்றிலனாயினுங் கேட்கஅஃ தொருவற்கு
> ஒற்கத்தின் ஊற்றாந் துணை"

ஒருவன் நூல்களை முறையாகக் கற்க முடியாமற் போனாலும், நல்லாசிரியர்களை அடுத்து அவர்கள் கூறும் அறிவுரைகளைச் செவிமடுத்துக் கேட்பானாக. அங்ஙனம் கேட்பது, அவனுக்கு உலகியல் வாழ்வில் மனத்தளர்ச்சி நேர்ந்த இடத்து, வழுக்குகின்ற நிலத்தில் ஊன்றுகோல் பயன்படுவது போல, மிகவும் துணையாகப் பயன்படும் என்று வள்ளுவனார் கூறுவது காண்க.

வறுமையினாலோ அறிவின்மையாலோ இடுக்கண் உற்றபோது நமக்கு நேரும் மனத்தளர்ச்சியைக் கேள்வியறிவு நீக்கித் தடுமாறாது நிலை பெறுதற்கு உதவி புரிதலின், "ஊற்றாந்துணை" என்றார். இதனையே விளக்கிக் கூறுகிறது அடுத்த திருக்குறள்.

> இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
> ஒழுக்க முடையார்வாய்ச் சொல்"

(இழுக்கல் - வழுக்குதல்)

இக்குறளில் உபதேசம் செய்பவரிடம் ஒழுக்கமுடைமையைக் கண்டே அவர் சொல்லை ஊன்று கோலாய்க் கொள்ளல் வேண்டும் என்று குறளாசிரியர்குறிப்பிட்டிருப்பது கவனித்தற்குரியது. "ஞானம் அநுட்டானமிவை நன்ருகவேயுடையனை குருவை அடைந்தக்கால்" என்கிற மணவாளமாமுனிகள் திருவாக்கு இங்கு நம் நினைவிற்கு வருகிறது.

கற்றிலனுயினும், என்னுமிடத்து உம்மை இழிவின் கண்வந்தது. வரவே கல்லாமை இழிவே என்றுக் காட்டிக் கற்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது. கற்கத் தகுதி அற்றவன் ஆனுலும் கேட்டல் வேண்டும். அக் கேள்வி இடருற்றவழி ஊன்று கோலாய்த் துணைபுரிகிற தென்கிருர் குறளாசிரியர். இங்ஙனமே கண்ணன் கீதையில் "கர்ம யோகம் முதலியவற்றைக் கற்றுத் தெரிந்துகொள்ளத் தகுதியற்றவராயினும், மெய்கண்டார் பாடே கேட்டுக் கேள்வியறிவு கொண்டு கர்ம யோகாதிகளைக் கைக்கொள்ளல் வேண்டும். அத்தகைய கேள்வியறிவு பெறும் தகுதியற்றவராயினும் கேட்டுக் கொண்டே யிருத்தல் வேண்டும். அங்ஙிலேயே அவர்கள் பாவம் நீங்கி உய்வு பெறுதற்கு உறு துணையாகிறது" என்று (13.25) அருளியிருப்பது, இங்கு இதனேடு ஒருபுடை ஒத்திருப்பது கண்டு இன்புறுக.

இராமாயணமும் பாகவதமும் :

நம்மாழ்வார் கற்றறிய வேண்டியது இது என்றும், கேட்டறிய வேண்டியது இது என்றும் பகுத்துக் காண்பிக்கிருர். இராமாயணம் கற்றறிய வேண்டிய நூல் : பாகவதம் கேட்டறிய வேண்டிய நூல் என்று அவர் கருதுகிருர். இராமபிரானைப்பற்றிக் கற்க வேண்டும், கேசவனைப்பற்றிக் கேட்க வேண்டும். "கற்பாரிராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ" என்பதும், "கேட்பார் கேசவன் கீர்த்தியல்லால் மற்றுங் கேட்பரோ?" என்பதும் அவருடைய திருவாய் மொழிகள். தன் நாட்டிலுள்ள புல்லுக்கும் எறும்புக்கும்கூட வீடளித்தவன் இராமபிரான். அவைகள் அனுமன் போல வீட்டை வேண்டாமென்று மறுக்கவில்லை. அதனையே பேற்றுக்கு வேண்டிய தகுதியாகக் கொண்டு வீடளித்தவன் இராமபிரான். இதுகற்றறிந்தும் புரிந்து கொள்ள வேண்டுவதொன்று. ஆதலின், இதனையெடுத்தியம்பும் இராமாயணம் கற்றறிய வேண்டிய நூலாயிற்று. கண்ணன் கதையோ இங்ஙனமன்றி, குறிப்பாகப் பழம் பகைவனுகிய சிசுபாலனுக்கு வீடளித்து விளங்காத தொன்ருகவிருக்கிறது. பகைமையே பேற்றுக்கு வேண்டிய தகுதியோ என்று நினைக்குமாறுள்ளது. "பிராதிகூல்யமே பரிகாரமாகத் தன்னைக் கொடுத்த அவதாரமிறே இது" (கிருஷ்ணுவதாரம்) என்பது, திருவாய்மொழி (7:5:3) பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம். பகைமையில் முதிர்ந்த சிசுபாலனுக்கு வீடளித்த வித்தகம் கற்றமாத்திரத்தில் தெரிந்துகொள்ள ஒண்ணுதது. பெரியோரிடம் கேட்டேயறிந்து கொள்ளத்தக்கதாயுள்ளது. இராமபிரான் கற்றறியத் தக்கவனுகவும், கேசவன் கேட்டறியத் தக்கவனுகவும் நம்மாழ்வார் அருளியது பொருந்துகின்றதன்ருே?

வேதமென்னும் கற்பக மரத்தின் சுவை மிகுந்தபழம்,பாகவதம்.அதனைக்கிளிகோதியுள்ளது.அப்பழத்தின் சாற்றினைப்பலகால் உலகில் சுவைத்துப் பருகுமாறு பாகவதம் அறிஞர் பெருமக்களை அழைக்கிறது. பாகவதம் பழம். அதன் சாற்றைப் பெரியோர்களே பிழிந்துதருதல் வேண்டும். நாமாகச் சாறு எடுக்கமுடியாது. பிழிந்து கொடுக்கும் சாற்றைச் செவியால் அள்ளிப் பருக வேண்டும். பருகப்படும் அச்சுவை மிகுந்த சாறே, செவிச்செல்வமாம்.

பிரணவச் செல்வம் :

பாகவதத்திலும் மிகச் சிறந்த பழம் பிரணவம். வேத சாரமனைத்தும் அதன்கண் அடங்கியுள்ளது. அதன் சுவையைப் பெரியோர்பாற் செவி மடுத்தே பருகுதல் வேண்டும். பிரணவத்தின் பொருளை உபதேசத்தாலேயன்றி வேறு வழியாலறிய இயலாது. பிரணவத்தின் பொருளையறிந்த பின்னர் வேறென்றுமறிய வேண்டுவதின்ரும். எனவே உபதேசத்தாலே பெறும் பிரணவ அறிவே, உண்மையான செவிச் செல்வம் என்பர். அறிவுச் செல்வத்தை அளித்தலின் வேதத்தையும் செல்வம் என வழங்குதல் உண்டு.

அறிவு தரும் நூலினை அறிவாகவே கொண்டனர் நம்முடைய ஆன்ருேர். வேதம்-அறிவு தருவது. பரிபாடலில் வேதத்தைப் "புலம்" (அறிவு) என்றே குறிப்பிட்டிருப்பது ஈண்டறியத் தக்கது. "புலமும் பூவனும் நாற்றமும் நீயே" (1.45) என்பது காண்க. காணவே வேதமும் செல்வமே என்றுணர்தல் எளிது. "அந்தணர் மாடு"(செல்வம்) என்ருர் திருமங்கை மன்னன். அந்த வேதச் செல்வம் அனைத்தையும் தன்னுள் அடக்கிய பிரணவம், பொன்னனணிகளைத் தன்னுள் அடக்கிய மாணிக்கப் பெட்டகம்போலப் பேணத் தகும் மாண்புடைய செல்வமாகு மன்ருே?

பிரணவ விமானம் :

இத்தகைய மாண்பு மிக்க செல்வமாம் பிரணவமே திருவரங்கத்தில் விமானமாய் அமைந்துள்ளது என்று சொல்லப்படுகிறது. "விமானம் பிரணவ வடிவமானது, வேதத்தைச் சிகரமாகக் கொண்டது, மிக்க வியப்புக்குரியது. திருவரங்கத்திற் பள்ளிகொண்டருளும் எம் பெருமான் பிரணவப்பொருளை வெளிப்படுத்துகிருன்" என்னும் பொருள் கொண்ட

> "விமாநம் ப்ரணவாகாரம்
> வேத ச்ருங்கம் மகாத்புதம்
> ஸ்ரீரங்க சாயீ பகவான்
> ப்ரணவார்த்த ப்ரகாசக"

என்னும் சுலோகம் காண்க :

பிரணவம் தன்பொருளாகிய இறைவனைக் கேட்போருக்கு அறிவுறுத்துகிறது. பிரணவ வடிவமான விமானமோ கேட்ட அப்பொருளை, நம்மெல்லோர்க்கும் கண்ணெதிரே காட்டுகிறது. காட்டவே பிரணவத்தினும், விமானம் சீரிய செல்வம் ஆகும் என்க.

"இராமானுசர் அருளிய ஸ்ரீபாடியமும் பிரணவ வடிவமானது. ஆகவே அது இரண்டாவது ஸ்ரீரங்க விமானம் போன்றது. இரண்டிலும் பரம் பொருளின் செவ்விநலம் நன்கு காணப்படுகிறது" என்று ஆன்ருேர் கூறியுள்ளதும் இங்கு நினைக்கத்தகும்.

பிரணவம் மூன்றெழுத்துக் கொண்டது. அ, உ, ம் என்னும் இம்மூவெழுத்தும் புணர்ந்து பிரணவமாகிறது. ஸ்ரீபாடியமும் முதலில் "அகில" என்று அகரத்திற் ருெடங்கி, இடையே "உக்தம்" என்று உகரத்தை உடைத்தாய், இறுதியில் "ஸகஞ்ஜஸம்" என்று "முடிந்திருத்தலின் பிரணவ வடிமானது என்பர் பெரியோர். பிரணவத்தில் சேஷித்வம் (இறைமை) தெரிகிறது. விமானத்திலோ சேஷித்வம் (சேஷ அரவு உடைமை) தெரிகிறது. சேஷித்வம் என்பது சிலேடையால் இரண்டுபொருளையும் காண்பிக்கிறது.

கேள்வியும் காட்சியும் :

மறைப்பொருளைக் கேட்டல் வேண்டும். கேட்டபொருளை மனத்திற் பொருத்தமுற இருத்துதல் வேண்டும். இருத்தியதை இடையருது நினைத்தல் வேண்டும். நினைத்ததைக் காண்டல் வேண்டும் என்று வேதம் கூறும். இவை முறையே சிரவணம், மநநம், நிதித்யாஸநம்,தரிசனம்எனப்படும். கேள்வியறிவு காட்சி அளவையாய் முதிர்தல் வேண்டும் என்பது வேதத்தின் கருத்து. வேதாந்தத்திற் கேட்கப்படும் பிரணவப் பொருள், பிரணவவிமானத்திற் காட்சி அளிப்பதாகப் பெரியோர் இன்புறப் பகர்கின்றனர். வேதாந்தத்திற் கேள்விப்பட்ட பொருள் ஸ்ரீபாடியத்தில் மனத்திருத்தப் பட்டதாம். இருத்தப்பட்ட அப்பொருள் இதயத்தாமரையில் இடையருது நினைக்கப் பட்டதாம்; நினைக்கப்பட்ட பொருளாம் அத் திருமகள் கேள்வன், ஸ்ரீரங்க விமாநத்தில் காணப்படுகின்ருனும்.

ஆக, கேள்வியறிவையளிக்கும் பிரணவத்தைவிட,காட்சியே அளிக்கும் விமானம் சிறந்த செல்வம் என்க.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஸ்ரீரங்க விமானம் உள்ள ஊராதலின், ஸ்ரீரங்கம் என்று திருவரங்க மாநகரை வழங்கி வருகின்ருேம். அங்கே செவிச் செல்வத்தைக் கட்செல்வமாகக் கண்டு களிப்போமாக!

செய்திச் சுருக்கம்

குருகுலத்தில் நீராட்டு: குருபழநியாதீனம், திருக்குறள்பீடம், குருகுலம் பாலசுந்தரப் பிள்ளையார் திருக்கோயில், குருபழநி மலைப்பழநியாண்டவர் கோவில் திருப்பணிகள் நடந்து, திருக்குட நீராட்டு அருள் விழாவும், திருக்குறள் பீடாதிபதிகளின் 10ஆம் ஆண்டு ஆட்சி விழாவும் **2—6—69** முதல் **6—6—69** வரையில் தொடர்ந்து நடந்தேறின.

திருப்போரூர் சிதம்பர சிவஞான அடிகளார், திருப்பாதிரிப் புலியூர் சிவத்திரு சுப்பிரமணிய சிவாசாரியார், திருக்கழுக்குன்றம் சாமிநாத சிவாசாரியார், தியாகராச சிவாசாரியார், முத்துக் குருக்கள் முதலியோரும், தருமபுரம் இசைமணி சாமிநாதன், சைதைத் தேவாரம் பாலசுந்தரம், திருக்கோயில் இதழாசிரியர் ந. ரா. முருகவேள், M.A.,M.O.L., ஒளியகம் ஆடலரசு, குகப்பிரியன், ஆதீனக்கவிஞர் கன்னிசாமி, செந்தமிழறிஞர் ரா. சுந்தரமூர்த்தி, புலவர் பொன்னுமுத்து, கடலூர் பாரதியார், காஞ்சி தொண்டை மண்டலாதீனப் புலவர் தணிகையரசு முதலியோரும் கலந்து கொண்டு வேள்விகள், வழிபாடுகள் இசையரங்குகள் பாராயணங்கள் விரிவுரைகள் புராணங்கள் நிகழ்த்திச் சிறப்பித்தனர்.

சென்னை, வேலூர், தஞ்சை, மதுரை முதலிய இடங்களிலுள்ள குருகுலக் கிளை நிலையங் களைச் சேர்ந்த அன்பர்களும் பெருமக்களும் வருகைபுரிந்து பங்குகொண்டனர்.

விழா நினைவாகத் தணிகையரசு, திருநாரையூர் இரட்டைமணி மாலையைத் தமது பொறுப் பில் அச்சிட்டு இலவசமாக வழங்கினர். ஆதீன முதல்வர் கொலுவீற்றிருக்கையில் ஆதீனக் கவிஞர் போற்றித் திருவிருத்தம் இயற்றி வெளியிட்டுத் துதித்தனர்.

ஆதீனச் சார்பில் பொன்னுடை போர்ப்பு, பரிசளிப்பு, அன்னம் பாலிப்பு முதலியன நடத்தி யதும், திருக்குறள் பீடாதிபதிகள் அனைவர்க்கும் திருநீறு அளித்து ஆசிவழங்கினர்கள்,

6—6—69 இரவு பிள்ளையார் வீதிவலம், அருமையான நாதசுரவாத்தியத்துடன் இனிது நிகழ்ந்து விழா நிறைவேறியது.



திருப்பெருந்துறை ஸ்ரீ ஆத்மநாத சுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழாவில், திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா, B.A., திரு. சா. கணேசன், M.L.C., முதலிய பெருமக்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தல் (28-4-69),

வடநாட்டுத் தலங்களின் யாத்திரை

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசார்ய
சுவாமிகள், காஞ்சிபுரம்.)

முன்னுரை :

அடியேன் வடநாட்டுத் தென்னாட்டு யாத்திரையைப் பலகால் செய்திருப்பதோடு, யாத்திரையைப் பற்றி நான்கு மொழிகளிலும் நூல்கள் அச்சிட்டிருந்தேன். அவற்றால் பலர் மிகமிக உபகாரம் கொண்டதாகத் தெரிவித்தும் இருந்தார்கள். அந்தப் புத்தகங்கள் இப்போது கிடைப்பதில்லை. ஸ்ரீ வைஷ்ணவ சர்வஸ்வம் என்னும் இப்புத்தகம், எப்படியும் பல பக்தர்களின் திருக்கைகளுக்கு அணியாக இருக்கும். ஆதலால், இதிலேயே வடநாட்டுத் தென்னாட்டு யாத்திரை பற்றிய செய்தியும், இங்கே தெரிவிக்கப் படுகிறது. திவ்விய தேச யாத்திரைகளில் ஆர்வம் மிக்க பக்தர்களுக்கு, இது மிகவும் உதவியும் பயனும் அளிக்கும்.

வடநாட்டில் பண்டரிபூர் பூனா பம்பாய் வழியாகச் சென்று, கல்கத்தா ஜகந்நாதம் ஸ்ரீ கூர்மம் சிம்மாசலம் கோதாவரி கிருஷ்ணா வழியாகத் திரும்புகின்ற கிரமம் ஒன்று. கிருஷ்ணா கோதாவரி சிம்மாசலம் ஸ்ரீ கூர்மம் ஜகந்நாதம் கல்கத்தா வழியாகச் சென்று, பம்பாய் வழியாகத் திரும்புகிற கிரமம் மற்றொன்று. இங்கு அடியேன் தெரிவிப்பது கல்கத்தா வழியாகச் சென்று, பம்பாய் வழியாகத் திரும்பும் கிரமம். 75 நாள் அல்லது மூன்று மாதங்களில் சுகமாக வடநாட்டுத் திருப்பதிகளின் யாத்திரையைச் செய்து முடிக்கலாம். இரண்டொரு மாதத்திலும் வசதிக்கு ஏற்றபடி முடித்தல் கூடும்.

நெல்லூர் :

சென்னைக்குச் சமீபத்தில், 110 கல் தொலைவில், உள்ளது நெல்லூர். இங்கு வட பெண்ணை யாற்றின் கரைமேல், ஸ்ரீ ரங்க நாதனுடைய சேவையை முன்னம் பெறலாம். இங்கிருந்து விஜயவாடா சேர்ந்து, கிருஷ்ணா நதியில் நீராடி, அங்கிருந்து ஆறுகல் தொலைவில் உள்ள மங்களகிரியில் பானக நரசிம்ம சுவாமியைச் சேவிக்கலாம். பின்னர் விஜயவாடா நிலையத்தில் இருந்து கோதாவரி நிலையத்தை அடைந்து, அங்கே கோதாவரி நதியில் நீராடி, சிம்மாசலம் சேரலாம்.

சிம்மாசலம் :

சிம்மாசம் என்றே இருப்புப்பாதை நிலையம் உள்ளது. வால்ட்டேர் என்னும் இடத்தில் இருந்தும் போகலாம். ஏறக்குறைய ஆயிரம் படிகள் ஏறிச் சேவிக்க வேண்டிய இந்த க்ஷேத்திரத்திற்குச் சில ஆண்டுகளாகப் பஸ் மார்க்கம் ஏற்பட்டுள்ளது. சந்நிதி மிகவும் விரிவானதாக அமைந்திருக்கின்றது. இவ்விடத்தில் உள்ள எம்பெருமானுக்கு, ஆண்டொன்றுக்கு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வருவாய் வருவதாகச் சொல்லப்படுகின்றது. அதற்குத் தக்கபடி விசேஷமானபோகங்களைக்கண்டருளுகின்றார். ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதிகாரிகள் பலர், இங்குநாள்தோறும் வந்து கிரந்த பாராயணங்கள் செய்து, தேவஸ்தான சன்மானம் பெறுகின்றார்கள். இத்தலத்து எம்பெருமானுடைய திருமேனிச் சேவை, வருஷத்தில் ஒருநாள் மட்டுமே பக்தர்களுக்குக் கிடைப்பதாகும். மற்ற நாட்களில் சந்தனக்காப்பினால் திருமேனி முழுவதும் கவசம் அணியப் பெற்றிருக்கும். "தெழிகுரல் அருவித் திருவேங்கடத்திற்" போலவே, இங்கும் அருவிநீர் வீழ்ச்சி சிறப்பாக இருப்பதனால், தீர்த்த சௌகரியத்திற்குக் குறையில்லை. இத்தலத்தில் கீழே தேவஸ்தானத்தின் சார்பில்,

சம்ஸ்கிருத வித்தியாப் பிரவசனங்கள் மிகுதியாக நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீகூர்மம் :

சிம்மாசலத்தில் இருந்து ஸ்ரீகூர்ம க்ஷேத்திரம். இது ஸ்ரீகாகுலம் ரோட் என்ற நிலையத்தில் இறங்கி, ஸ்ரீகாகுலம் வழியாய்ப் பதினெட்டாவது கல்லில், பஸ்மார்க்கமாக ஸ்ரீகூர்மம் அடையத் தக்கது. இங்கு அழகிய அக்கிரகாரம் உண்டு. ஸ்ரீகூர்மநாதனுடைய சந்நிதி விசாலமாகவும், மிக்க அழகுள்ள தாகவும் அமைந்துள்ளது. சந்நிதியைச் சார்ந்து விளங்கும் ஏரிபோன்ற தடாகம் கண்ட காட்சியிலேயே, சகல தாபங்களையும் ஆற்றக் கூடியது. இத்தலத்தில் எம்பெருமானுர் சில காலம் எழுந்தருளியிருந்து, பரிஷ்காரங்கள் செய்தருளினதாகச் சொல்லப்படுகின்றது. இஃது உண்மையானதென்றே நம்புவதற்கு இடம் உள்ளது. நித்திய ஆராதனம், நித்திய உற்சவம் முதலியவைகள், இங்கு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஸ்ரீகாகுலம் ரோட் என்னும் இடத்திற்கு அமதாலவலசா என்று பெயர். இங்கு நிலையத்திற்கு மிக அருகில், ஸ்ரீ வேங்கடரமணசுவாமி சந்நிதி ஒன்று நவீன காலத்தில் ஏற்பட்டிருக்கின்றது. மிகவும் அழகாக அமைந்திருக்கும் இந்த சந்நிதியில் இருப்புப் பாதை வண்டியை எதிர்நோக்கிச் சௌகரியமாகத் தங்கியிருக்கலாம். இங்கே தீர்த்தவசதி நன்ருகஉண்டு.

ஸ்ரீஜகந்நாதம் :

இதுவேபூரிஜகந்நாதம் எனப்படும்.ஸ்ரீகூர்மத்தில் இருந்து பூரி நிலையம் சேர்ந்து, அருகில் உள்ள இந்த க்ஷேத்திரம் சேரலாம். மிக்க புராதனமும், அதிவிசாலமும் ஆன மந்திரம். இங்கு ஸ்ரீவைஷ்ணவ மடங்கள் இருபதுக்கு மேல் உண்டு. சந்நிதிக்கு அருகில், எமார் மடம், திரிமாலீமடம், உத்தரபார்சுவமடம் முதலியன தங்குவதற்குச் சௌகரியம் வாய்ந்தவை. ஊரைச் சுற்றித் தீர்த்த விசேடங்கள் பல உண்டு.

கல்கத்தா நகரம் :

ஸ்ரீஜெகந்நாதத்தில் இருந்து கல்கத்தா நகரம் (Howra) சேர்வது. க்ஷேத்திர தீர்த்த யாத்திரை ரசிகர்களுக்கு, இந்நகரில் கர்த்தவ்வியம் ஒன்றும் இல்லையாயினும், பார்க்கத் தகுந்த மிகப் பெரியநகரமாக இருப்பதாலும், இதைக் கடந்துதான் மேலேயாத்திரை செல்ல வேண்டியிருப்பதனுலும், இங்கே இரண்டொரு நாள் தங்கியிருக்கலாம். இங்கே நிலையத்தின் அருகே கங்கை பெருகுகின்றதெனினும், அது வைதிகர்கள் உகக்கும் சுத்தகங்கை என்னப் பொருத்தம் இல்லை. இந்த நதியின் கரைக்கு 'ஜகந்நாத கட்டம்' என்று பெயர். இங்கே பலதேவஜீ மந்திரம் என்கிறகோயில், நூதன பரிஷ்காரங்கள் பல செய்யப்பட்டு, வாசயோக்கியமாக விளங்குகின்றது. ஆனுலும் 5, 6 கல்தொலைவுக்கு அப்பால் உள்ள மிக விசாலமான லட்சுமி நாராயண மந்திரத்தில் தங்கலாம். இந்தச் சந்நிதி சமீப காலத்தில் ஏற்பட்டது. ஸ்ரீவைஷ்ணவ யாத்திரிகர்கள் மிகவும் வசதியாகத் தங்கி இருப்பதற்கு உரியது. சமீபத்தில் தீர்த்த வசதியும் உண்டு.

கயா க்ஷேத்திரம் :

கல்கத்தாவிலிருந்து கயைக்கு வந்துசேர்வது. வடதேச யாத்திரை செய்பவர்கள் இவ்விடத்தையும் காசியையும் பதரிகாச்சிரமத்தையுமே முக்கிய லட்சியமாகக் கொள்ளுவர்கள் என்பதைப்பற்றி நாம் எழுதவேணுமோ? கயாசிராத்தத்தை இங்கு நடத்தி வைக்கத் தென்னுட்டுப் புரோகிதர்கள் விசேடமாக இங்குக் குடிகொண்டிருக்கின்றனர். அவர்களே தங்கும் வசதிகள் செய்து கொடுக்கிருர்கள். தருமசாலைகளுமுண்டு. பல்குநீ நதிக்கரையில் ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் காதி அனந்தாசார்ய சுவாமியினுடைய ஸ்தானம் (ஸ்ரீ ராமாநுஜமடம்) மிகவும் சௌகரியமாக அமைந்திருக்கின்றது. பல்குநீ நதியில் நிர்மலமான தீர்த்தம் சிறு பிரவாகமாகப் பெருகிக் கொண்டிருக்கும். நதிக்கரையில் கயாதீசனுடைய சந்நிதி விசாலமாகவும் ரமணீயமாகவும் விளங்குகின்றது. இங்கே தான் விஷ்ணு பாதம்.

காசி க்ஷேத்திரம் :

கயையிலிருந்து காசிக்கு வந்து சேர்வது. இந்நகரின் பெருமையைப் பற்றியோ, இங்குள்ள பட்டு பீதாம்பரக் கடைகளின் சிறப்பைப் பற்றியோ அபூர்வமாகத் தெரிவிக்க வேண்டிய துண்டோ? எல்லாவகைச் சிறப்புகளிலும் நிகரற்று விளங்கும் இந்நகரில் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயஸ்தர்கள் அருமைப் பட்டிருக்கிருர்கள் என்பதொன்றே குறை. இதர மதத்தவர்களில் பரிகணித வித்வான்கள் என்று மதிக்கக்கூடியவர்கள் எண்ணிறந்துள்ளார்கள். வித்தியாலயங்களும் அபரிமிதங்கள். பதினுன்கு வித்தைகளுக்கும் (அல்லது

அறுபத்து நான்கு கலைகளுக்கும் பிரபல பிரசாரம் காணவேணுமானுல், அது இம் மகாநகரமொன்றில்தான் காணலாகும். கங்கை சுப்பிரசந்நமாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. யாத்திரிகர்கள் தங்குவதற்குக் கங்கைக் கரையிலேயே அநேக இடங்கள் உண்டு. நாகபூர் போசலாகாட்டில் போஸலா மந்திரம் எல்லா வகையாலும் ரமணீயமானது.

பிரயாக க்ஷேத்திரம் :

காசியிலிருந்து பிரயாகக்ஷேத்திரம் (Allahabad) வருவது. இங்குத் திரிவேணீ ஸ்நானம் விசேஷம் என்பது உலகப்புகழ் பெற்றது. "கங்கா யமுநயோர் மத்யே யத்ர குப்தா சரஸ்வதீ" என்கிற பிரயாகமகாத்மிய வசனத்தின்படி கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் கூடுமிடம் ஆதலால் திரிவேணீ சங்கமம் எனப்படுகிறது. கங்கை யமுனைகளின் சேர்க்கை பிரத்தியட்சமாகத் தெரிகிறது. சரஸ்வதி மட்டும் குப்தவாகினி. வடநாட்டில் இந்தத் தலத்திற்கு விசேஷ மாகாத்மியம் சொல்லப்படுகிறது. பரத்துவாஜ மகரிஷியின் ஆச்சிரமமும் இங்குள்ளது. தாரா கஞ்ஜ் என்னும் இடம் இவ்விடத்தில் கங்கைக்கு சந்நிஹிதம் ஆதலால் இங்கே தங்குவது. இங்குத் திரிதண்டி மடம் என்னுமிடம், ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் புகலிடம், தர்மசாலைகளும் பலவுண்டு. பரமார்த்த பூஷண கோவிந்தாச்சாரி யென்பவர் ஸ்ரீவைஷ்ணவர்களின் வசதிக்காக மிக விசாலமான மந்திரம் ஒன்று இங்கே அமைத்திருக்கிருர். சுகமாகத் தங்கலாம். கீடகஞ்ஜில் நம்மவர்களின் வேணீ மாதவ மந்திரமுள்ளது.

ரீவா நகரம் :

இது யாத்திரைத் தலத்தில் சேர்ந்ததன்று ஆகிலும், விருப்பமுள்ளவர்கள் சென்று வரலாம். இங்கு லக்ஷ்மணபாக் என்னும் விசாலரமணீய மஹோத்யானத்தில் ஸ்ரீவைஷ்ணவ பீடாதிபதியாய் விலக்ஷண சம்பத்துடன் விளங்கிவரும் மகாத்மாவுளர். தமஸாநதியும் இங்கே பிரவகிக்கின்றது. சம்ஸ்கிருத கலாசாலையும் உண்டு.

சித்திரகூடம் :

அடுத்தபடியாகச் சித்திரகூட க்ஷேத்திரம் சேர்வது. "ஸ—பகச் சித்ரகூடோஸௌ கிரிராஜோபமோ கிரி யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த: குபேர இவ நந்தநே" என்று ஸ்ரீராமாயண பிரசித்தமான அதிசயம், இன்னமும் பிரத்தியட்சமாகக் காணலாம் போல இராநின்றது. இவ்விடத்து சந்நிவேசம் பரமபாவநம், பரம ரமணீயம் என்னும் அத்தனை. "ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா" என்றதற்கு முக்கியலட்சியமாக மந்தாகிநி பிரவகிக்கும் அழகும், பிரதக்ஷிணர்ஹமாகப் பர்வதராஜம் பிரகாசிக்கும் அழகும், கரையிலே சுகவாஸ யோக்கியமாகத் தர்மசாலைகள் திகழும் அழகும், மிக மிக ஆகர்ஷகமாய் இருக்கும். இவ்விடத்தில்எத்தனை நாள் வசித்தாலும், திருப்தியே பிறவாது. அடியேன் 17 தடவை சேவித்த தலம்இது.

திருவயோத்யை :

சித்திரகூடத்திலிருந்து திருவயோத்தியை சேர்வது. சப்த புண்ய புரிகளைப் பரிகணனை செய்யும்போது "அயோத்யா மதுரா மாயா" என்று இத்தலமேயன்றே முற்பட்டிருக்கின்றது. ஸ்ரீவைகுண்டத்தின் ஒரு கண்டமே, மண்ணுலகில் இந்நகராக வந்து தோன்றியதாகச் சொல்லப்படுமதில் அதிவாத சங்கையே யில்லை. இங்கு அநுபவிக்கத்தக்க தலங்களாகஅனேக இடங்கள் காட்டப்படுகின்றன. திரேதாயுகம் எங்கே! கலியுகம் எங்கே! என்று சிலர் சொல்ல நேர்ந்தாலும், அந்தந்தத் தல விசேஷங்களைக் காணும்போது ஆஸ்திகர்களுக்கு மகத்தான பிரதிபத்தியே உண்டாகிறது. ஸந்தத பிரவாகினியான சரயூநதியின் கரையிலே சத்குரு சதனம் என்னும் இடத்தில் மிகச் சௌகரியமாகத் தங்கியிருக்கலாம். கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீமத் பார்த்தசாரதி ஐயங்கார் சுவாமியும், அவருடைய தேவியாரும் இத்தலத்தில் விலட்சணமாக அமைத்திருக்கின்ற சக்கிரவர்த்தித் திருமகனுர் சந்நிதி தென்னுட்டினர்க்குப் புகலிடமாகவுள்ளது. இந்தச் சந்நிதிக்கு அம்மாஜி மந்திரம் என்றே பிரசித்தி.

கான்பூர் :

திருவயோத்தியையிலிருந்து கர்ணபுரி யென்னுமிடம் சேர்வது. இது மிகப்பெரிய நகரம். சுத்த கங்கையில் குடைந்தாடவே இவ்விடம் வருவார்கள். இவ்விடத்தில் ஸ்ரீவைஷ்ணவ மந்திரங்கள் பலவுள்ளன. அவற்றுள் பிரயாகநாராயண (திவாரீ) மந்திரம் மிகப்பெரியது. கங்கைக்குச் சிறிது சமீபத்திலுள்ளது. இந்த மந்திரம் பெரும் செல்வச்

சிறப்புடையவர்களான ஸ்ரீவைஷ்ணவோத்த மர்களால் பரிபாலிக்கப்பட்டு வருவதால் இங்கு ஸ்ரீவைஷ்ணவ யாத்திரிகளுக்கு விசேஷித்து ஆதரவு அளிக்கப்படுகிறது. நிலையத்துக்குச் சமீபத்தில் பண்டித ஹரிநாராயண சுவாமியின் மந்திரமும் வாசயோக்கியமானதே.

நைமிசாரண்யம் :

கான்பூரிலிருந்து பாலாமு சந்திப்பு வழியாக நைமிசாரணியம் வந்து சேர்வது. இந்த க்ஷேத் திரத்தின் மாகாத்மியம்அபரிமிதமாகச் சொல் லப்படுகிறது. நான்முகக்கடவுள் பகவானை நேரே காண நெடுங்காலம் தவம்புரிய அரண்ய ரூபியாக எம்பெருமான் சேவை சாதித்ததாக வும், இதில் திருப்தி பெருமல் மறுபடியும் தவம்புரியவேதீர்த்தரூபியாகச் சேவைசாதித்த தாகவும் சொல்லப்படுகிறது. தீர்த்த ரூபியாக ஸேவை சாதித்தஇடம் புஷ்கரம் என்றும், அரண்யரூபியாகச் சேவை சாதித்தஇடம் நைமிசாரண்யம் என்றும் பிரசித்தமானது.

நைமிசாரணியம் என்று பிரசித்தமான இவ் வாரண்யத்திலேயே பல மகரிஷிகள் நெடுங் காலம் வசித்துப் பல புராணங்களை இயற்றின தாகத் தெரியவருகிறது. இங்கே கோமதீ நதி பிரவகிக்கின்றது. இத்தலத்திற்குப் பதி கம் பாடியருளின திருமங்கையாழ்வார்,பாசுரந் தோறும் "நைமிசாரணியத்துள் எந்தாய்" என்று பாடியிருக்கையாலே இங்கே ஒரு சந் நிதியிருப்பது போலவும்,அந்த சந்நிதியிலுள்ள அர்ச்சா மூர்த்தியையே ஆழ்வார் மங்களா சாசனம் செய்திருப்பது போலவும், பலர் நினைப்பதுண்டு. உண்மை அப்படியில்லை. அரண்ய ரூபியான பகவானையே 'நைமிசா ரணியத்துள் எந்தாய்' என்று விளித்துப் பாடினபடி. சமீபகாலத்தில் இவ்விடத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை சுவாமி திரு வடி சம்பந்திகளான உத்தராதிவைஷ்ணவர் களால் ஒரு சிறிய ஆலயம் நிர்மாணம் செய் யப்பட்டிருக்கிறது. அதில் நம்மவர்களுக்கு வசதி சௌகரியமுண்டு. வேறு தருமசாலை களும் உண்டு. இத்தலம் மிகவும் விஸ்தார மான அரண்யம். அங்கெல்லாம் சஞ்சரித்து வருவதுதான் நைமிசாரண்ய ஸேவை யெனப் படும். இயன்ற அளவு கோமதீ நதியின் தீரம் வரையில் சஞ்சரித்து வரலாம்.

அரித்துவாரம் :

நைமிசாரணியத்திலிருந்து அரித்துவாரம் சேர்வது. சப்த புண்ணிய புரிகளைக் கணக் கிடுகின்ற "அயோத்யா மதுரா மாயா" இத்தியாதி சுலோகத்தில் 'மாயா' என்றது அரித்துவாரத்தையே என்பர். அரித்துவார சமீபத்தில் மாயா என்று தனியே ஒரு க்ஷேத் திரம் உள்ளது என்பாரும் உளர். இத் தலம் நாளடைவில் வெகு ரமணீயமான நகரமாய் விட்டது. உண்மையில் வட நாட்டில் இவ் வளவு ரமணீயமும் பாவனமுமான க்ஷேத்திரம் வேறில்லை யென்று சொல்லலாம். ஒரு நாளும் வற்றாத பிரவாகமுடைய கங்கை இங்கே நிர் மலமாகப் பெருகுகின்றது. அதன் கரையிலே தேவேந்திர பவனம் போன்ற பல மகாபவ னங்கள் வரிசையாக அமைக்கப்பட்டிருக் கின்றன. வேறு பல வீதிகளும் மாடமாளிகை களும் மலிந்து விளங்குகின்றன. சென்னை உப்பட்டூர் ஆழ்வார் செட்டியாருடைய மிகப் பெரிய தர்மசாலை 'மதராஸீ தர்மசாலை' என்று வழங்கப்படுகிறது. தென்னுட்டினர்க்குப் பெரும்பாலும் இங்கே வசதி சௌகரியமுள் ளது. இதனருகிலுள்ள பிர்லா ஹவுஸ் என் னும் விசாலமான சுத்தர மந்திரத்திலும் யாத் திரிகர்கள் தங்கலாம்.

ஸ்ரீபதரிகாச்சிரம யாத்திரை :

மூலஸ்தானமாகிய அரித்துவாரத்தில் இருந்து 193-வது மைலில் உள்ளது, ஸ்ரீபதரிகாச் சிரமம். இடையில் பதினைன்காவது மைலி லுள்ளது இருஷிகேசக்ஷேத்திரம். காலால் நடந்தே வதரிவணங்கச் செல்பவர்கள், இங் கிருந்தே நடந்துசெல்ல ஆரம்பிக்கின்றுர்கள். ஆனுல்,இங்கிருந்து வதரியளவும் பஸ் போக்கு வரத்து ஏற்பட்டுப் பல ஆண்டுகள் ஆயின. பஸ்ஸில் போவதைக் காட்டிலும் நடந்து செல்வதே நன்று. வழி முழுதும் அநேகமாய்க் கங்கையைக் கண்டுகொண்டே போவோமா னுலும் அதன் தீர்த்தம் நமக்கு எளிதாகாது. சிலசில இடங்களில் மாத்திரம் கங்கையில்

இறங்க வழி கிடைக்கும். மற்ற இடங்களி லெங்கும் மலையருவி நீர்ப்பெருக்கு வாய்த் திருக்கும் அழகு வாய்கொண்டு வருணிக்க முடியாதது. ஸ்நாநபாநாதிகளுக்கு முற்றிலும் இந்தத் தாரையே உபயோகமாகும். கண்ட காட்சியிலேயே சகல தாபங்களும் ஆறும்.

வழியில் எங்கு சிரமம் தோன்றினாலும் அங்குத் தங்கியிருக்க வசதிகள் உண்டு. சில இடங்களில் இரண்டுமூன்று மைல் தூரத்தி லும் சில இடங்களில் நாலைந்து மைல் தூரத் திலும் தங்குமிடங்கள் அழகாக ஏற்பட்டிருக் கின்றன. அவை சட்டிகளென வழங்கப் பெறும். பெரும்பாலும் மேல்மாடமுள்ள மண் மாளிகைகளாகவே தென்படும். ஆங்காங்கு பலசரக்கு மளிகைளுமுண்டு. தளிகைக்குப் பாத்திர வகைகளும் அன்புடன் அளிக்கின் றார்கள். சில விடங்களில் புளி தயிர் காய்கறி கிடைப்பதரிது.

இருஷிகேசத்திலிருந்து நாற்பத்தைந்தாவது மைலில் தேவப்பிரயாகம் என்றுள்ளது. இது பாகீரதிக்கும் அலகநந்தாவுக்கும் சங்கமம் ஆகுமிடம். பெரியாழ்வார் திருமொழியில் (4—7) *தங்கையை மூக்குந் தமையனைத் தலையும்* என்கிற திருமொழியில் மங்களாசா சனம் செய்துள்ள கண்டமென்னுங் கடிநகர் இத்தலமே என்று சொல்லுகிறார்கள். இங் கிருந்து இருபதாவது மைலிலுள்ளது கீர்த்தி நகர். அங்கிருந்து மூன்று மைல் தூரத்தி லுள்ளது ஸ்ரீநகர். இங்கிருந்து 110 மைலி லுள்ளது ஸ்ரீபதரிகாச்சிரமம். பிப்பல்கோடி யிலிருந்து கருடகங்கா, பாதாளகங்கா வழி யாய் ஜோஸீமட் சேர்வது. ஜோஸீமட் என் கிற இடம் திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற (பிரிதி) என்கிற திவ்விய தேசம் என்கிறார்கள்.

ஜோஸீமட்டிலிருந்து 19 மைல் தூரத்தி லுள்ளது ஸ்ரீபதரி காச்சிரமம். ஊருக்குப் பத்ரீ நாத் என்று பெயர். இது மிகச் சிறிய ஊரே. கங்கையின் கரையிலேயே ஸ்ரீபதரீ நாதன் திவ்விய சந்நிதியுள்ளது. சந்நிதி மிகப் பெரிதுமன்று; மிகச் சிறிதுமன்று. ஸ்ரீ நர நார ணனு யுலகத்து அறநூல் சிங்காமை விரித் தவன் எம்பெருமான் என்று திருமங்கையாழ் வாரும், "தானே சிஷ்யனுமாய் ஆசாரியனு மாய் நின்று திருமந்திரத்தை வெளியிட்டரு ளினன்" என்று பிள்ளை லோகாசார்யரும், "திருமந்திரத்தை ஸ்ரீபதரி காச்சிரமத்திலே பிரகாசிப்பித்தான்" என்று மணவாளமாமுனி களும் அருளிச் செய்தபடியே, எம்பெருமான் நாராயண மூர்த்தியாய் விபவாவதாரஞ் செய் தருளின இடமென்கிற ஒப்புயர்வற்ற ஏற்றம் பெற்றது இந்தத் திவ்வியதேசம். இப்பெருமை பற்றியே இத்தலம் உத்தேச்யம். சந்நிதி யில் ஸ்ரீமத் நாராயணன் எழுந்தருளி யிருக் கிறார். சாளக்கிராம சிலாமயமாய், பத்மாஸந பந்தமுள்ளதாய், யோக முத்திரையோடு கூடின இரண்டு திருக்கைகளை யுடையதான திருமூர்த்தி (ஸ்ரீமத் நாராயணன்) நடுவில் ஸேவை சாதிப்பது. இடப்புறத்தில் நரநாரா யண சிலாமூர்த்திகள். வலப்புறத்தில் கருத் மான், குபேரன்.

மலைநாட்டு நம்பூதிரிகள் திருவாராதனம் சமர்ப்பிக்கிறார்கள். அர்ச்சகர்களை 'ராவல்' என்று இங்கு வழங்குவர். தினப்படியாய்க் காலையில் திருமஞ்சனம் வெகு விபவமாக நடைபெறுகின்றது. நூற்றெரு ரூபாய் கட் டணம் செலுத்துமவர்கள் திருமஞ்சனம் உட் பட ஒருவேளை உபயக்காரர்கள் ஆவர். அவர்கள் அருகிலிருந்து திருமேனியைப் பரி பூர்த்தியாகச் சேவித்து மற்றெல்லாமும் சேவித்து மகிழப் பிராப்த மாகிறது. செவிக் கினிய வேத கோஷத்துடனும், ஸ்தோத்திரரத் தினம் முதலிய பல தோத்திரங்களின் பாரா யணங்களுடனும், சகலோபசார சமேதமாக நடைபெறுகின்ற திருமஞ்சனம் அலங்கார வகைதிருவாராதனம் முதலியவை மனோஹரங் களாய் இருக்கின்றன. ஐந்து ரூபாய் செலுத் தினால் ஸஹஸ்ரநாமார்ச்சனை. ஒருரூபாய்க்கு அஷ்டோத்தர சதநாமார்ச்சனை. ஒருரூபாய்க்கு ஹார்த்தி என்று இப்படிநிபந்தனைகள் ஏற்பட் டிருக்கின்றன. பனியின் பாதை இங்கு அதிகமேயாதலால் உடலுக்குப் போதுமான கவசங்கள் இருக்கவேண்டும். அர்ச்சகர் முத லான சந்நிதி கைங்கர்ய பரர்களுங்கூட நாலைந்து சொக்காய்கள் அணிந்தே கைங்கரி யங்களை நடத்தி வருகிறார்கள். உத்தரீயமும்

போர்த்துக்கொள்ளாமல் உலாவுகின்ற மகாத்மாக்களும் சிலருளர்.

இங்குத் தீர்த்தமாடுவதற்கு எம்பெருமான் தானே பரம கிருபையுடன் பண்ணிவைத்திருக்கிற சௌகரியம் அற்புதமானது. சந்நிதி எதிரில் தப்த குண்டம்என்று ஒரு சிறு குளம் உள்ளது. அதில் இரவும் பகலும் ஓய்வின்றி உஷ்ண தீர்த்த தாரை அமோகமாகப் பெருகிக் கொண்டே இராநின்றது. இந்தத் தீர்த்தம் பெருமானுடைய திருவடி வாரத்தில் நின்றுமேபெருகுவதாகத் தோன்றுகிறது.அடியார்களின் பாங்குக்காக அக்கினி பகவானுக்கு ஸ்ரீமந் நாராயணன் தானே கட்டளையிட்டு இங்ஙனே நடத்தி வருகிறபடி.

இந்ததப்தகுண்டத்தில்அமிழ்ந்தே அனைவரும் நீராடுகிறார்கள். பின்மாலை நான்குமணி முதலாகவே நீராடுவதும், பெருமானைச் சேவிப்பதுமான காட்சி பரமபுனிதம். இந்த தப்த குண்டம் அங்கு இல்லையென்றால் ஒருவரும் ஒருநாளும் அங்கு வாசம் செய்ய இயலாது. தேகம் பொறுக்கும் அளவான சூடு பொருந்திய இந்தத் தீர்த்தத்தின் பக்கத்திலேயே, தேகம் பொறுக்கமுடியாத குளிர்ச்சி வாய்ந்த கங்கையும் ஆச்சரியமாகப் பெருகுகின்றது. அதில் குடைந்தாடுவார் மிகச் சிலரே.

சந்நிதியின் சமீபத்திலேயே பிரம்மகபாலம் உள்ளது. அதில் பிண்டப்பிரதான முறைகளும் நடைபெற்று வருகின்றன. மலையின் ஒரு சிறு பாறையே கபாலத்தின்ஆகிருதியாகக் காண்கிறது. இத்தலத்தில் முக்கியமான தீர்த்தங்கள் ஐந்து. தப்த குண்டம், நாரத குண்டம், கூர்மதாரா, பிரகலாத தாரா, ரிஷி கங்கா என்பவை. கூர்மதாரையின் தீர்த்தமே பெரும்பாலும் இவ்விடத்தில் அன்னபானங்களுக்குக் கொள்ளப்படுகின்றது. தப்த குண்ட தீர்த்தம் வாயினுட் செல்லாது. நியதமாக வதரியில் வாழ்பவர்கள் பிரகலாததாரையில் நீராடுகிறார்கள். இது ஆரோக்யம் அளிப்பதாம். இந்த தீர்த்தம் அநுஷ்ணசீதம்.

தேவப்பிரயாகையிலுள்ள சாத்திரிகளே இங்கும் தீர்த்த புரோகிதராய் ஸ்ரீவைஷ்ணவ அப்யாகதர்களுக்கு இடமளித்து சௌகரியங்கள் செய்து கொடுக்கிறார்கள். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி (ஜகத் ப்ரஸித்தவைபவரான) ஸ்ரீமந்நாராயண ராமாநுஜஜீயர் சுவாமிகளால் பிரதிஷ்டாபிதமான எம்பெருமானர் சந்நிதியே இங்கு ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் புகலிடம். இனி அரித்துவாரம் திரும்புவது.

(தொடரும்)

செய்திச் சுருக்கம்

சம்ப்ரோட்சண மகோத்சவம்: ஸ்ரீஅஹோபிலமடம் 44-வதுபட்டம் ஸ்ரீஅழகியசிங்கர் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மகாதேசிகனால், திருவள்ளூர் ஹ்ருத்தாபநாசினி புஷ்கரிணியில் நீராழி மண்டபத்தைச் சுற்றிப் புதிதாக அமைக்கப்பெற்றுவந்த புஷ்கரிணி கைங்கர்யம் பூர்த்தியாகி, வைகாசி மாதம் 31ஆம் தேதி (13—6—69) வெள்ளிக்கிழமையன்று காலை 9–45க்குத் தீர்த்தத் சம்ப்ரோட்சண மகோத்சவம் நடைபெற்றது. பக்தகோடிகள் திரளாக வந்திருந்து, புனிதநீராடி, கனகவல்லி சமேத ஸ்ரீவீரராகவனைச் சேவித்து, ஸ்ரீ அழகிய சிங்கரின் அருளைப் பெற்று மகிழ்ந்து இன்புற்றனர்.

—ஆசிரியர்.